டில்லி சுல்தானியம்ஒரு மதவாத அரசாகும் (சுல்தானியத்தின் நிர்வாகம் இஸ்லாம் மதக் கொள்கைகளின் அடிப் படையில் அமைக்கப்பட்டது. உலாமா (Ulema) க்களும். பழைமைவாத ன் முஸ்லீம் அடிப்படை வாதிகளும் சுல்தானியத்தில் உயர்நிலையில் இருந்து வந்தனர். சுல்தானின் கொள்கைகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். முஸ்லீம் ஆட்சியாளர்களிடமிருந்து எந்த சலுகைகளையும் பெறாத இந்துக்கள் அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. மேலும் சுல்தானியர்களின் மதசகிப்பின்மையும் இந்துக்களை கோபமடையச் செய்தது. இந்துக் கோவில்களை இடித்தது. விக்கிர "! கங்களை உடைத்தது போன்ற வெறிச் செயல்களால் இந்துக்கள் மனம் புண்பட்டனர். மேலும் இந்துக்களை மத மாற்றம் செய்ய ஆட்சியாளர்கள் செய்த அராஜகச் செயல்களால் இந்துக்கள் பெரிதும் துன்பமடைந்தனர்.

ஜசியா வரி.யாத்ரீகர்கள் வரி ஆகியவற்றால் துயரமடைந்த இந்துக்கள சுல்தானியத்திற்கெதிரான நடவடிக்கைகளில் இறங்கிளர். இது டில்லி சுல்தானியத்தின் விழ்ச்சிக்கு வழி வகுந்தது.

**பொருளாதாரக் காரணங்கள்**

*டில்லி சுல்தானியத்தின் பொருளாதாரநிலை ஒரு* வலிமையான அடிப்படையில் அமையவில்லை. தங்களது படையெடுப்புகளினாலும். கோவில்களைக் கொள்ளையடித்ததாலும் ஏராளமான செல்வத்தைக் குவித்து வைத்திருந்தனர் ஆட்சியாளர்கள் ஆனால் அதே சமயத்தில் படை நிர்வாகத்திற்கும். மங்கோலியப் படையெடுப்புகளைத் தடுப்பதற்கும் அதிக அளவில் பணம் செலவாகியது. முகமது பின் துக்ளக்கின் கொள்கை களினால் சுல்தானியத்தின் கஜானா காலியாகியது. வலிமையற்ற பொருளாதார அமைப்பைக் கொண்ட எந்த ஆட்சியும்நீடிக்க முடியாது. மேலும் அடிமைகளை வைத்துப் பராமரிப்பதற்கும் அதிக பணம் செலவு செய்தனர். பிரபுக்களும். அமீர்களும் தேசிய வருமானத்தில் பெரும்பகுதியை சுருட்டி விட்டனர். எனவே வரவுக்கு அதிகமாக செலவு ஏற்பட்டது . நிதி நிலையைச் சீர்படுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. வரி விதிப்பு முறையிலும் சீர்கேடுகள் காணப்பட்டது. முஸ்லீம்கள் அதிக அளவில் வரிவிலக்குகளும். வரிச்சலுகைகளும் பெற்றனர் . இவ்விதமான பொருளாதாரச் சீர்கேடுகளால் டில்லி சுலதானியம் வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு டில்லி சுல்தானியம் அரசியல். பொருளாதர. சமுதாயச் சீர்கேடுகளால் வீழ்ச்சியடைந்தது. சுமார் 320 ஆண்டுகள் ஆட்சி செய்த சுல்தான்கள் இந்து மக்களின் அன்பைப் பெற முடியவில்லை. திறமையற்ற நிர்வாகமும். வலிமையற்ற படையும் சுல்தானியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமானது. 1526-ல் பாபர் லோடி வம்சத்தின் கடைசி சுல்தான் இப்ராகிம் லோடியை பானிபட் போர்களத்தில் தோற்கடித்து டில்லி சுல்தானியத்தின் ஆட்சிக்கு முடிவு கட்டினார்!

**சுல்தானியர் கால ஆட்சி முறை**

டில்லி சுல்தானியரின் ஆட்சி கடவுள் சார்புடையதாகவே இருந்தது. அரசு தனக்கென்று இஸ்லாமிய சமயத்தையே தேசிய சமயமாக வைத்துக் கொண்டிருந்தது. அரசாங்கமும் மதமும் தனித்தனியாக இயங்காமல் இரண்டும் ஒன்றாகவே இணைந்திருந்தன குரான் கோட்பாடுகளே நாட்டின் உயர் சட்டமாக இருந்தது. சமய ஞானிகளான உலாமாக்கள் (Ulama) அதன் காவலர்களாகவும் விளக்க உரையாளர் களாகவும் விளங்கினர். இந்த டில்லி சுல்தானிய அரசு இந்தியாவை உருவ வழிபாட்டிலிருந்து ஒரே கடவுளாகிய அல்லா வழிபாட்டிற்கு மாற்று வதையே (from dar-ul-harb to dar-ul Islam) அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**சுல்தான்:**

உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமியர்களின் சமய தலைவராக முஸ்லீம் மன்னரே இருந்து வந்தார். அவர்தான் காலிப் அல்லது கலிபா (Cal iph) என்று அழைக்கப்பட்டார். அந்த கலிபாவின் பிரதிநிதிதான் சுல்தான் எனவே கொள்கை அளவில் சுல்தாள் கலிபாவிற்குக் கட்டுப்பட்டே இருந்தார். கலிபாவிட மிருந்தே ஆட்சி சின்னங்களைப் பெற்று வந்தார். தம்மை காலிபின் பிரதிநிதி என்றும் தளபதி என்றும் நாணயங்களில் குறிப்பிட்டுக்கொண்டார் ஆனால்நடைமுறையில் முழுசுதந்திரத்துடனும். தனது விருப்பப்படியுமே ஆண்டார் தனது அரசைப் பொறுத்த அளவில் 'போப்பாகவும். சீசராகவும் நிகழ்ந்தார் கடவுளின் நிழவாக. பிரதிநிதியாக நம்மைக் கருதிக் கொண்டார். உயர் நிர்வாக அதிகாரம். நீதித்துரை தலைமை. படைத்தலைமை அனைத்தும் அவர் கரங்களிலே இருந்தது. சுல்தான் ஒரு ராணுவ சர்வாதிகாரி போலவே ஆட்சி புரிந்தார்.

டில்லியில் சுல்தானாக அரசாட்சியை ஏற்கும் உரிமை எந்த ஒரு சட்டத்தினாலும் சரியாக வரையறுக்கப்படவில்லை. வாரிசு நிர்ணயம் செய்வதில் வலுவுள்ள துருக்கியப் பிரபுக்களே பங்கு பெற்றனர். பொதுவாக நோக்கும் பொழுது அடுத்த சுல்தானாக வரும் வாய்ப்பு காலஞ்சென்ற சுல்தானின் குடும்பத்தில் இருப்பவர்களுக்கே ஏற்படுவது வழக்கமாக இருந்தது. பிறப்பினால் கிடைக்கும் முதன்மை. நிர்வாகத் திறமை. இறந்த அரசரின் நியமனம் இவை எல்லாம் அடுத்துவரும் சுல்தானின் தகுதிகளாகக் கருதப்பட்டன. ஆனாலும் இறுதியில் வாளின் வலிமையே வாரிசுரிமையை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்கியது!

**மைய ஆட்சி**

டில்லி சுல்தானிய அரசு ஒருமுகப்படுத்தப்பட்ட மைய ஆட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது. நிர்வாகத்தில் சுல்தானுக்கு உதவி செய்ய பல அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

திவானி வாசரத் (Diwan-i-Wazarat): இவர்தான் பிரதம மந்திரி. சுல்தானுக்கு அடுத்தபடியாக உயர் அதிகாரம் படைத்தவர். நாட்டின் எல்லா ஈ துறைகளுக்கும் பொறுப்பானவர்.

திவானி அரிஸ் (Diwan-l-ariz): இவர் படை நிறுவனங்களின் பொதுக் கட்டுப்பாடு அமைச்சர் படைவீரர்களைத் தேர்ந்தெடுப்பது. அவர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலை தயார் செய்வது. படைத்தளவாடங்களைக் கவனிப்பது இவர் பொறுப்பு.

திவானி இன்ஷா (Diwan I-insha): அரசு ஆணை செய்திகளைப் பதிவு செய்து உரியோர்களுக்கு அனுப்புவது இவர் பொறுப்பு. இவருக்குக் கீழ் ஏராளமான தபிர்கள் (Dabirs) பணியாற்றினார்

திவானி ரசலத் (Diwan + Rasalat) இவர் சமயத்துறை அமைச்சர் ஆவார். கல்வி வளர்ச்சிக்கு இவரே பொறுப்பாவார்.

சாதர் உஸ்ஸுதூர் (Sadar us Sudur) இவர் அறநிலைய நீதித்துறை அமைச்சர் ஆவார்.

மேற்கண்ட அமைச்சர்களுள் வாசிர்தான் அதிகச் செல்வாக்குடன் - விளங்கியோர் பிற அமைச்சர்கள் அரசுச் செயலாளர்கள் போலவே தடங்கற - கொண்டனர். அமைச்சர் குழு முறை கிடையாது. அமைச்சர்களைத் தவிர தனிப்பட்ட நண்பர்கள். நம்பிக்கைக்குரிய உயர் அலுவலர்கள். உலா மாக்கள் அடங்கிய மஜ்லிஸ் இ கால்வட் (Majlis-I-Khalwat) என்ற ஆலோசனைக் குழு ஒன்று இருந்தது. நாட்டின் முக்கிய கொள்வு முடிவுகளை சுல்தான் இந்தக் குழுவில் வைத்து விவாதித்தார். அரண்மயை நிர்வாகத்தைக் கவனிக்க ஓர் உயர் அதிகாரி நியமிக்கப்பட்டார் அவ அரசரின் மெய்காப்பாளர் அவர் அடிமைகளைக் கண்காணித்ததுடன் அரண்மனை லாயம். வாகனங்கள். போர்க் கருவிகள் செய்யும் கர்கா என்ற தொழிற் கூடங்களையும் மேற் பார்வையிடும் அதிகார பெற்றிருந்தார்.

**படை**

டில்லி சுல்தான்கள் ஆட்சி மக்களின் சம்மதத்தை அல்லாம. படைபலத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. நூற்றுக்க தொண்ணூறு சதவீதம் மாற்று சமயத்தினருடைய நாட்டில் படைபல ஒன்றே உற்ற துணையாக இருந்தது. மேலும் அடிக்கடி நடைபெறும் மங்கோலியப்

படையெடுப்புகளைச் சமாளிக்கவும் பெரும்படை ஒன்று தேவைப்பட்டது. எனவே டில்லி சுல்தான்கள் படைபலத்தை பேணுவதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள். கல்தானியரின் படைகள் நான்கு வகைகளாலானது

1) சுல்தானி நேரடிக் கண்காணிப்பிலுள்ள நிலைப்படை

2) மாநில ஆளுநர்களும் பிரபுக்களும் வைத்திருந்த படை

3) போர்க் காலத்தில் மட்டும் உருவாக்கப்படும் படை

4) சுயேச்சையாகச் செயல்பட்டுவந்த முஸ்ஸ் படை வீரர்கள் ஆகியவை ஆகும். சுல்தானியர்கள் படை ஓர் தேசியம் படையாக அமையவில்லை. அதில் துருக்கியர். ஆப்கானியர். பாரசீகர் அபிசீனியர். இந்தியர் ஆகியோர் அடங்கியிருந்தனர். துருக்கியம் பிரபுக்களே படைத் தலைமையை ஏற்றனர். பெரும்பாலும் சுல்தான் தானே படைகளுக்குத் தலைமை தாங்கி போர்களத்திற்கு நடத்திச் செல்வதுண்டு படையில் அமிர். கான். மாலிக் போன்ற பதவிகள் மூலம் படை அதிகாரிகள் தாம் பிரிக்கப்பட்டனர்.

படையில் வில்பயிற்சி பெற்ற காலாட்படை. குதிரைப்படை யானைப்படை ஆகிய மூன்று பிரிவுகள் இருந்தன சுல்தானியப் படையில் குதிரை வீரர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். அலாவுதீன் கில்ஜி 4.75.000 குதிரைப் படையினரை வைத்திருந்தார். போர்க் குதிரைகளைப் பிற பணிகளுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்க சூடுபோடும் முறையை (Dagh System) அமுல் நடத்தினார். யானைப் படையைப் பேணுவதிலும் கஸ்தான்கள் அக்கரை காட்டினர். முகமதுபின் துக்ளக் மூவாயிரம் கல்தளன்னை வைத்திருந்ததாகக் கூறப்ல் அரிஷ் படை அமைப்பில் முக்கிய அதிகாரிகளாகக் கருதப்பட்டவர்கள் அரிஸ் இ மாலிக். நாயக் அரிசி மாலிக் ஆவார்.

படைவீரர்களுக்கு முதலில் சம்பளம் கொடுக்கும் முறை இருந்து வந்தது. ஆனால் பிரோஸ்ஷா துக்ளக் படை வீரர்களுக்கு மானியமளிப் பதையும். ஜாகிர் கொடுப்பதையும் வழக்கத்திற்குக் கொண்டுவந்தார். இது படைத்துறையில் பரம்பரைப் பாத்தியதை முறையைப் புகுத்தியது. இதனால் படையின் திறமைகுறைந்ததுடன் அரசின் நேரடிக் கட்டுப்பாடும் தளர்வதற்குக் காரணமானது. சுல்தானியர் பீரங்கிப் படை முறையை அறியாவிட்டாலும் தானே இயக்குவதும். பலவகைப்பட்ட எந்திரங்களை உடையதுமான ஒருவகைக் குண்டு எறியும் எந்திரங்கள் கோட்டைப் போரில் பயன்படுத்தப்பட்டன. அவை மஞ்சினிக்கு.மங்கோனல். மங்கோன் என அழைக்கப்பட்டன. அவை தீக்குண்டுகள். தீயம்புகள். பெருங்கற்கள். பாறைத் துண்டுகள். மண் அல்லது இரும்பிலான குண்டுகள். இரசக்கற்பூரம் அடங்கிய புட்டிகள். தேள்கள். பாம்புகள் முதலியவற்றைப் பகைவர் மீது எறிவதற்குப் பயன்படுத்தப்பட்ட

கோட்டைகள் நாட்டின் வலிமைக்கு அடையாளமாக விளங்கின. ஒவ்வொரு கோட்டையும் கொத்தவால் (Kotawail என்பவர் தலைமையில் வைக்கப்பட்டது. கோட்டை வாசல் சாவி அவரிடமே இருந்தது.

**நிதி. வருவாய்த்துறைகள்**

நிதித்துறையில் சுல்தானிய அரசு முஸ்லீம் ஜூரிகளில் ஹனபி (Hanati) என்ற பிரிவினர் கொண்டிருந்த பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. டில்லி சுல்தானியர்களுக்கு பொருள் வருவாய் மூலங்கள் ஐந்து ஆகும்

1) உஷர் (Usher) முஸ்லீம்களின் நிலங்களில் மொத்த விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு.

2) கராஜ் (Kharaj) முஸ்லீம் அல்லாதார் மீது விதிக்கப்படும் நிலவரி

3) காம்ஸ் (Khams) போரின் போது கிடைக்கும் கொள்ளைப் பொருட்களில் ஐந்தில் ஒரு பகுதி

4) ஸாகத் (Zakat) முஸ்லீம்கள் மீது விதிக்கப்படும் வரி.இவ்வருவாய் மசூதிகள் கட்டுவதற்கும். அறப்பணிகளுக்கும். சமய ஞாளிகளுக்கு அன்பளிப்புக் கொடுக்கவும் பயன்படுத்தப்படும்.

5) ஜிஸியா (Jizya) இந்த வரி முஸ்லீம் அல்லாதவரிடமிருந்து அவர்களின்உயிரையும் பொருளையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் படைத்துறை பணியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதற்காகவும் ஈடாகத் தரப்பட வேண்டிய வரியாக வசூலிக்கப்பட்டது. பொதுவாக வரிகள் பணமாகவும் தானியமாகவும் கொடுக்கப்பட்டன. இவைதவிர வீட்டுவரி. மேய்ச்சல்வரி. தண்ணீர்வரி.இறக்கு மதிவரி. கனிப்பொருட்கள் மீதான வரி. வாரிசு இல்லாமல் இறப்பவர் களின் சொத்து. அன்பளிப்புகள் ஆகியவை அரசின் பிற வருவாய் இளங்களாகும். வழக்கம் போல நிலவரிதான் முக்கியமான வருவாய் ஆகும் நிலவரிநிர்ணயத்திற்காகநிலங்கள் நான்குவகைகளாக பிரிக்கப்பட்டிருந்தன.

1) காலிசாஇவை அரசி

நேரடிப்பார்வையின் கீழ் இருந்த நிலங்களாகும்.

2)இக்தா(gta): இமை அதிகாரிகளுக்கு சில ஆண்டுகளுக்கோ. அல்லது ஆயுள் முழுவதற்குமே கொடுக்கப்படும் நிலங்கள் ஆகும்

3) இந்து குறுநில மன்னர்களி நிலங்கள்

4) முஸ்லீம் அறிஞர்களுக்கும். சமய ஞானிகளுக்கும் கொடுக்கப்பட்ட நிலம் ஆகியவையாகும். நிலவரி விதிப்பதற்கென்று தெளிவான

திட்டவட்டமான கொள்கைகள் இருந்ததாக தெரியவில்லை அலாவுதீன் கில்ஜி நிலத்தை அளந்து பின்னர் வரிவிதிக்கும் முறையை கொண்டு வந்தார். ஆனால் அவரது தீர்வை ஐம்பது சதவீதமாக இருந்தது. கிராமப்புறங்களில் சௌத்திரிகள். முகடம்கள் ஆகியோர் மூலம் நிலவரி வசூலிக்கப்பட்டது. குடியானவர்களுடன் நேரடித் தொடர் இல்லை ஒவ்வொரு அதிகாரப் பிரிவினுள்ளும் அமில் எனப்பட்ட வகு செய்பவர் இருப்பார்.

**நீதித்துறை**

நீதித்துறையின் தலைமை நீதிபதியாக காசி உல் கசாத் (Quizu Gazat) என்பவர் செயலாற்றினார் அவருக்கு உதவியாக சட்டங்களுக்கு விளக்கம் தர முப்திகள் (Muftis) இருந்தனர் ஆனால் பொதுவாக சுல்தாே நீதியின் உறைவிடமாகவும். உயர் முறையீட்டு நீதிபதியாகவும் செய பட்டார். சட்டங்கள் யாவும் இஸ்லாமியச் சமயக் கோட்பாடுகளிஅடிப்படையிலேயே தொகுக்கப்பட்டிருந்தன. முக்கிய நகரங்களி அமிரிடாட் (Amir-lidad) என்ற மாஜிஸ்திரேட் வழக்குகளை விசாரித்து வழங்கினார். கிராமங்களில் பண்டைய பஞ்சாயத்துக்கள் நீதிமன்றங்கள செயல்பட்டன. தலைமை நீதிபதியின் தீர்ப்புகளை அமுல்படுத்த அவருக்கு உத செய்வதற்காக முஹ்தாசிப் (Muhtasib) என்ற அலுவல நியமிக்கப்பட்டிருந்தார் குற்றங்களைக் கண்டுபிடிக்க நகரங்களி கொத்தவால் (Kotwal) என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். பொதுவாக தண்டனைச் சட்டங்கள் கடுமையாக இருந்த சித்திரவதை அனுமதிக்கப்பட்டது குற்றங்களை ஒப்புக் கொள்ள செய்வதற்காக பலாத்காரம் செய்யப்பட்டது. போதிய விசாரை இன்றியே வழக்குகள் நடைபெற்றன நீதி வழங்கும் முறை ஒழுங்க நடைபெற்றுவந்தது என்று சொல்ல முடியாது. மக்களின் நடவடிக் களைப் பற்றி அறிய சுல்தான் பல ஒற்றர்களை நியமித்திருந்தர். சிறைச்சாலை விதிகள்

கடுமையில்லாததாகவும். சிறை அதிகாரிகளிடம் ஊழல் அதிகமாகவும் காணப்பட்டது.

**மாநில நிர்வாகம்**

டில்லி சுல்தான்கள் தங்கள் பேரரசை முறையாக பிரிவினை செய்ததாகத் தெரியவில்லை. தூரத்திலிருந்த மாகாணங்கள் 'நாயிப் சுல்தான்' என்று அழைக்கப்பட்ட அரசப் பிரதிநிதிகளின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அம்மாகாணங்களின் எண்ணிக்கை இருபது முதல் இருபத்திநான்கு வரை இருந்தது. மாகாணங்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு முக்தாக்கள் (Muqtas) அல்லது ஆமில்கள் (Amils) என்போர் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். மத்திய அரசுக்கு சுட்டுப்பட்டவராகவே நாயிப் சுல்தான் தமது மாகாணத்தில் நிர்வாகம். நீதி. படைத்துறைச் செயல்களைத் தன்னிச்சை படியே செய்துவந்தார். அவர் மத்திய அரசுக்கும் கட்டுப்பட்டு இருப்பது அவ்வப்போது சுல்தானாக இருப்பவரின் ஆற்றலையோ. ஆற்றல் இன்மையயோ பொறுத்து மாறுபடும். மாகாண நிர்வாகச் செலவுகளுக்குச் செல்வானது போக மீதி உள்ள பணம் எல்லாம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மாகாண அரசப்பிரதிநிதி தனக்கென ஒரு படையையும் வைத்திருந்தார். வேண்டும்போது சுல்தானுக்குப் படைஉதவி செய்யவும் கடமைப்பட்டிருந்தார். மாநிலங்களில் நிலவரி வசூலுக்கென்று வாசிர்களும். வாகுப் (Waguts)களும் நியமிக்கப்பட்டனர் மேலும் சாஹிப்-இ-திவான் அல்லது குவாஜா என்ற உயர் நிர்வாக அதிகாரியும் நியமிக்கப்பட்டிருந்தார்.

**ஸ்தல நிர்வாகம்:**

மாநிலங்கள் 'ஷிக் (Shig) எனப்பட்ட சிறு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஷிக்தார் வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவை

பர்கானாக்களாகவும். கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இபன்பட்டுடா என்பவர் நூறுகிராமங்கள் அடங்கிய 'சாடி (Sadi) என்ற பிரிவு இருந்ததாகக் கூறியுள்ளார். பர்கானாக்களில் 'சௌத்ரி என்ற நிலவரி வசூலாளர் நியமிக்கப்பட்டன. கிராமங்களில் சௌக்கிதார் (Chaukidar) என்ற அதிகாரியும். பத்வாரி (Patwari) என்ற வருவாய் அதிகாரியும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**டில்லி சுல்தானியர் கால சமூக. பொருளாதார பண்பாட்டு நிலை**

சுல்தானியர்கள் கால சமூக. பொருளாதார. பண்பாட்டு நிை பற்றி அறிந்து கொள்வதற்கு அமிர்குஸ்ருவின் நூல்கள் மற்றும் அக்காலத்தில் எழுதப்பட்ட கதைகள். வெளிநாட்டுப் பயணிகளி குறிப்புகள். தனிமனிதர்கள் எழுதிய கடிதங்கள் நமக்கு மிகவும் உதவியா உள்ளன. சுல்தானியர் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள். எழுதப்பட்ட இலக்கியங்கள் அவர்களின் பண்பாட்டு நிலையை நமக்குத் தெரிவிக்கிறது அவைகளைப் பற்றி விரிவாக நாம் இனி காணலாம்.

**அடிமை முறை:**

டில்லி சுல்தானியர் ஆட்சிக்காலத்தில் முகமதியர் வாழ்க் வசதிகளை அதிகமாகப் பெற்றிருந்ததின் காரணமாக அவர்களிடையே ப சமுதாயச் சீர்கேடுகள் காணப்பட்டன. சுல்தான்களும். பிரபுக்களும்ஆன் பெண் இருபாலரையும் அடிமையாக வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது அலாவுதீன்கில்ஜிஐம்பது ஆயிரம்அடிமைகளை வைத்திருந்தான். பிரோஸ்ஷா துக்ளக்கின் அடிமைகளின் எண்ணிக்கண இரண்டு லட்சமாக இருந்தது. இதனால் அரசாங்க நிதி தேவைக்கு அதிகமாக செலவிடப்பட்டு நிதி குறைந்தது. மேலும் சீனா. துருக்கிஸ்தாள் பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்தும் அடிமைகள் ஆண்களும் பெண்களுமாக வாங்கப் பட்டனர். போர் அல்லது பஞ்ச

காலத்தில் நிலைமைக்கேற்ப அடிமைகளின் விலை மாறுபட்டது. ஆட்சியாளர்களுக்கும். பிரபுக்களுக்கும் அடிமைகளால் சில நன்மைகள் ஏற்பட்டிருந்தாலும் நாட்டின் வளர்ச்சிக்கும். முன்னேற்றத் திற்கும் அது தடையாகவேயிருந்தது அடிமைத்தனம் சமுதாயத்தில் சாபக்கோடாகவும். முன்னேற்றமின்மைக்கு முத்திரையாகவும். சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகவும் இருந்தது

**பெண்கள்:**

அக்காலத்தில் ஆனால் தடை விதிக்கப்பட்டிருந்தது அவர்களின் உரிமைக்குத் தடை இந்துக்களிலும் முஸ்லீம்களிலும் பெண்கள் தங்கள் கணவர்களையோ. பிலிஆன் உறவினர்களையோ சார்ந்தே வாழ வேண்டியதிருந்தது. பெண்கள் முகத்திரை என்று சொல்லப்பட்ட 'பர்தா' (Budah) போட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்தது பிறநாட்டுப் படையெடுப்பாளர்களிடமிருந்து பெண்களைக் காப்பாற்றும் நோக்கத்துடனே பர்தா அணியும் பழக்கம் இந்தியாவில் புகுத்தப்பட்டது. சாதாரண கிராமத்துப் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதிலேயே காலத்தைக் கழித்தனர். சில உயர்வகுப்புகளைச் சார்ந்த பெண்கள் கலைகளையும் அறிவியல் அறிவையும் வளர்ப்பதில் ஈடுபட்டனர். ரூபமதியும் பத்மாவதியும் (Rupamati. Padmavathi) சுற்றறிந்த பெண்களுக்கு எடுத்துக்காட்டாவார்கள். பாலியத்திருமணமும். உடன்கட்டை ஏறுதல் பழக்கமும் சில வகுப்பாரிடையே இருந்தது. தானமும் பிற அறச் செயல்களும் நிறைந்து சமுதாய வாழ்க்கையின் தரம் பொதுவாக உயர்ந்து காணப்பட்டாலும். மது மற்றும் மங்கையர் மீது வெறி கொண்டு வாழ்ந்தவர்கள் அக்காலத்திலும் இருந்தனர்

**முஸ்லீம்களும். இந்துக்களும்**:

டில்லி சுல்தான் ஆட்சிக்காலத்தில் முஸ்லீம்கள் பெரும் ஏகபோக வாழ்க்கை நடத்தியதால் அனேக சமுதாயச் சீர்கேடுகள் ஏற்பட்டன. பெண்களின் துணையை அதிகம் நாடிய பிரபுக்களும் முஸ்லீம்களும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையை மேற்கொண்டனர். முஸ்லீம்கள் இந்துக்களுக்கு எஜமானர்களாகவே கருதப்பட்டனர். பல இந்துக்கள் முஸ்லீம்களின் கெடுபிடிகளின் காரணமாக இஸ்லாம் மதத்தைத் தழுவினர். மத மாற்றம் செய்வதற்கு அரசு எல்லாவித ஆதரவையும் கொடுத்து வந்தது. ஜிசியா வரி செலுத்திய வர்களுக்கு மத உரிமை கொடுக்கப்பட்டது. இந்துப் பெண்கள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். அலாவுதீன் காலத்தில் இந்துப் பெண்கள் முஸ்லீம் வீடுகளில் விட்டு வேலை செய்தனர். இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன. இந்துக் களைத் தண்ணீர் எடுப்பதற்கும். மரம் வெட்டுவதற்கும் மட்டுமே பயன்படுத்தினர். பிரோஸ் துக்ளக். சிக்கந்தர். இப்ராகிம் லோடி போன்றோர் இந்தமதத்தை மிகத்தாழ்வுபடுத்தினர். பொதுவாக இந்துக்களின் நிலை மிக மோசமாக இருந்தது. அவர்கள் தலைதூக்கி நிற்க முடியவில்லை. முகமதியர்களாக மாறிய இந்துக்களுக்குச் சலுகைகள் அளிக்கப் பட்டதால் இந்துமதம் பலவீனம் அடைந்தது. இந்துக்கள் அரசியலிலும். சமூக நிலையிலும் தாழ்த்தப்பட்டதால் சமயக் கொள்கைகள் மூலம் ஆறுதல் அடைய முற்பட்டனர். தெற்கில் அமைந்த விஜயநகரப்பேரரசு இந்து மதத்தின் மேன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.அ இஸ்லாமிய மதத்தை தெற்கில் பரவவிடாதபடி தடுத்து நிறுத்தியது. இந்து பேரரசுகளான

விஜயநகரமும்.மேவாரும் முஸ்லீம்களின் மதக் கொள் களுக்கு ஓர் எச்சரிக்கையாகவே அமைந்திருந்தன.

**பொருளாதார நிலை:**

டில்லி சுல்தானியர்கள் காலத்தில் நாடு அளவில்லாத பொரு செல்வத்தால் புகழ்பெற்றிருந்தது. ஆனாலும் மக்களின் நிலைனை உயர்த்துவதற்கென்று நாடு எவ்விதப் பொருளாதாரக் கொள்கையையு வகுக்கவில்லை. அலாவுதீன் கில்ஜியின் கடுமையான வரிகள் விவசா களையும். வாணிகர்களையும் மிகவும் பாதித்தது. துக்ளக் காலத்தி ஏற்பட்ட 'பத்தாண்டு பஞ்சமும்' அவர் ஆட்சி முறையும் பொருளாதார சீர்கேடுகளுக்குக் காரணமாயின.

அரசாங்கத்தின்ஆதரவும். வழிகாட்டுதலும் இல்லாம போனாலும். தொழிற்சாலைகளும். தொழில்களும் வளர்ச்சியடைந்தன கைத்தொழில்களும். வாணிகமும் வளர்ச்சியடைந்தன. நாட்டும் புறங்களிலும். நகர்புறங்களிலும் சில முக்கிய தொழிற்சாலைகள் இருந்தன சாயத் தொழிற்சாலை. சர்க்கரைத் தொழிற்சாலை. உலோகம். செங்கள் காகிதத் தொழிற்சாலை முதலியன் அவற்றில் குறிப்பிடத்தக்கவை கிண்ணம் செய்தல். செருப்பு செய்தல். வாசனைப் பொருட்கள் செய்தல் சாராயம் காய்ச்சுதல். அம்புகள் செய்தல் முதலியன சிறு தொழில்கள இருந்தன. சிறந்த துணிகளை உற்பத்தி செய்வதில் வங்காளமும். குஜரத்தும் புகழ்பெற்றிருந்தன. சுல்தானியர் ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளுடனும் இந்திய தொடர்பு கொண்டிருந்தது மலாய்தீவு. பசிபிக் கடற்கரை நாடுகள். பாரசீக. திபெத். பூடான் ஆகிய நாடுகளுடன் வாணிபம் நடை பெற்றது குதிரைகள். கோவேறு கழுதைகள். துத்தநாகம். அபின் மற்றும் உணவும்

பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பொருட்களின் விலை அவ்வப்போது மாறிக்கொண்டே வந்தது ஏனெனில் விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. பஞ்ச காலத்தில் பொருட்களின் விலை மிக உயர்வாகவும். செழிப்பான காலத்தில் மிகக் குறைவாகவும் விற்கப்பட்டது. அவ்வப் போது நாட்டில் பணப்பற்றாக் குறையும் ஏற்பட்டது. அக்காலத்தில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் அதிர் வேறுபாடு இருந்தது. அரசியல் நிர்வாதகளும். செல்வந்தர்களும் செல்வா செருக்கில் ஏகபோக வாழ்வு வாழ்ந்தனர். அதே நேரம் எளியவர்கள். விவசாயிகள் மிகவும் துள்பமடைந்தனர். வரிச்சுமைதாளாது மக்கள் துன்புற்றனர். அமிர்குஸ்ரு என்பவர். கண்ணீர் நிறைந்த ஏழை விவசாயிகளின் கண்களிலிருந்த ரத்தத்துளிகளே படிகங்களாக. அரசனின் மணிமகுடத்தில் முத்துக்களாக இருந்தன' என்று குறிப்பிடுகிறார். தைமூரின் படையெடுப்பிற்குப் பின்னர் சுல்தானியரின் பொருளாதார நிலை சீர்குலைந்து விட்டது. வியாபாரமும். விவசாயமும் நசிந்து விட்டன. நாட்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டு பொருளாதார நிலை சீர்கெடத் தொடங்கியது.

**பாரசீக மொழி இலக்கிய வளர்ச்சி:**

டில்லி சுல்தான்கள். அமிர்கள். மாநிலங்களை ஆண்ட முஸ்லீம் ஆட்சியாளர்கள். பிரபுக்கள் ஆகியோர் தாங்கள் சுவைத்து உணரக் கூடிய பாரசீக மொழி இலக்கியங்கள் வளர பெரும் ஆதரவு தந்தனர். டில்லி சுல்தான்கள் ஆதரவை நாடி பல பாரசீக இலக்கிய அறிஞர்கள் டில்லி வந்து சேர்ந்தனர். எனவேதான் அமிர்குஸ்ரு 'மத்திய ஆசியாவில் புகழ்பெற்ற பல்கலைக்கழக நகரமான புக்காராவுடன் (Bukhara) அறிவுச் சூழலில் டில்லி போட்டியிடும் அளவுக்கு வளர்ந்துள்ளது' என்று கூறியுள்ளார். டில்லி. ஜலந்தர். பிரோசாபாத்

போன்ற பல இடங்களில் முஸ்லீம் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. டில்லியில் 'இம்பீரியல் நூலகம்' (Imperial Library) என்ற ஒரு பெரும் நூலகம் நிறுவப்பட்டது. அமிர்குஸ்ரு அதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பால்பன் காலத்தில் டில்லி அரசவையில் நுழைந்த அமிர்குஸ்ரு அலாவுதீன் கில்ஜி. கியாசுதின் துக்ளக் ஆட்சிக்காலம் வரை இலக்கியப் பணிபுரிந்தார். பாரசீக மொழியில் பல கவிதைகள். உரை நடைகள் இயற்றினார். இதே காலத்தில் நிஜம்-உத்-தீன் ஹசன் என்ற மற்றொரு கவிஞரும் இருந்தார். மௌலான மொய்தீன் உம்ரானி என்ற கல்வியறிஞர் ஹின்னஸனி தக்கிஸ். மிப்தா ஆகியவற்றிற்கு விளக்க உரைகள் எழுதினார். பெரோஸ்ஷா துக்ளக் கல்வி வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டினார். மசூதிகளுடன் இணைந்த பல கல்லூரிகளைத் தோற்றுவித்தார்.

டில்லி சுல்தான்கள் காலத்தில் பல வரலாற்று இலக்கியங்கள் பாரசீக மொழியில் எழுதப்பட்டன. ஹாசன் நிஜாமினுடைய 'தாஜில் மாசிர்'. மின்ஹாஜ் உஸ்சிராசின் 'தபிகாசிநாசிரி'. ஜியாவுதீன் பரானியின் வரலாற்று நூலான. 'ஷம்ஹ்-இ-ஸிராஜ்'. அபிப் என்பவரின் தாரிக்-இ பெரோஷாகி. யாஹியா பின் அகமத்சர்ஹிந்தி என்பவரின் 'தாரிக்-இ முபாரக்ஷாகி' ஆகிய நூல்கள் இலக்கியச் சுவையுடன் கூடிய இனிய நூல்களாகும்.

**வடமொழி இலக்கிய வளர்ச்சி:**

வடமொழி (சமஸ்கிருத) இலக்கிய வளர்ச்சி டில்லி சுல்தானகள் ஆட்சிக் காலத்தில் சற்று குன்றியதாகவே காணப்பட்டது. ஆனாலும் பல சமய நூல்களும். சமயசார்பற்ற நூல்களும் எழுதப்பட்டன. அவற்றுள் பார்த்தசாரதி மிஸ்ரா என்பவர் 'கர்மமிமாம்தா பற்றி எழுதிய 'சாஸ்திரிபீகை குறிப்பிடத்தக்கது. பல சமஸ்கிருத நாடகங்கள் எழுதப்பட்டன. ஜெயசிங்சூரி.

என்பவர் எழுதிய 'ஹம்மீர்மதமர்தனம்'. வித்யநாத் என்பவர் எழுதிய 'பிரதாப் ரூத்ரகல்யாண்'. வாமனபட்ட பாணர் என்பவர் எழுதிய 'பார்வதி பரிணயம்'. சுங்கநாதர் என்பவர் எழுதிய 'கங்கதாசபிரதாப விலாசம்' ஆகிய வடமொழி நாடக நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை. வங்காள மன்னர் ஹுசைன்ஷாவின் அமைச்சர் ரூபகோஸ்வாமி சுமார் 25 வடமொழி நூல்கள் எழுதினார். அவற்றில் விதக்தமாதவம். வலிதா மாதவம் ஆகிய நாடக நூற்கள் பிரசித்தி பெற்றவை. மேலும் பல இலக்கண நூல்களும் வடமொழியில் எழுதப் பட்டன. சில முஸ்லீம் அறிஞர்களும் சமஸ்கிருத மொழியில் புலமை பெற்றிருந்தனர்.

**தேசிய இலக்கியங்கள்:**

சமய சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு தேசிய மொழிகளின் வளர்ச்சி பெரிதும் துணைபுரிந்தன. பழமைப்பற்றும். வைதீக எண்ணமும் இலக்கியச் சுவையில் நாட்டமும் கொண்டோர் சமஸ்கிருதத்தில் தங்கள் கருத்துக்களை வெளியிடும் போது சாமானியர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் தங்கள் கருத்துக்களைப் பரப்ப வேண்டுமென்று ஆர்வம் கொண்டார்கள். எனவே அவர்களுக்குப் புரியும்படி அவர்கள் மொழியிலேயே இலக்கியங்களை எழுதினர்.

14.15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பக்திசமய எழுச்சி தேய் மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது இராமானந்தரும். கபீரும் இந்தி மொழியில் தங்கள் இனிய கருத்துக்கண எடுத்துரைத்து அம்மொழி மறுமலர்ச்சிக்கு உதவினர் நாமதேவர் மராட்டி மொழி வளர்ச்சிக்கு காரணமாக இருந்தார் வங்காளத்து வைளி ஆசிரியர்கள் சந்திதாஸ். வித்யாபதிதாகூர் ஆகியோர் வங்காளி மொழி இலக்கியங்கள் பல படைத்தனர் வங்காள அரசர்கள் ஆதரவுபெரி கிரிதிவாஸ் என்பவர்

இராமாயணத்தையும் பரமேஸ்வரன் என்ப மகாபாரதத்தையும் வங்காளியில் மொழிபெயர்த்து அம்மொழி வளப்படுத்தினர்.

**இசையும் நாட்டியமும்:**

இஸ்லாமிய இசை முதன் முதலில் அராபியருடன் சிந்து பகுதியில் நுழைந்து காலப்போக்கில் இந்திய இசைக்கலையுடன் கலந்து விட்டது. அஇஸ்லாமின் ஒரு பிரிவான சூபி (Sufism) சமயத்தினைச் சார்ந்த துறவிகள் இந்துபக்தர்களைப் போலவே இசையில் பெரும் விருப்பம் கொண்டி ருந்தனர் அவர்கள் தங்களின் வழிபாட்டுக் கூட்டங்களில் பாடும் முறைக்கு 'கவாலி இசை' (Qawali) என்ற பெயர். அலாவுதீன் கில்ஜியின் அரசவையை இசைக்கலையில் தேர்ந்த பல இசைவல்லுநர்கள் அலங்கரித்தனர். அலாவுதீன்ஓர் இசைப்பிரியர் ஆவார். இந்திய. துருக்கிய. பாரசீக நாட்டு இசை நாட்டிய கலைகளில் சிறந்தோர். ஒரு பாரசீக அதிகாரியின் கட்டுப்பாட்டில் எப்போதுமே அரசவையில் குழுமியிருப்பர். பைரவி. சராஸ்ராகம். கலுங்க்ரா.பைரான் போன்ற ராகங்களில் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. அத்தகைய பாடல்கள் வழிபாட்டின் போதும் அரசவையிலும் பாடப்பட்டன.

முஸ்லீம் ஆட்சியின் போதிருந்த வட இந்தியப் இசை இந்திய இரானியக்கலப்பாகும். வரலாற்றுப் புகழ் பெற்ற அமிர்குஸ்ரு என்ற கவிஞர் இனிமையாகப் பாடுவதிலும் வல்லவராக இருந்தார். அக்கால வட இந்திய இசையில் பாரசீக இசைப்பாணி புகுத்தப்பட்டதால் நாளடைவில் வடஇந்திய இசைக்கும் தென்னிந்திய இசைக்குமிடையே வேறுபாடுகள் தோன்றின. முஸ்லீம் இசைக்கலையைச் சார்ந்த பல கருவிகள் இப்போது இந்திய இசைக் கருவிகளாயின. உதாரணமாக 'தலபா'. 'தில்ரூபா'. 'சரோத்'. 'நகரா' போன்ற இசைக்கருவிகளைக் குறிப்பிடலாம்.

**கட்டிடக்கலை**

டில்லிசுல்தான்கள் கட்டிடக் கலையில் மிக்க ஆர்வம் காட்டி னார்கள். அக்கலையை பெர்கூசன் என்பவர் 'இந்தோ-சராசானிக்' கலை என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது 'இந்தியப்பாணியும் இஸ்லாமியப் பாணியும் சேர்ந்தகலவை' என்று கருத்து தெரிவித்துள்ளார். ஆனால் சர் ஜான் மார்ஷல் இந்திய இஸ்லாமியக் கலை என்பது இடத்திற்கேற்ப சில மாறுதல்களைக் கொண்ட இஸ்லாமியக் கலை ஆகும். அது இந்துக் கலையின் திருத்திய வடிவம் அல்ல' என்று கூறினார். டில்லி சுல்தானியர் காலத்தில் சுட்டப்பட்ட சுட்டிடங்கள் அனைத்தும் இந்தக் கலப்பு முறையிலேயே கட்டப்பட்டன.

முஸ்லீம் கட்டிடக் கலையின் சிறப்பு அம்சங்களாக கீழ்க்கண்ட

நான்கு வகைகள் உள்ளன.

- அலங்கார வளைவுகள்

அரைக்கோள வடிவத்தில் அமைக்கப்படும் ஆலயத்தின் கூரைகள் (Domes) ) தொழுகைக்கு அழைப்பு விடுக்கும் உயர்ந்த ஒற்றைக்கோபுரம் (Minars) மசூதியின் நாற்புறங்களிலும் நெடிதுயர்ந்து நிற் கோபுரங்களும் (Minarets) மற்றும் சதுரங்கள் வளைவுகள் கொண்டடு வேலைப்பாடுகளும். புனித நூலின் கருத்துக்களை அழகிய எழுத்துக்கள் பொறிப்பதும் ஆகியநான்கு அம்சங்கள் ஆகும்.

**குதுப்மினார்**

இத்தகைய சிறப்பு அம்சங்களை துருக்கியமன்னர்கள் இந்தியாவி இறக்குமதி செய்யும் போது ஏற்கனவே இங்கு நன்கு வளர்ச்சியடை* கட்டிடக் கலை ஒன்றுபரவியருந்ததைக் கண்டார்கள் எனவேதாம் இருகலைகளின் சிறப்பு அம்சங்களும் இணைந்ததில் வியப்பில்லை இப்படி இணைவதற்குபல

சாதகமான சூழ்நிலைகள் அமைந்த முதலாவதாக. சுல்தான்கள் இந்தியச்சிற்பிகளையும் கைவினைஞர்களையுமே கட்டிட வேலையில் ஈடுபடுத்தினர். எனலே அவர்களை அறியாமலேயே அவர்களின் இயல்பான கலை நுட்பங்கள் இஸ்லாமியக் கலையுடன் கலக்க வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டாவதா சுல்தான்கள் தங்கள் மாளிகைகளையும். மசூதிகளையும் இந்தி சமணக்கோவில்களை அழித்து அதிலுள்ள பொருட்களை உபயோகித் கட்டியதால் தங்கள் கட்டிடக்கலையை மாற்றியமைக்கும் சுட்டாயம் ஏற்பட்டது. மூன்றாவதாக. சில இந்துக் கோவில்களையே மருகிகளாக மாற்றினர் அப்போது அதன் மட்டக் கூரைகளை நீக்கிவிட்டு வளைல் மாடங்களை நிர்மாணித்தனர் எனவே நீடித்தன. நான்காவதாக. இந்திய. குறிப்பிடத்தக்க ஒற்றுமை அம்சம் ஏற்கனவே கலைக்கூறுகள் அப்படிமே காணப்பட்டது. வேலைப்பாடமைந்த அலங்கதவசேபுகள் எனவேதான் இருகலைகளும் இணையத் தகுந்த வாய்ப்புகள் ஏற்பட்டன.

**முக்கியக் கட்டிடங்கள்:**

டில்லிசுல்தானியக் கலைப்பானிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது 'குதுப்மசூதிகள்' ஆகும். அவற்றுள் புகழ் பெற்றது குதுப்மினார் (Qutubminar) ஆகும். அது தனி நிலைக் கோபுரங்களும். அழகிய கல்வெட்டு எழுத்துக்களும். தூபிகளைத் தாங்கும் தூண்களையும் கொண்டுள்ளது. குத்புதீன் இந்த கோபுரத்தைக்கட்ட ஆரம்பித்தார். இல்துத்மிஷ் முற்றுப்பெறச் செய்தார். வின்சென்ட் ஸ்மித் கூற்றுப்படி குதுப்மினார் 27 இந்துக் கோயில்களின் தளவாடச் சமான்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும். குத்புதீன் ஆஜ்மீரில் சுட்டிய மசூதியும். இல்துத்மிஷ் கட்டிய 'சுல்தான்காரி' என்ற சமாதியும். பால்பன் கட்டிய சிவப்பு மாளிகை'யும் குறிப்பிடத்தக்கவை. இதே காலத்தில்

கட்டப்பட்ட ஜமாத் சாளா மசூதி'. 'அலாய் தர்வாசா' ஆகிய கட்டிடங்கள் முக்கியமானவை யாகும்

அலாவுதீன் கில்ஜி ஏராளமான கட்டிடங்களைக் கட்டியுள்ளார். 'சிரி' என்ற ஓர் நகரை டில்லிக்கருகில் நிர்மானித்தார். புகழ்பெற்ற ஆயிரம் தூண் அரண்மனை அவரால் கட்டப்பட்டதேயாகும். துக்ளக் வம்சத்தினர் கட்டிய கட்டிடங்கள் வளமின்றி எளிமையாகக் காணப்பட்டன துக்ளக்ஷா சமாதி. பிரோஷாபாத் நகர் ஆகியவை முக்கியமானவையாகும். சிக்கந்தர் லோடியின் அமைச்சர் ஒருவர் கட்டிய 'மோத்தி மஸ்ஜீத்' சிறந்த கலை நுட்பங்களைக் கொண்டது.

ஜான்பூரிலுள்ள 'ஷர்க்கி' வம்சத்து அரசர்கள் கட்டிய கட்டிடங்களில் இந்துக்கலையின் செல்வாக்கு மிகுந்துள்ளது. 1408-ல் கட்டி முடிக்கப்பட்ட அடலாதேவி மசூதி' ஜான்பூர்பானிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. வங்காளத்திலுள்ள பாண்டுவா ஆதினாமசூதி' அழகும் கம்பீரமும் கொண்டது. மற்றும் 'சோட்டா சோனாமசூதி' கௌர்நகரிலுள்ள 'பாரசோனா மசூதி' ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். குஜரத்திலுள்ள 'ஜாமிமசூதி' கட்டிடக் கலையின் அழகு வாய்ந்தது. இதைக்கட்டியவர் மகமத்கல்ஜியாவார். ஹிந்தோலா மஹால். ஜஹாஜ் மஹால். ஹுஷோங்கின் கல்லறை. பஸ்பஹதூர். ரூபாமதி ஆகியோரின் அரண்மனைகள் ஆகியவை சிறப்புமிக்கலை.

இவ்வாறு டில்லிசுல்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசியல் மற்றும் சமூக உறவுகளில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கசப்புணர்வு இருந்தாலும் இலக்கியம். கலை. பண்பாடு. ஆகிய துறைகளில் இந்து 1 இஸ்லாமிய நாகரிகங்கள் ஒன்றுபட்டு. இசைவு மனப்பான்மையை ஏற்படுத்தி

ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மையையும் ஏற்படுமாறு செய்தன என்று நாம் அறிய முடிகிறது.

**தென்னிந்தியாவில் இஸ்லாமியர் அல்லாத அரசுகள்**

**அறிமுகம்**

இந்தப் பிரிவில்தேவகிரியாதவர்கள். வாரங்கலின் காகதீயர்கள் துவாரசமுத்திரத்தின் ஹொய்சாலர்கள் விஜயநகரப்பேரரசு இந்தியாவில் போர்ச்சுகீசியர்கள் என்று ஐந்து பிரிவுகளாகப் படிக்கப்படுகிறது. தென்னிந்திய அரசுகளின் அரசியல் மற்றும் பண்பாட்டுப் பங்கினைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**நோக்கங்கள்**

இந்தப் பிரிவை மாணவர்படித்து முடித்த பிறகு அவர்சுதந்திர தென்னிந்திய அரசுகளில் ஆட்சிசெய்த அரசர்கள்அவர்களின் வெற்றிகள். கலை. கட்டிடக்கலை மற்றும் இலக்கியம் ஆகியவற்றில் அவர்களின் பங்களிப்பு ஆகியவற்றையும் தெரிந்துக்கொள்ள முடியும்.

**முன்னுரை**

பதிமூன்றாம் நூற்றாண்டில் டில்லி சுல்தான்களின் அதிகாரம் ஆளுமை சிறப்பாக இருக்கும் போது. அவர்களின் மேலாண்மையை சிறிய பெரிய மாகாண அரசுகள் ஏற்றுக்கொண்டு வரிசெலுத்தி வந்தன. துக்ளக் வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு. டில்லி சுல்தானிய அரசு சிதறுண்டது. டில்லி சுல்தான்கள் வலிமையுடையவர்களாக இருந்த பொழுது அவர்கள் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட சிற்றரசுகள். முகமது பின் துக்ளக்கின் வீழ்ச்சிக்குப் பின் சுதந்திர அரசுகளாக செயல்பட ஆரம்பித்தனர். வங்காளம் சுதந்திர அரசாகியது. வட இந்தியா மற்றும் மேற்கத்திய இந்தியாவில் உள்ள ஜான்பூர். மாள்வா. குஜராத்

மற்றும் காஷ்மீர்போன்ற மாகாணங்கள் அந்தந்த மாநிலத் தலைவர்களால் சுதந்திரமாக ஆளும் நிலை பெற்றது. அதே போல தென்னிந்தியாவிலும் தேவகிரியாதவா (12-13ம் நூற்றாண்டு) வாரங்கல் காகதீயர் (11-14ம் நூற்றாண்டு) துவாரசமுத்திரம் ஹொய்சாலர்கள் விஜயநகரப் பேரரசு ஆகியவை சுதந்திரமாக ஆட்சி செய்தன. (14-16ம் நூற்றாண்டு) போர்ச்சுகீசிய வணிகரும் இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் தங்கள் வாத்தகத்தை துவக்கி வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த இந்தியாவின் சில பகுதிகளில் தங்களின் அரசியல் அதிகாரத்தை செலுத்தலாயினர்.

**தேவகிரியாதவர்கள்**

யாதவர்கள் பிற்கால கல்யாணியின் சாளுக்கியர்களிடம் நிலமானியக்காரர்களாக இருந்தனர். சரித்திர நாயகனான கிருஷ்ணரின் வழித் தோன்றல்களாக தங்களை சேவுனாக்கள் என்றும் அழைத்துக்கொண்டனர். சாளுக்கியர்களின் சரிவை சாதகமாக எடுத்துக் கொண்டு நான்காம் சோமேஸ்வரரின் நிலமானியக்காரர்பில்லன்னா சோமேஸ்வரரை தோற்கடித்து கி.பி.1187ல் கிருஷ்ணா நதி வரை தமது இராஜ்யத்தை நிறுவினார். அவர்தேவகிரியை (தௌலதாபாத்) தலைநகராக ஆக்கினார். இந்த மரபில் முக்கியமான அரசர்சிங்கன்னா (கி.பி.1210-1247) ஆவார். ஹொய்சால அரசர் இரண்டாம் பெல்லாலாவைத் தோற்கடித்து கிருஷ்ணா நதிக்குத் தெற்கே தமது மேலாண்மையை ஏற்படுத்தினார். மாளவம். குஜராத் ஆந்திரா அரசர்களுக்கு எதிராக வெற்றிகரமாக போர்களிட்டு தமது எல்லையை விரிவுப்படுத்தினார். காராவின் கவர்னரான அலாவுதீன் ராமச்சந்திரரை தாக்கினார். ஆனால் ராமச்சந்திராசமாதானத்தை நாடினார். அவர் மன்னிக்கப் பட்டார். ஆனால் அலாவுதீனின் தளபதி மாலிக் காபூர்bகி.பி.1307ஆம் ஆண்டு தேவகிரிமீது

படையெடுத்து அதைக் கைப்பற்றினார். ராமச்சந்திராகைது செய்யப்பட்டு டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இருப்பினும் அலாவுதீனால் நன்கு நடத்தப்பட்டார். ராமச்சந்திரரின் மகன் சங்கரா கப்பம் செலுத்தவில்லை. எனவே கி.பி.1312ல் அவர்தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். அவரது இராஜ்யம் கில்ஜி பேரரசோடு இணைக்கப்பட்டது. யாதவ அரசர்கள் கலை இலக்கியத்தின் ஆதரவாளர்களாவர். சிங்கன்னா சிறந்த கல்விமானும் ஆவார். அவர் இலக்கியம். சங்கீதம் ஆகியவற்றை ஆதரித்தார். ராமச்சந்திரரின் அமைச்சர்ஹெமாத்ரிஹிந்து சமய விரதங்கள். வெகுமதிகள். சமயப் பயணம் கடைத்தோற்றம் ஆகியவை பற்றி சாத்ரவாக சிந்தாமணி எனும் நூலை எழுதினார். வைஷ்ணவ கோட்பாடுகள்மருத்தவ நூல் பற்றிய விளக்கங்கள் கூட ஹெமாத்ரிஎழுதினார்.

அவர்கோயில் கட்டிடக்கலையில் ஒரு புதுபாணியை உருவாக்கினார். அவரது உள்நாட்டு கட்டிடக்கலை பாணி அவர்பெயராலேயே வழங்கப்பட்டது. அவர்கையாண்ட நகரிஎழுத்துமுறை மோடி என அழைக்கப்பட்டது. யாதவ ஆட்சியாளர்கள் பல அழகான கோயில்களை கட்டினர்.

அவர்கள் அறிமுகம் செய்த நாணயத்தில் கருடனின் உருவம் உள்ளது. இந்த காலத்தைச் சேர்ந்த கல்விமான்களால் இலக்கியத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களும் வானவியல். இசை. இலக்கணம். ஹிந்து சட்டம் ஆகியவற்றில் பல நூல்களும் எழுதப்பட்டன.

**வாரங்கலின் காகத்தியர்கள்**

பன்னிரண்டு. பதிமூன்றாம் நூற்றாண்டுகளில்

தக்காணத்தில் காகத்திய இராஜ்யம் ஒரு முக்கிய இராஜ்யமாக திகழ்ந்தது. வாரங்கல் அதன் தலைநகர் தக்காணத்தின் மையப்பகுதியாக இந்த நாடு இருந்தது.

கிழக்கு கடற்கரை வரை விரிவாக்கம் பெற்றிருந்தது. காக்கத்திய அரசர்களில் மிகச் சிறந்த அரசர்கணபதி (கி.பி.1199-1261) ஆவார். அவர்சோழர்களின் வீழ்ச்சியை சாதகமாக எடுத்துக் கொண்டார். அவர்காஞ்சியைக் கைப்பற்றினார். நெல்லூர்வரை ஜடவாமன் சுந்தரபாண்டியன் தனது எல்லையை விரிவாக்கியதால் கணபதி காஞ்சியை கைவிட்டார். அவர்கலை. கட்டிடக்கலை ஆகியவற்றை ஆதரித்தார். வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட வணிகர்களுக்கு பாதுகாப்பளித்ததை அவரது தூண் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. கி.பி.1261 முதல் 1291 வரை ஆட்சி செய்த கணபதியின் மகள் ருத்ராம்பா காலத்தில் வெனிஸ் நாட்டு பயணி மார்க்கோ போலோ விஜயம் செய்துள்ளார். ருத்ராம்பாவிற்குப்பின் இரண்டாம் பரதபருத்ரா அரசரானார் (கி.பி.1291-1323) இவரது ஆட்சியின் போதுகாகத்திய அரசை மாலிக் பக்ருதின் படையெடுத்தார். ஆனால் அவர் தோற்கடிக்கப்பட்டார். தேவகிரியை கைப்பற்றிய பின் கி.பி.13099ஆம் ஆண்டு மாலிக் காபூர்வாரங்கல்லை முற்றுகையிட்டார். கடைசியில் இரண்டாம் பரதபருத்ரா தோற்கடிக்கப்பட்டார். முஸ்லீம் தளபதிக்கு மிகப்பெரிய தொகையை கப்பமாகத் தந்தார்.

கி.பி.1318ல் குஸ்ரு கான் வாரங்கல்லை தாக்கினார். காகத்திய அரசை கப்பம் செலுத்தாததால் உலுக்கான் படையெடுத்து வாரங்கல்லைக் கைப்பற்றினார். பரத்ப்ருத்ரா டில்லிக்கு அனுப்பப்பட்டார். வழியில் அவர் இறந்தார். டில்லி சுல்தானியத்தோடு வாரங்கல் இணைக்கப்பட்டது. அது

சுல்தான்பூர்என்ற புதுப்பெயரால் அழைக்கப்பட்டது. முஸ்லீம் கவர்னர்நியமிக்கப்பட்டார். இவ்விதம் காக்கத்திய மரபு முடிவுக்கு வந்தது.

**கலாச்சாரத்திற்கு காகத்தியகளின் கொடை**

முதலாம் பரதபருத்ரா தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பறிய சேவை ஆற்றியுள்ளார். புத்த ராஜூம் ரகுநாதரும் இராமாயணத்தை தெலுங்கில் மொழி பெயர்த்தனர். மகாபாரதத்தை திக்கன்னா தெலுங்கில் மொழி பெயர்த்தார். அவர்ஒரு நில உடைமையாளரால் ஆதரிக்கப்பட்டார். ஆதர்வனாவின் கட்டுரைகளும் தெலுங்கு மொழியின் தொண்மையை அவர்சமஸ்கிருதத்தில் எழுதிய இலக்கண நூலிலும் அறிய முடிகிறது. தெலுங்கு இலக்கியவாதியில் அவர்ஒரு சமணர். ஒழுக்கம். அரசியல் பற்றி பெத்தன்னா ஒரு புத்தகம் எழுதினார். “மார்க்கண்டேய புராணம்” திக்கன்னாவின் மாணவர்மாரனாவால் எழுதப் பட்டது. இரண்டாம் பரதபருத்ராவால் ஆதரிக்கப்பட்ட வைத்தியநாதரால் பரதபருத்ரியம் எனும் நூல் எழுதப்பட்டது அந்த சமஸ்கிருத நூல் ஆதரவாளரின் செயல்களைப் பற்றி வர்ணிக்கிறது.

**துவாரசமுத்ராவின் ஹொய்சாளர்கள்**

பதினொன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஹொய்சாளர்கள் முக்கியத்துவம் பெற்றனர். அவர்கள் சந்திரகுலத்தை சேர்ந்தவர்கள் என்றும் தாங்கள் சந்திர வம்ச ஷத்திரியர்கள் என்றும் கருதினர். முதல் சரித்திர நாயகனான முதலாம் வினயாதித்யா கி.பி. 1006 முதல் 1022 வரை ஆட்சி புரிந்தார். இரண்டாம் வினயாதித்யா கி.பி.1047 முதல் 1098 வரை ஆட்சி செய்தார். கி.பி.1110 முதல் 1140 வரை ஆட்சி செய்த விஷ்ணுவர்த்தனர்துவார சமுத்திரத்தை தலைநகராக்கினார்.

இவரது ஆட்சிக் காலத்தில் ஹொய்சாள மரபு அதனது ஏற்றத்தைக் கண்டது. இவர்பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒருங்கிணைத்தார். இவர்சோழர்களை. பாண்டியர்களை சாளுக்கிய்களை பணியச் செய்தார். இரண்டாம் வீரபல்லாலா. சாளுக்கிய அரசர்நான்காம் சோமேஸ்வராவை தோற்கடித்தார். யாதவ அரசர்ஐந்தாம் பில்லன்னா (1191)வை பணியச் செய்தார். மகாராஜா ஆதித்யா என்ற பட்டத்தை வைத்துக் கொண்டார். இந்த மரபின் கடைசி அரசர்மூன்றாம் வீர பல்லாலா (1310-1339) ஆவார். இவரது ஆட்சிக் காலத்தில் கி.பி.1310ல் மாலிக் காபூர்படையெடுத்து நாட்டை அழிவிற்கு உட்படுத்தினான். வீரபல்லாலாஇறப்போடு கி.பி.1339ல் ஹொய்சாள மரபு முடிவிற்கு வந்தது.

**கலாச்சாரத்திற்கு ஹொய்சாளர்கள் ஆற்றிய பங்கு**

ஹொய்சாள மன்னர்கள் கலை. இலக்கியம் கட்டிடக்கலை ஆகியவற்றை ஆதரித்தனர். தலைசிறந்த ஆச்சாரியர்ஸ்ரீமத்வா (கி.பி.1238-1317) ஹொய்சாளர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தார். அவர்சிறந்த கல்விமான் ஆவார். அவரது தத்துவம் “துவைதம்” என அறியப்படுகிறது. ஏனெனில் ஆத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறு என்று அறிவித்தார். இவரைப் பின்பற்றுபவர்கள் மாதவர்கள் என அழைக்கப்பட்டனர். தற்சமயமுள்ள கர்நாடக மாநிலம். குறிப்பாக வடக்கு. தெற்கு கன்னட ஜில்லாக்களில் உள்ள அதிகமான மக்கள் இவரைப் பின்பற்றுகின்றனர். கோயில் கட்டிடக்கலைக்கு ஹொய்சாளர்கள் ஆற்றிய தொண்டு சிறப்பானதாகும். இவர்களது கோயில்கள். கட்டிட நினைவுச் சின்னங்கள் இன்னும் ஹொய்சாளர்களின் கலை கட்டிடக்கலையின் சிறந்த எடுத்துக்காட்டாக ஹலிபிடில் உள்ள ஹொய்சாளேஸ்வரா கோயில் விளங்குகிறது. ஹொய்சாளர்களின் காலத்தில் பல கன்னட கவிஞர்கள்

உரைநடை எழுத்தாளர்கள் தோன்றினர். உடுப்பி மடத்தைச் சோந்த நரஹாரிவிஷ்ணுவைப போற்றி பாடல்களை இயற்றினார். ஜின்னா. அந்தையா போன்ற மானிட நூலாசிரியர். மல்லிகார்ஜூனர். இலக்கிய ஆசிரியர்களான காசிராஜா. வீரசைவர் போன்றோர் தேவகாயர். சோமராஜ் போன்ற நாவலாசிரியர்கள் கன்னட இலக்கிய செழுமைக்கு பங்கேற்றினர்.

**விஜய நகரப் பேரரசு**

விஜயநகரப் பேரரசின் ஆரம்ப வரலாறு இருளில் சூழ்ந்துள்ளது. துங்கபத்திரை நதியின் தெற்கு கரையில் விஜயநகரப் பேரரசை கி.பி.1336ல் ஹரிஹரா. புக்காஎன்ற

இரு சகோதரர்கள் ஸ்தாபித்தார்கள். விஜய நகரத்தின் முதல் மரபு சங்கிமா என்ற பெயர்பெற்றது. கி.பி.1336 முதல் கி.பி.1565 முடிய 230 ஆண்டுகள் விஜய நகர சாம்ராஜ்யம் நீடித்திருந்தது. அதை மூன்று வெவ்வேறு மரபுகள் ஆட்சி புரிந்தன. அவை சங்கமா. சுளுவ. துளுவ ஆகும்.

**ஆதாரங்கள்**

விஜயநகரப் பேரரசிற்கு முக்கிய ஆதாரமாக விளங்குபவை கல்வெட்டுச் சான்றுகள். உள்நாட்டு. வெளிநாட்டு இலக்கியச் சான்றுகள். நினைவுச் சின்னங்கள் ஆகியவையாகும். கோலார்ஜில்லாவிலுள்ள முதலாம் ஹரிஹரரின் பாகபல்லி செப்புப்பட்டயங்கள். இரண்டாம் சங்கமாவின் நெல்லூர்ஜில்லாவிலுள்ள பிட்ரகுண்டா சாசனம். கி.பி.1356 மரபு வரிசை வரலாற்றை தருகின்றன. கங்காதேவியின் மதுரா விஜயம் என்னும் நூல் மதுரைக்கெதிராக குமார கம்பனின் படையெடுத்ததைப் பற்றிக் கூறுகிறது. கங்கதேச பிரதாப விலாசம் எனும் நாடகம் விஜயநகருக்கு எதிராக பாமினி சுல்தான் தொடுத்த வீணான படையெடுப்பை விவரிக்கிறது. இரண்டாம்

இராஜநாத டின்டியானாவின் சாளுப்யோதயம் விஜயநகர பேரரசின் இரண்டாம் மரபின் ஆட்சியைப் பற்றிய வரலாற்று நூலாகும். விஜயநகரப் பேரரசு பற்றி எழுதியவர்களில் சிலர்இபின் பட்டுடா. அப்துல் ரஸாக். பெரிஷ்டா. கள்ளிக்கோட்டையின் சாமோரின். நுனிஸ் ஆகியோராவர்.

**விஜய நகரப் பேரரசின் அரசர்கள்**

விஜயநகரப் பேரரசின் ஆட்சியாளாகள் பின் வருமாறு :

- ஹரிஹரர் - (கி.பி.1336-1343)
- முதலாம் புக்கர் - (கி.பி.1343-1379)
- இரண்டாம் ஹரிஹரர்- (கி.பி.1379-1404)
- இரண்டாம் புக்கர்- (கி.பி.1404-1406)
- தேவராயர்- (கி.பி.1406-1410)
- விஜய ராயர்- (கி.பி.1410-1419)
- இரண்டாம் தேவராயர்- (கி.பி.1419-1449)
- மல்லிகார்ஜூனா. விருபாக்ஷா-
- (கி.பி.1449-1490)
- நரசிமஹரும் அவரது மகனும் - (கி.பி.1490-1505)
- நரேஷ் நாயக்- (கி.பி.1505-1509)
- கிருஷ்ண தேவராயர்- (கி.பி.1509-1530)
- அச்சயுட ராயர்- (கி.பி.1530-1542)
- சதாசிவராயர்ராமராயர்- (கி.பி.1542-1565)

விஜயநகரப் பேரரசை சங்கமா மரபு சுமார் 155 ஆண்டுகள் (கி.பி.1336-1490) ஆட்சிப்புரிந்தது. சளுவ மரபு 15 ஆண்டுகள் (கி.பி.1490-1505). துளுவ மரபு 60

ஆண்டுகளும் (கி.பி.1505-1565) ஆட்சி செய்தது. இரண்டாம் தேவராயர். கிருஷ்ண தேவராயர்ஆகியோர்மிகவும் முக்கியமான ஆட்சியாளர்களாவர்.

**சங்கம மரபு (கி.பி.1340-1490)**

**முதலாம் ஹரிஹரர் (கி.பி.1336-1355)**

விஜயநகரப் பேரரசு கி.பி.1336ல்ஹரிஹரர். புக்கர்ஆகிய இரு சகோதரர்களால் நிறுவப்பட்டது. டாக்டர்ஸ்மித் கூறுகிறார். “சங்கமா சகோதரர்களின் முயற்சியின் விளைவாக புதிய அதிகாரம் தோன்றியது என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. சங்கமாவின்மகன்கள் தென்னிந்திய தீபகற்பத்தில் முஸ்லீம் படையெடுப்பு அலையை தடுத்து இந்து தர்மத்தை காப்பாற்றினர்.” கி.பி.1340ல் ஹரிஹரர்துங்கபத்ர சமவெளியையும் கொங்கனம் . மலபார்பகுதிகளையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். தென் பகுதியிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றும் நோக்கோடு 1344ல் ஹரிஹரர்கிருஷ்ண நாயக்கரோடு கூட்டுச்சேர்ந்தார்.. ஹோய்சாள அரசர் விருபாக்ஷா பல்லாலா இறந்ததும். முதலாம் ஹரிஹரர் ஹொய்சாளப் பகுதிகளை தமது உடைமையாக்கினார். நாட்டின் தென்பகுதி விரிவாக்கத்தை ஹரிஹரரின் கோமல் சாசனம் தெளிவுப்படுத்துகிறது.

**முதலாம் புக்கர் (கி.பி.1355-1376)**

ஐந்து சங்கம சகோதரர்களில் மிகச் சிறப்புடையவர்முதலாம் புக்கர். விஜயநகர அரசின் விரிவாக்கத்தின் கருவியாகத் திகழ்ந்தவர். இவரது குமாரர்குமார கம்பணா ஆவார். இவரது நாடும் மக்களையும் அதிகாரத்திற்கு மக்கள் கட்டுப்படுபவர்களாகவும் இருந்தனர். மலபார். இலங்கை. மற்றும் பிரதேசத்து அரசர்கள் இவரது அவையில் தூதுவர்களை வைத்திருந்தனர்.

அவர்கள். இவருக்கு வருடந்தோறும் விலை உயர்ந்த சன்மானங்களை அனுப்பினர்.

**இரண்டாம் ஹரிஹரர் (கி.பி.1376-1404)**

இரண்டாம் ஹரிஹரர். "மஹாராஜாதி ராஜா" "ராஜபரமேஸ்வரா" மற்றும் பிற பட்டங்களை தாமே வைத்துக் கொண்டார். இவர்கன்னடம். மைசூர். திருச்சிராப்பள்ளி. காஞ்சி ஆகியவற்றை வெற்றி கொண்டார். விஜயநகர அரசின் எல்லையை விரிவுப்படுத்தினார். இரண்டாம் புக்கர். தேவராயர். விஜயராயர்

**(கி.பி.1404 முதல் 1424 வரை)**

இரண்டாம் புக்கரைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் உள்ளன. இவர் இரண்டு ஆண்டுகளே ஆட்சி செய்தார். இவரை வீழ்த்திய தேவராயர்கி.பி.1406 முதல் 1422 வரை ஆட்சி புரிந்தார். கி.பி.1406 மற்றும் 1419 ஆகிய ஆண்டுகளில் இரு முறை பிரோஸூக்கெதிராக சண்டையிட்டார். நிக்கலோ கோன்டி 1420ல் இப்பெரிய நகரை (விஜயநகரம்) பார்த்தார். அது 60 மைல் சுற்று விஸ்தீரணமும் 90000 வலுவான இராணுவ வீரர்களையும் உடையதாக இருந்தது என விவரிக்கிறார். தேவராயர்மகன் விஜய் அரியணை ஏறி கி.பி.1422 முதல் 1424 வரை ஆட்சி செய்தார். இவரது தந்தாபால்டி (வடக்கு ஆற்காடு ஜில்லா) பட்டைய சாசனம் முல்பகல் வைஸ்ராய் காலத்தைச் சேர்ந்ததாகும். குலகுரு கிரியாசகி கௌரவப்படுத்த கிரியசகதி புரா எனும் இடத்தை நிறுவியதை இது கூறுகிறது "வாரங்கலின் கரகத்தில் பரதப்ருத்ர தேவரின் கருவூலத்தில் பணிபுரிந்த ஹரிஹரர்புக்கர்ஆகிய இரு சகோதரர்கள் கி.பி.1303ல் முஸ்லீம்கள் அந்நாட்டைக் கைப்பற்றியதால் அங்கிருந்து ஓடி வந்த விஜயநகர அரசை

தோற்றி வைத்தனர்என்பது மிக நம்பத்தகுந்ததாக உள்ளது” என்று டாக்டர் ஈஸ்வரிபிரசாத் கூறுகிறார்.

**இரண்டாம் தேவராயர் (கி.பி.1422-1424)**

15ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உள்ள பரப்பைக்காட்டிலும் இரண்டாம் தேவராயர்காலத்தில் விஜயநகரப் பேரரசு அதிக விரிவாக்கம் கொண்டிருந்தது. இதற்கு இரண்டாம் புக்கர்முதலாம் தேவராயர்மிகவும் பாடுபட்டவர்களாவர். சமயப் பொறையை கடைப்பிடித்தும் முஸ்லீம்களையும் தமது படையில் சேர்த்தார். இவர்பாமினி அரசின் படைகளிடம் தோல்வி கண்டார். இதன் விளைவாக முஸ்லீம் அரசிற்கு இரண்டாம் தேவராயர்திறை செலுத்த வேண்டி வந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் இத்தாலியாநிக்கலோ கோன்டி. பாரசீக நாட்டினர்அப்துற் ராஸாக் விஜயநகரை பார்வையிட்டனர். பேரரசு பற்றி அவர்களது குறிப்புகளில் பல சங்கதிகளை விட்டுச் சென்றுள்ளனர் .மல்லிகார்ஜூனா இரண்டாம் தேவராயரைத் தொடர்ந்து அவரது மகன் மல்லிகார்ஜூனன் அரியணை ஏறினார். அவர்வானவியலிலும் இலக்கியத்திலும் துறை போகியவர். அவர்பக்தியுள்ளவர். யானையை வேட்டையாடுபவர். இவ்வாறு தேவராயர்என்ற பட்டப்பெயர்கொண்டார்.

**சாளுவ மரவு (கி.பி.1490-1505)**

இராஜமாதா இரண்டாம் டிண்டிமாவின் சாளுவபுயுதயம் கூற்றின்படி. “பாமினியின் எழுச்சியினால் கல்யாணி அதன் அருகிலுள்ள பகுதிகளில் தங்கள் மூதாதையர்சொத்துக்களை இழந்த குறுநிலத் தலைவர்களாக விளங்கினர்சாளுவர்கள்” . இரண்டாம் விருப்பாக்ஷா சாளுவ மன்னர்களில் கடைசி அரசர். இவர்வலிமையற்றவராகவும் திறமையற்றவராகவும் இருந்தவர். நரசிம்மர்சாளுவ அரசின் தளபதி. பேரரசின் கவர்னர்களின்

துணையுடன் அறியணையை கைப்பற்றினார். அரசராகி பேரரசினை பல வழிகளிலும் வலுப்படுத்தினார். இவரது மகன்கள் இருவர்கி.பி.1505 வரை ஆட்சி செய்தனர்.

**துளுவ வம்சம்**

துளுவ வம்சத்தைச் சேர்ந்த நரேஷ் நாயக் படைத்தளபதியாக இருந்தார். நரசிம்மரின் தகுதியற்ற மகன்களைக் கொன்றார். இவர்விஜயநகரப் பேரரசை கி.பி.1493 முதல் 1505 முடிய ஆட்சி புரிந்தார். துளுவ மரபில் மிக புகழ்பெற்ற மன்னர் கிருஷ்ணதேவராயர்.

**கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509-1529)**

நரஸநாயகரின் மகன் கிருஷ்ணதேவராயர் 1509ல் அரியணை ஏறினார். அவர் 1529ஆம் ஆண்டுவரை ஆட்சி
செய்தார். விஜயநகர அரசர்களில் தலைசிறந்த அரசராக விளங்கினார். டாக்டர் ஈஸ்வரி பிரசாத் கூறுகிறார். “மக்களின் நலனை வளர்க்க பெரிதும் ஆர்வமுடையவர்.
அவரது தாராளமான அறக் கொடைகள் மக்களை அவர்பால் அன்பு கொள்ளச் செய்தது. சமூகத்திடம் அடக்கமும் நல்லிணக்கமும். அமைச்சரவையில் புத்திசாலியாகவும்.

**இராணுவ நடவடிக்கைகள்**

வீரமிக்க போர்வீரராக அவருடைய ஆட்சிக் காலம் முழுவதும் அவர்போர்களில் வெற்றி பெற்றுள்ளார். கலகம் செய்கிற பண்ணையாள்களை அடக்கினார். கி.பி.1514ல் ஒரிஸாவிற்கு எதிராக போரிட்டு வெற்றி பெற்றார். மேலும் உதயகிரி. கொண்டவீடு. கொண்டகிரிஆகியவற்றை வென்றார். கி.பி.1520ல் பிஜப்பூர்சுல்தான் அடில்ஷாவை தோற்கடித்தார். அது மிகச் சிறந்த

வெற்றியாகக் கருதப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் போர்ச்சுகீசியரிடம் நட்புறவு கொண்டிருந்தார். சில சலுகைகளும் தந்தார். சீவல் கூறுகிறார்: "அவர் இதனால் குதிரைகளையும் பிற தேவையானவற்றையும் இறக்குமதி செய்து அதிக நன்மை அடைந்தார்."

**நிர்வாகம்**

கிருஷ்ணதேவராயர்ஒரு சிறந்த நிர்வாகியும் நீதியின் மீது பற்றும் உடையவர். நாட்டின் நிர்வாகத்தை சீர்திருத்தி நிதி நிர்வாகத்தை செம்மையாக நிர்வகித்தார். சேவை மானியங்களில் புதிய வரிவிதிப்பை ஏற்படுத்தினார். மக்கள் மகிழ்ச்சியாகவும் வரிச் சுமையிலிருந்து விடுபட்டவர்களாகவும் இருந்தனர். இவரது ஆட்சிக் காலத்தில் வணிகமும் விவசாயமும் செழித்திருந்தது.

**சமயக் கொள்கை**

கிருஷ்ணதேவராயர் ஒரு இந்து. எல்லா மயங்களையும் சமமாக மதித்தார். அவர் வைஷ்ணவராக இருந்தார். இவருடைய ஆட்சியில் பிற சமயத்தைச் சேர்ந்த மக்களை வழிபடும் உரிமையில் சுதந்திரமாக செயல்பட்டனர்.

**இலக்கியத்தின் ஆதரவாளர்**

கிருஷ்ணதேவராயர்தெலுங்கில் "ஆமுக்தமால்யதா எனும் நூலை எழுதினார். அவர்இலக்கியக் கர்த்தாக்களை ஆதரித்தார். சமஸ்கிருத. தெலுங்கு இலக்கிய நூல்களுக்கு ஆதரவளித்தார். இவரது அவையில் அஸ்டதிக்கஜங்கள் என்ற எட்டு கவிஞர்கள் இருந்தனர். அல்லசானி பெத்தன்னா கிருஷ்ணதேவராயரின் ஆதரவைப் பெற்றார்.

**மதிப்பீடு**

கிருஷ்ணதேவராயர்நாட்டில் அமைதி ஒழுங்கை ஏற்படுத்தினார். இவரது நாடு குறிப்பாக விஜயநகரம் மிகவும் வளமுடன் விளங்கியது என்பதை அந்நிய நாட்டு பயணிகளின் குறிப்பில் காணக்கிடைக்கின்றது. டோமின்கோஸ் பாஸ் கூறுகிறார்: “கிருஷ்ணதேவராயரிடம் மக்களுக்கு மதிப்பச்சம் இருந்தது சிறந்த அரசராகவும். மகிழ்ச்சியுடையவராகவும் வெளிநாட்டவர்களை கௌரவப்படுத்துபவராகவும். வெளிநாட்டவர்களிடம் தங்களின் விஷயங்களை கேட்டு அறிபவராகவும் இருக்கிறார். சிறந்த அரசராகவும் நீதிமானாகவும் உள்ளார்.”

**அச்சுததேவா (கி.பி.1530-1542)**

கிருஷ்ணதேவராயரைத் தொடர்ந்து அச்சுததேவா மன்னரானார். இவர்திறமையற்ற மன்னராக இருந்ததால் நாடு சரிவை நோக்கி சென்றது.

**சதாசிவ (கி.பி.1542-1570)**

அச்சுததேவாவிற்குப் பின்பு சதர்சிவா மன்னரானார். இவர்பெயரளவில் மன்னராக இருந்தார். இவரது மந்திரி ராமராயர் அனைத்து அதிகாரமும் செலுத்தி வந்தார். பேராசை மிக்கவராக இருந்தார். கி.பி.1543ல் ராமராயர் அகமது நகர். கோல்கொண்டாவோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு பிஜபூருடன் சண்டையிட்டார். கி.பி.1557ல் ராமராயர். பிஜப்பூர். கோல்கொண்டாவோடு கூட்டு சேர்ந்து கொண்டு அகமது நகரைத் தாக்கினார்.

**தலைக்கோட்டைப் போர் (1565)**

தக்காணத்தில் முஸ்லீம் இராஜ்யங்கள் தங்களுடைய வேற்றுமைகளை மறந்து விஜயநகரத்திற்கு எதிராக ஒரு வலிமையான கூட்டை தங்களுக்குள் ஏற்படுத்தினர். விஜயநகரப் பேரரசின் விவகாரங்களுக்கு முக்கிய பொறுப்பாக

விளங்கியவர்ராமராயர்.. தக்காண சுல்தான்களிடையே இருந்த சச்சரவில் ராமராயர்தீவிரமாகத் தலையிட்டார். முதலில் ஒருவரோடு கூட்டுச் சோந்து பிறரையும் பின்பு பிறருடன் கூட்டுச் சோந்து மற்றவரையும் தாக்கினார். கடைசியில் எல்லா சுல்தான்களும் ராமராயரிடம் தலை வணங்கியதை எண்ணி வருந்தினர். எனவே போர்எழுந்தது. கி.பி.1564ல் முஸ்லீம் படைகள் தெற்கு நோக்கி விரைந்தது. ராமராயர்தனது சகோதரர்தலைமையின் கீழ் படைகளை அனுப்பினார். இரு படைகளும் தலைக்கோட்டை என்னும் இடத்தில் 23 ஜனவரி1565ல் எதிர்கொண்டன. ராமராயர்படைகள் தோற்கடிக்கப்பட்டன. ராமராயர் கொல்லப்பட்டார். சிவிலின் கூற்றின்படி. “உலக சரித்திரத்தில் இது போன்றதொரு நிகழ்ச்சி நடைபெறவில்லை. அதுவும் ஒரு நாளில் வளங்கொழிக்கும் செல்வமும் முயற்சியுள்ள மக்கள் செழிப்பில் நிறைந்திருந்த விஜயநகரம் மறுநாளில் முற்றுகையிடப்பட்டு அழிவுக்கு உட்படுத்தி காட்டுமிராண்டித் தனமான கொலையையும் பீதியையும் வர்ணிக்க வார்த்தைகள் அற்றுப்போயின.” விஜயநகரம் அழிவுற்ற காரணம் சம்பந்தமாகவும். அங்கு நடைபெற்ற கொள்ளை பற்றியும் பெரிஷ்டா இவ்வாறு கூறுகிறார். “யானைகளை மட்டும் தங்கள் உபயோகத்திற்கு வைத்துக் கொண்டு அரசர்கள் பிறரை கொள்ளையடிக்க அனுமதித்தனர். கூட்டுப்படையில் உள்ள ஒவ்வொரு மனிதரும் தங்க நகைகள் எடுத்து செல்வந்தரானார்கள்” .

**தலைக்கோட்டைப் போரின் முக்கியத்துவம்**

இந்திய வரலாற்றின் முக்கியமான நிகழ்ச்சிகளில் தலைக்கோட்டைப் போர்ஒன்றாகும். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சி முகலாயரின் ஆட்சி தெற்கே விரிவாக்கம் பெற வழி வகுத்தது. ஆனால் அதன் விளைவாக பேரரசு உடனே

மறைந்து விடவில்லை. பதினேழாம் நூற்றாண்டின் முதல் பகுதிவரை பேரரசு ஆரவீடு மரபு வரை தொடர்ந்து இருந்தது. வெற்றி பெற்ற சுல்தான்கள் தங்களுக்குள் இருந்த பரஸ்பர பேராசையால் அவர்களது வெற்றியை தக்க வைக்க இயலவில்லை. இது விஜயநகரப் பேரரசிற்கு இழந்த வலிமையை ராமராயர்சகோதரர்திருமலையின் கீழ் பெறும் தருணத்தை நல்கியது. இவருக்குப் பிறகு இவரது மகன் இரண்டாம் ரங்கன் அரியணை ஏறினார். இவருக்குப் பின் 1586ல் இரண்டாம் வேங்கடா பதவியேற்றார். இவரது தலைநகர்சந்திரகிரியில் இருந்தது. சிறப்புற ஆட்சிசெய்து கி.பி.1640ல் இறந்தார். பேரரசை கட்டுக்குள் வைத்திருந்த சிறந்த விஜயநகர அரசராக மதிக்கப்படுகிறார். இதன் பின்பு பேரரசு தானே வலிமை குன்றி வடக்கிருந்து வந்த தொடர்ச்சியான படையெடுப்புகளாலும். விஜயநகரப் பேரரசிற்கு நிர்வாகத்தின் உள்ளேயே வைசிராய்களின் புரட்சியாளும் தேசம் துண்டாடப்பட்டது. அதிக காலம் நீடித்திருந்த விஜயநகரப் பேரரசு சிறந் ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாக முறையை அளித்தது. அது சிறிது சிறிதாக வளர்ச்சியுற்றது அல்லது மையப் படுத்தப்பட்ட நிர்வாகம் அதன் எல்லா துறைகளையும் கவனமாக உட்படுத்தியிருந்தது. நிர்வாகத்தின் பால் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினர். தங்களுடைய மக்கள் நலனுக்கு தங்கள் பணிகளை ஆற்றினர்.

**மைய அரசாங்கம்**

நிர்வாகத்தின் தலைவர் அரசராவார். அவர்கிட்டத்தட்ட ஒரு எதேச்சாதிகாரி. ஆனால் நன்மை தரும் ஏதேச்சாதிகாரியாக மக்களின் நலனில் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டார். அவர்எல்லா அதிகாரங்களையும் செயல்படுத்தினார். நிர்வாகம். சட்டமியற்றல். நீதி. இராணுவம்

கிருஷ்ணதேவராயர் எழுதுகிறார். “முடிதரித்த மன்னன் தாமத்தில் கண்ணாக இருந்து எப்பொழுதும் ஆட்சிப்புரிய வேண்டும். அரசர் அமைச்சர்குழுவினர்களால் உதவி செய்யப்பட்டார். பிராமணர்கள் நிர்வாகத்தில் உயரிய பதவியில் இருந்தாலும் அதிக செல்வாக்கு பெற்றிருப்பினும் மந்திரிகள் ஷத்திரியர்கள். வைசியர்கள் ஆகியவர்களிலும் நியமிக்கப்பட்டனர். அமைச்சர்கள் அரசருக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் அது மன்னரைக் கட்டுப்படுத்தாது. அமைச்சர்கள் தவிர நாட்டின் பிற அதிகாரிகள் தலைமை கருவூல அதிகாரிகள். நகைகளின் பாதுகாவலர். நாட்டின் வணிக நலன்களை கவனிக்கும் ஒரு அதிகாரிநகரத்தில்குற்றங்களை தவிர்த்து நகரில் அமைதியை பாதுகாப்பார். குதிரையை கவனிக்கும் அதிகாரி. மன்னன் புகழ் பாடும் துணை அதிகாரிகளான காட்கள் வெற்றிலையை எடுத்துக்கொண்டு செல்பவர்அல்லது மன்னரின் தனி அலுவலர். கால அட்டவணை தயாரிப்பவர். கல்வெட்டு வாசகங்களை தொகுப்பவர். பொறிப்பவர்ஆகியோர். அதிக பொருட் செலவுடன் தலைநகரில் பிரம்மாண்டமான அவையை அரசர்நிர்வகித்து வந்தார். அது பிரபுக்கள். பாதிரிகள். கல்விமான்கள் வானவியல் அறிஞர்கள். இசை மேதைகள் ஆகியோரால் கலந்து கொள்ளப்பட்டது. பண்டிகைகள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டன.

**பிராந்திய நிர்வாகம்**

பேரரசு. பிராந்தியம். கோட்டங்கள் (ஜில்லாக்கள்) கிராமங்கள் என பிரிக்கப்பட்டது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் 200 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டது என சொல்லப்படுகிறது. ஆனால் ஆறு பிராந்தியங்கள் மட்டும் நாய்க் என அழைக்கப்படும் கவர்னர் பிராந்தியத்தினுடைய நிர்வாகத்தின்

பொறுப்பாளராவார்அவர்கள் சிவில். இராணுவம். நீதி ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். அவர்கள் பிராந்தியத்தின் வரவு செலவு கணக்குகளை மைய அரசுக்கு சமர்ப்பித்தனர். பிராந்தியம் பேரரசின் பிரதிபலிப்பாக இருந்தது. பிராந்திய கவர்னர்கள் முறையான இறைமை அதிகாரத்தோடு ஆட்சி புரிந்தனர்

.**கிராம நிர்வாகம்**

கிராமம் நிர்வாகத்தின் கடைசி அங்கமாகும். ஆயகர்கள் என அழைக்கப்படும் பரம்பரை அதிகாரிகள் அடங்கிய அவையைக் கொண்டிருந்தது. கிராம சபைகளின் பங்கு முக்கியமான தொன்றாகும். மக்களுக்கும் பேரரசிற்கும் பாலமாக இது இருந்தது. மஹாநாயகா சாரியா எனும் ஒரு அதிகாரியின் மூலமாக மைய அரசு கிராமத்தின் மீது கட்டுப்பாட்டை வைத்திருந்தது.

**நீதி முறை**

நீதியின் உயர்ந்த ஸ்தானத்தில் அரசர்இருந்தார். முக்கியமான பிரச்சனைகளை தீர்மானித்தார். பிராந்தியங்களில் கவர்னர்கள் நீதி அதிகாரத்தை கவனித்தார்கள். கிராமங்களில் பிரச்சனைகளை கிராம சபைகள் தீர்மானித்தன. தண்டனைகள் கடுமையானதாக இருந்தது. சாதாரண குற்றங்களுக்கு அபராதம் தண்டனையாகத் தரப்பட்டது.

**நிதி நிர்வாகம்**

சிஸ்டு என்று சொல்லப்படும் நிலவரிவருவாயின் முக்கிய ஆதாரமாகும். அரசின் பங்கு நாலில் ஒரு பங்கு (1/4லிருந்து) மூன்றில் ஒரு பங்கு (1/3). ஆக இருந்தது. நிலவரிதவிர இதர வருவாய்கள் மேய்ச்சல் வரி. சுங்க வரி. பரத்தையாவரிஇன்னும் பிறவாகும். வரிசுமையாக இல்லை. மக்கள் நாட்டிற்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்தினர்.

ஆனால் சில சமயம் எதிரியை எதிர்க்க மனிதர்களையும் பணத்தையும் பெற. நாட்டின் பெருஞ்சுமையை சந்திக்க விஜய நகரப் பேரரசர்கள் பரம்பரையாக வசூலிக்கும் அளவான உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கினை கைவிட்டு விட்டு சற்று அதிகமான வரிவிதித்தனர்.

**இராணுவ நிர்வாகம்**

நாடு பெரிய திறமையான இராணுவத்தை நிர்வகித்தது. படை காலாட்படை குதிரைப்படை. யானைப்படையென உள்ளடங்கியிருந்தது. (ஆனால் அதன் எண்ணிக்கை ஒன்று போல் இல்லை) குதிரைப்படை மிகச் சிறப்பானதாக இல்லை. ஏனெனில் நல்ல குதிரைகள் கிடைக்காததால் மன்னரின் நிரந்தர படைக்கு தேவையான காலத்தில் பிரபுக்களின் பண்ணையாட்களின் துணைப்படைகள் உதவி புரிந்தன. சில மன்னர்கள் படை பலத்தைக் கூட்ட முஸ்லீம்களை படையில் சேர்த்தனர். ஆனால் அது தோல்வி கண்டது. தக்காணத்தின் முஸ்லீம் படைகளைக் காட்டிலும் கட்டுப்பாட்டிலும் சண்டையிடும் வலிமையிலும் விஜயநகரம் தாழ்ந்தே இருந்தது. மேலே சொல்லப்பட்டதுடன் விஜய நகரப்பேரரசு சில குறைபாடுகளை எதிர்நோக்கியது. முதலில் பிராந்திய கவர்னர்கள் அதிக சுதந்திரத்துடன் இயங்கினர். இது மைய அரசில் வலுவான அரசர்கள் இல்லாத போது மைய அதிகாரத்தை பலமிழக்கச் செய்தது. இரண்டாவதாக. பேரரசு பல்வேறு வசதிகள் பெற்றிருந்தும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதில் தவறியது.

**விஜயநகரப் பேரரசின் சமூக வாழ்க்கை**

விஜயநகரப் பேரரசின் மக்கள் வாழ்க்கை குறித்து உள்நாட்டு வெளிநாட்டு ஆதாரங்கள் உள்ளன. சமுதாயத்தில் மேட்டுக்குடியைச் சேர்ந்த பெண்கள்

உயர்ந்த இடத்தில் இருந்தனர். இலக்கியம். சமூகம். அரசியல் ஆகியவற்றில் அவர்கள் பங்கு இருந்தது. சண்ட செய்யவும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நுனிஸ் குறிப்பிடுகிறார். "விஜயநகர அரசரிடம் போரிடத் தெரிந்த பெண்களும் மற்றும் ஜாதகம் கூறுபவர்கள். பின் வருவதை முன் அறிவிப்பவர்கள். நாட்டின் உள்ளும் வெளியும் ஆகும் செலவுகளை கணக்கெழுதும் பெண்கள். மற்றும் பிறர்அரசாங்க விஷயங்கள் பற்றி இவர்கள் எழுதுவதையும் பிறர்எழுதுவதையும் ஒப்பிட்டு எழுதுவர். இசைக்கு பெண்கள் இருந்தனர். அவர்கள் பாடவும் இசைக் கருவியைMவாசிக்கவும் செய்தனர்" . குழந்தைமணம் காணப்பட்டது. செல்வந்தர்களிடையே பலதாரமணம் நடைமுறையில் இருந்தது. வரதட்சனை முறையும் நடைமுறையில் இருந்தது. சமய திருவிழாக்களில் மிருகபலியிடுவது நடைமுறையில் இருந்தது. அரசரோ பிரபுவோ இறந்தால் அவர்களது அந்தப்புரப் பெண்களை சதி எனும் சடங்கில் பலவந்தமாக உட்படுத்தினர். மக்கள் பழங்கள். காய்கறிகள். எண்ணெய். எருது. பசு மாமிசத்தைத் தவிர பிற மாமிசங்கள் உபயோகித்தனர். உணவு விஷயத்தில் அதிக கட்டுப்பாடுகள் இல்லை.

**விஜயநகரப் பேரரசின் பொருளாதார நிலை**

விஜயநகரப் பேரரசின் வளத்தை உள்நாட்டு வெளிநாட்டு ஆதாரங்கள் குறிப்பிட்டுள்ளன. நாடு சிறந்த நீர்பாசன கொள்கையை நடைமுறைப்படுத்தியதால் விவசாயம் நாட்டில் செழித்தது. நெசவு உற்பத்தி. தாதுக்கள். உலோகங்கள் போன்ற தொழிற்சாலைகள் நன்கு செயல்பட்டன. கைவினைஞர்கள். வணிகர்கள் ஆகியோரின் சங்கங்கள் நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தன. உள்நாட்டு வெளிநாட்டு வாணிபம் செழித்தது மலேயாஆர்ச்பேலகோ. பர்மா. சீனா. அரேபியா. பாரசீகம். தென்

ஆப்ரிக்கா. அபிசீனியா. போர்ச்சுகல் ஆகிய நாடுகளுடன் வாணிப உறவு இருந்தது. முக்கியமான துறைமுகம் கள்ளிக்கோட்டை. விஜயநகரப் பேரரசில் 300 கடல் துறைமுகங்கள் இருந்தன என தனது நூலில் அப்துல்ரசாக் தெரிவித்துள்ளார். முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் துணி. அரிசி. இரும்பு. ஜீனி. உப்பு. வாசனைப் பொருட்களாகும். குதிரைகள். யானைகள். முத்துக்கள். செம்பு. கோரல் மொகுரி. சைனா சில்க். வெல்வட் ஆகியன இறக்குமதி செய்யப்பட்டது. விஜயநகர அரசர்களால் தங்கத்திலும். வெள்ளியிலும் பல்வேறு நாணங்களை வெளியிட்டனர். அந்த நாணயங்களில் பல்வேறு கடவுள்களும். மிருகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. அந்தந்த அரசிகளின் நம்பிக்கையைச் சார்ந்தும் அவை இருந்தன. பொருட்கள் விலை மலிவாக இருந்தது. மேல்குடி மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருந்தனர் என்று வெளிநாட்டவர்களது குறிப்புகள் நமக்கு சொல்கின்றன. ஆனால் நாம் கல்வெட்டுகள் மூலம் அறிய வருவது. பேரரசர்கள் அவ்வப்பொழுது கட்டுப்படுத்தினாலும் உள்நாட்டு கவர்னர்கள் அதிக வரிவசூலித்ததால் பொது மக்கள் வரிச்சுமையில் துயருற்றனர். விஜயநகர அரசர்கள் போர்ச்சுகீசியரோடு வாணிபம் கொள்வதை ஊக்குவித்தனர். ஆனால் சில காலத்திற்குப் பின் அவர்களே பேரரசு நிலைப்பதற்கு பெரும் இடையூறாகவும் விளங்கினர்.

**சமயம்**

விஜயநகரப் பேரரசர்கள். பக்தியாளர்களாகவும் தர்மத்தின்பால் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருந்தனர்என்பதை கல்வெட்டுக்கள். இலக்கிய ஆதாரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்கள் சமய வெறியர்களல்லர். சிவன். விஷ்ணு கோயில்களைக் கட்டினார். அவர்கள் சைவம். வைஷ்ணவம். பௌத்தம். சமணம் ஆகிய கோட்பாடுகளிலும். அந்நிய கோட்பாடுகளான

கிருத்துவம். ஜூக்கள். மூரிஸ் ஆகியவற்றிலும் தாராளத்தன்மையுடன் நடந்து கொண்டனர். மக்கள் தங்கள் கடவுள்களை கும்பிட முழு சமய சுதந்திரத்தை அனுபவித்தனர். பார்போசா கூறுகிறார். “எந்தவிதமான சுதந்திரம் மன்னர் அனுமதிக்கிறார்என்றால் ஒவ்வொருவரும் வரலாம் போகலாம் அவரவர்சமயப்படி வாழலாம். பிறர்வசவு இன்றி விசாரணையின்றி அவர்கிருத்துவர். ஜூவா மூரிஸா ஹிந்துவா என்பது கூட பாராமல்” .

**இலக்கியம்**

விஜயநகர மன்னர்கள் காலத்தில் மொழி இலக்கிய வளர்ச்சிக்கு சான்று பகர்ந்தன. 14ஆம் நூற்றாண்டில் விஜய நகரத்தின் கலாச்சாரம் இலக்கியத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தமிழிலும். சமஸ்கிருதத்திலும் சிறந்த எழுத்தாளரான வேங்கடநாதா எனும் வேதாந்த தேசிகர்வைஷ்ணவத்தின் வடகலையை நிறுவினார். இவர்கிருஷ்ணரின் வாழ்க்கைப் பற்றிய மகாகாவியம். “யாதவ பின்தயம்” எனும் நூலை எழுதினார். சமண ஆசிரியரான மதுரா. புரானா. தர்மநாதா எனும் நூலை 1385ல் எழுதினார். பீமகவி ஒரு வீர சைவர்பசவ புராணம் எனும் நூலை 1369ல் படைத்தார். நச்சனா சோம போதனர். பீம வீரபத்ர. வினு கொண்ட வல்லப ஆகிய எழுத்தாளர்கள் இலக்கியத்திற்கு அரும்பணி செய்தனர். தெலுங்கில் கிருஷ்ணதேவராயர்ஆமுக்தமாலி யதாவை எழுதினார். இந்த நூல் சமயத்தைப் பற்றியது மட்டுமல்ல சிறந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்ததும் கூட.

**கலை. கட்டிடக் கலை**

விஜயநகர அரசர்களின் ஆட்சிக் காலத்தில் கலை கட்டிடக்கலை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. கிருஷ்ண

தேவராயர்காலத்தில் கட்டிய "ஸரா கோவில் குறிப்பிடத்தக்கது. லாங்ஹர்ஸ்ட் என்பவர்ஹஸரா கோவிலைக் குறிப்பிடுகிறார். "ஹிந்து கோயில் கட்டிடக்கலையின்ஒரு பூர்ணத்துவம் பெற்ற எடுத்துக்காட்டு" . வித்தல சுவாமி கோவில் விஜயநகர பாணியின் சிறந்த எடுத்துக்காட்டு. வண்ண ஓவியம் உன்னத நிலையை அடைந்தது. கலையும் இசையும் நன்கு வளர்ந்தது. கிருஷ்ண தேவராயரும் ராமராயரும் இசையில் மேதையாக விளங்கினர். நாட்டிலுள்ள மக்களின் பொழுது போக்கிற்கு கலை அரங்குகள் அமைக்கப்பட்டன.

**இந்தியாவில் போர்ச்சுகீசியர்**

மலபார்கடற்கரையிலுள்ள முக்கிய நாடாகவும் துறைமுகமாகவும் இருந்த கள்ளிக்கோட்டையை கி.பி.1498ல் வாஸ்கோடகாமா வந்திறங்கியதும் போர்ச்சுக்கீசியரின் இந்தியாவிற்கு புதிய கடல்வழிப் பாதையை ஏற்படுத்தும் பேரவா பூர்த்தியாயிற்று. இந்திய அரசர்களையும். வியாபாரிகளையும் போர்ச்சுகீசியர்கள் தாங்கள் கொண்டு வந்த பொருள்களைக் கொண்டு திருப்தி ஏற்படுத்த முடியாததால் இந்திய பொருட்களை வலிய வாங்க வேண்டியது வந்தது. அவர்களது நோக்கம் கிழக்கத்திய கடலில் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்படுத்த வேண்டும். தங்கள் படைபலம் கொண்டு இந்திய துறைமுகங்களில் வணிகர்களை வெல்லவும் தயாராயிருந்தனர். இந்திய கடற்கரை பகுதியில் (மேற்கு கடற்கரை) நிலச் சுவான்தார்களிடம் காணப்பட்ட போட்டி மனப்பான்மை சாதகமாகக் கொண்டு போர்ச்சுகீசியர்கள் தங்கள் நிலையை வலுப்படுத்தினர். மண்ணின் மைந்தர்கள் போர்ச்சுகீசியர்களை எதிர்த்த போது அவர்கள் கடலிலிருந்து கடற்கரை கிராமங்கள் மீதும். துறைமுகங்கள் மீதும். கிராமங்கள் மீதும் வெடிமருந்தை பயன்படுத்தி தீக்கிறையாக்கினர்.

கப்பலிலிருந்து இறங்கி கொள்ளையடித்தனர். தீயிட்டனர். கொன்றனர். பனைமரங்களை வெட்டினர். யாவற்றையும் அழித்தனர். ஏதேனும் விட்டு வைத்தார்கள் என்றால் அவற்றை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள எடுத்துச்சென்றவை தான். வாஸ்கோடகாமா இந்தியாவின் முதல் வருகையின் போது இந்திய துறைமுகங்களை அழித்தார்.இதைத்தொடர்ந்து காபரால் (1500). வாஸ்கோட காமா 1502). டி அல்புகாக் (1510-1511). வருகையால்போர்ச்சுகீசியர்கோவாவில் முக்கிய இடங்களை கைப்பற்றினர். அதன்பின் அப்பகுதி

போன்று முயற்சிக்கவும் இல்லை. ஏனென்றால் அதன் வாணிப நலன்கள் கடற்கரை பகுதிகளிலேயே இருந்ததால்தான். இந்தியப் பகுதியில் போர்ச்சுகீசியரின் கொடூரம் அப்பகுதியினரை சுரண்டியது. போர்ச்சுகீசியரின் சமயப்பொறை இன்மை கோவாவில் காணப்பட்டது. ஹிந்து கோவில்கள் இடிக்கப்பட்டன. சமயத்தின் பெயரால் அவர்கள் சித்திரவதை செய்தனர். இதனால் உள்நாட்டு மக்கள் கோபமுற்றனர். “இந்த பகுதியில் போர்ச்சுகீசியர்வர்த்தக ரீதியாக தங்களின் மேலாண்மையை நிறுவினர். கிழக்கு நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு அதனால் அதிகரித்தது. அதன் விளைவாக வெளியுகத்திலும் இந்தியாவின் பெருமளவிலான உறவு பாதிக்கப்பட்டு வளர்ச்சியும் பின்வாங்கியது” . அழிவை ஏற்படுத்தும் போர்கள், துறைமுக அழிவுகள் மலபார்கடற்கரையில் குறைந்த அளவில் இருந்த மக்கள் ஆகியவை வளர்ச்சியை பெரிதும் பாதித்தது. இந்த வளர்ச்சியினால் குஜராத்தில் போர்ச்சுகீசியரின் நலன்கள் நன்கு இருந்தன. போர்ச்சுகீசியருக்கும் இந்திய படைகளுக்கும் இருந்த

பகைமையில் போர்ச்சுகீசியர்தங்கள் படை ஆயுத பலத்தால் தங்கள் உடைமைகளை தக்கவைத்துக் கொண்டனர். இருப்பினும் இந்திய பொருங்கடலில் டச்சூ கப்பல்கள் வருகை போர்ச்சுகீசியரின் மேலான்மை குறைக்கப்பட்டது. இந்திய அரசர்கள் டச்சுக்காரர்களோடு கூட்டுச் சோந்து போர்ச்சுகீசியரை வெல்ல முனைந்தனர்.

**பாமினி அரசும் (கி.பி.1347-1526 ) தக்காணசுல்தான்களும்**

**அறிமுகம்**

இந்தப் பிரிவில் தென்னிந்தியாவில் தோன்றிய பாமினி அரசின் (கி.பி.1347 - கி.பி.1526) 12அரசர்களைப் பற்றியும் தக்காணத்தின் தோன்றிய ஐந்து சுல்தானிய அரசுகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நோக்கங்கள் இந்தப் பிரிவை மாணவர்படித்து முடித்த பிறகு பாமன் ஷா முதலாம் ஷா இரண்டாம் முகமது ஷா பிரோஸ் ஷா மற்றும் அகமது ஷா ஆகியோரின் காலத்தில் பாமினி அரசு கலை மற்றும் இலக்கியத்தில் உன்னத வளர்ச்சியடைந்தது என்றும் மூன்றாம் முகமது ஷாவின் காலத்தில் அவரது முதல் அமைச்சரான முகமது கவானின் செயல்களால் மிக உன்னத நிலை அடைந்தது. தக்கான அரசியலில் பிஜப்பூர், கோல்கொண்டா பெரார்பீடார் அகமது நகர்என்ற ஐந்து சுல்தானிய அரசுகள் முக்கியத்துவம் பெற்றன என்பதையும்
அறியலாம்.

**முன்னுரை**

சில காலம் தக்காணம் டில்லி சுல்தானத்தின் பகுதியாக இருந்தது. முகமது துக்ளக் ஆட்சியின் சிதைவிலிருந்து பாமினி அரசு தோன்றியது. கி.பி.1344ல் முகமது துக்ளக் ஆட்சியில் பல கலகங்கள் தோன்றின. தௌலதாபாத் தவிர அவர்தென்னிந்தியாவில் தமது உடைமைகளை இழந்தார்.

சுல்தான் தெற்கில் இல்லாத போது அவரது படைகள் சதிகாரர்களால் தோற்கடிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர்ஹசன் கங்கு. அவர்கி.பி.1347ல் தௌலதாபாத் அரியணையில் ஏறினார். அவர்அலாவுதீன் பாமன் ஷா என்ற பட்டத்தை வைத்துக் கொண்டார். இவர்நிறுவிய பாமினி மரபு 180 ஆண்டுகள் கி.பி.1526 வரை நீடித்திருந்தது. 1351ல் முகமது பின் துக்ளக் இறந்தார். அவரைத் தொடர்ந்து பிரோஸ் ஷா சுல்தான் ஆனார். கலவரங்களை ஒடுக்குவதில் தீவிரமாக இருந்ததால் தக்காண விஷயங்களில் அவர்தலையிட இயலவில்லை.

**ஆதாரங்கள்**

பாமினி அரசின் முக்கிய முஸ்லீம் எழுத்தாளர்பெஷ்டா அவர்பாமினி அரசு பற்றி எழுதியுள்ளார். அதனேசியஸ் நிகிடின் என்ற ரஷ்யா வணிகர் 1470லிருந்து 1474 வரை தக்காணத்தில் பயணம் செய்தார். அவர்பாமினி அரசு பற்றி எழுதியுள்ளார்.

**பாமினி அரசர்கள்**

**பர்மினி அரசை ஆட்சி செய்த மன்னர்கள் கீழ் வருமாறு:**

1. அலாவுதீன் ஹசன் ஷா பாமன் (1347-1338)
2. முகமது ஷா ஐ (1358-1377)
3. முஜாஹித், தாவுத்கான் (1377-1378)
4. இரண்டாம் முகமது ஷா (1378-1397)
5. கயாஸ்தீன், சாம்ஸூதீன் பிரோஷ் ஷா (1397-1422)
6. அகமது ஷா (1422-1435)
7. இரண்டாம் அலாவுதீன் (1435-1457)

8. ஹுமாயூன் (1457-1461)

9. நிஜாம் ஷா (1461-1463)

10. இரண்டாம் முகமது ஷா (1463-1482)

11. முகமது (1482-1518)

12. பிற்கால பாமினி சுல்தான்கள் (1518-1526)

சில அரசர்கள் பெயரளவில் ஆட்சி செய்து தங்கள் வாழ்க்கையைக் கழித்தனர். சில அரசர்களால் பாமினி அரசின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது. அவர்கள் பாமன் ஷா, முதலாம் முகமது ஷா, இரண்டாம் முகமது ஷா பிரோஸ் ஷா, அகமது ஷா ஆகியோராவர். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பாமினி அரசு கலை இலக்கியத்தில் மிகுந்த வளர்ச்சி பெற்றது. முகமது கவான் மந்திரியாக (1446-1481) இருந்த காலத்தில் பாமினி அரசு நல்ல (அந்தஸ்த்தை) நிலையை அடைந்திருந்தது.

**முதலாம் அலாவுதீன் (1347-1358)**

அலாவுதீன் ஹசன் அரியணை ஏறியவுடன் குல்பாகாவை அவரது தலைநகராக தேர்ந்தெடுத்தார் (தற்சமயம் ஆந்திராவில் உள்ளது). இவரது இராஜ்ஜியத்தை 4 பிராந்தியர்களாகப் பிரித்தார். குல்பாகா, தௌலதாபாத், பெரார், பிடார். இந்த பிராந்தியங்கள் கவர்னர்களின் அதிகாரத்தில் விடப்பட்டன. அவர்கள் அதிக அதிகாரம் உடையவர்களாக இருந்தனர். பாமன் ஷா அடிக்கடி பிராந்தியங்களை மேற்பார்வையிட்டார். கி.பி.1356ல் சுல்தான் தனது பதவியின் அங்கீகாரத்தை எகிப்திய காலிபினிடமிருந்து பெற்றார். இரண்டாம் அலெக்சாண்டர்என்ற பட்டம் இவரது நாணயத்தில் காணப்படுகிறது. இவர் 11 பிப்ரவரி 1358ல் மலேரியாவால் இறந்த பொழுது சிலரது இராஜ்யம் வடக்கே வெய்கங்கா

நதியிலிருந்து தெற்கே கிருஷ்ணா நதி வரை, தொளலதாபாத் மேற்கிலும் பாங்கிர்கிழக்கிலும் வியாபித்து இருந்தது.

**முகமது ஷா (1358-1375)**

முதலாம் முகமது ஷா, ஹசனின் மகன். ஹசன் இறப்பதற்கு முன் அவரால் நியமிக்கப்பட்டார். தந்தையைப் போன்று இவரும் வெற்றி கண்ட போர்வீரர். வாரங்கல் விஜயநகர ஹிந்து அரசர்கள் மீது போர்தொடுத்தார். வாரங்கல் அரசரிடம் அதிகமான கப்பம் தரும்படி கேட்பார். அவர்மறுத்ததால் முகமது ஷா வாரங்கல்லை தாக்கி பெரிய தொகையை பெற்றார். போர்இழப்பீடு தொகை பெற்ற பின் சிலர்சமாதான ஒப்பந்தம் செய்தார். கோல்கொண்டா கோட்டை பாமினி அரசுக்கு தரப்பட்டது. முதலாம் புக்கருக்கு எதிராக முதலாம் முகமது ஷா போரிட்டு அடோனியைப் பெற்றார். 1367 போரில் பல ஹிந்துக்களை தோற்கடித்தார். முகமது நிர்வாகத்திற்கு அதிக கவனம் தந்தவர். சாலை வழிப்பறியை ஒடுக்குவதற்கு கடுமையான ஏற்பாடுகளைச் செய்தார். பிராந்திய கவர்னர்கள் அதிக அதிகாரத்தோடு இருந்தனர். அவராலேயே நியமிக்கப்பட்ட படையை வைத்திருந்தார். எட்டு மந்திரிகள் கொண்ட ஆலோசனைக் குழு வைத்திருந்தார். இந்த அமைப்பு பாமினி அரசு வீழ்ச்சிக்குப் பின்னும் தொடர்ந்து செயல்பட்டது. 17ஆம் நூற்றாண்டில் சிவாஜிக்கு இது ஒரு முன் மாதிரிஅமைப்பாக உதவியது.

**முஜாஹித் ஷா (1375-1378)**

கி.பி.1375ஆம் ஆண்டு முதலாம் முகமது ஷா மகன் முஜாஹித் ஷா அரியணை ஏறினார். தாவுப்பில் ஹிந்து அரசர்சில கோட்டைகளை தன் வசம் வைத்துள்ளார்என்ற காரணத்திற்காக விஜயநகரமீது போர்தொடுத்தார். புக்கர்தோற்கடிக்கப்பட்டார். ஆனால் எதுவும் கைப்பற்ற முடியாத நிலையில்

தன் தலைநகர்திரும்பினார். மேலும் நாயரிடம் அமைதி ஏற்படுத்திக் கொண்டார். முஜாஹித் ஷாவின் உறவினர்தாவுத் ஷாவிற்கு இதை விரும்பவில்லை. எனவே சுல்தானைக் கொன்றார். பாமன்ஷாவின் பேரனில் ஒருவரான இரண்டாம் முகமது அரசராக அறிவிக்கப்பட்டார்.

**இரண்டாம் முகமது ஷா**

இரண்டாம் முகமது ஷா ஒரு அமைதி விரும்பியும் கலை இலக்கியங்களில் நாட்டம் கொண்டவர். இவரது ஆட்சி அந்நியப் படையெடுப்புகளால் தொந்தரவுக்குட்படுத்தப்படவில்லை. இவர்மசூதிகளைக் கட்டினார், பல இலவச கல்வி நிலையங்களை தோற்றுவித்தார். தமது அரண்மனைக்கு கற்றறிந்த கல்விமான்களை வரவழைத்தார். இவரைக் கண்டு வியந்தோர்சிலருக்கு இரண்டாம் அரிஸ்டாடில் என்ற பட்டம் வழங்கினர். இவரது கடைசிக் காலம் அரண்மனை சதிகளாய்

கசந்து போகச் செய்தது. கி.பி.1397ல் காய்ச்சலால் இவர்இறந்தார்.

**பிரோஸ் ஷா (1397-1422)**

பிரோஸ் ஷா ஒரு பெரிய வீரர்இரண்டாம்nஹரிஹரரின் மகன் புக்கரின் செயலால் பாமினி அரசுக்கும் விஜய நகருக்கும் இருந்த நீடித்த அமைதி ஒப்பந்தம் முறிந்தது. 1406ல் முதலாம் தேவராயர்மத்கல் பகுதியில் இருந்த ஒரு தங்க ஆசாரியின் அழகிய மகள் நிகாலாவை கடத்த முயற்சி செய்தார். நிகால் முதலாம் தேவராயரை விரும்பவில்லை மாறாக அவள் ஒரு முஸ்லீமையே மணக்கப் போவதாகக் கூறினாள். தேவராயர்அந்தப் பெண்ணைத் தேடி படையை அனுப்பினார். பிரோஸ் ஷா எதிர் கொள்ள தமது படைகளை அனுப்பினார். பிரோஸ் ஷா தேவராயரின் மகளை தனக்கு திருமணம் செய்து வைக்க பலவந்தப்படுத்தினார். போருக்குக் காரணமான

நிகாலுக்கு தனது மகனுக்கு திருமணம் முடித்து வைத்தார். கி.பி.1419ல் பிரோஸ் ஷா விஜயநகரபகுதியான பொங்கல்லை தாக்கினார். ஆனால் தோல்வி கண்டார். கி.பி.1422 மனமுடைந்தவராக இறந்தார்.

**அகமது ஷா (1422-1435)**

கி.பி.1422ல் வாரங்கல்லின் ஹிந்து அரசரை அகமது ஷா. தோற்கடித்தார். அப்பகுதியை தன் நாட்டோடு இணைந்தார். விஜயநகரப் பேரரசின் ஆட்சியாளார்இரண்டாம் தேவராயருக்கு எதிராக போர்தொடுத்து அவரை அமைதி நாடச் செய்தார். இவர்தமது தலைநகரை குல்பாகாவிலிருந்து பிடாருக்கு மாற்றினார். பாமன் நாமா எனும் நூலை தொடுக்கச் செய்தார்அது பாமினி வரலாறு பற்றியநூல். துரதிருஷ்டவசமாக அது தொலைக்கப்பட்டுவிட்டது.

**மூன்றாம் முகமதுவும் முகமது கவானும்**

மூன்றாம் முகமது ஷா (1463-1482) ஆட்சிகாலம் பாமினி ஆட்சியின் உச்சத்தையும் வெற்றியையும் கண்டது. இவருக்குப்பின் வீழ்ச்சி துவங்கியது. முகமது கவான் முதல் மந்திரியாக செயலாற்றி நாட்டிற்கு விசுவாசமாக உழைத்த அவர்ஒரு சதித்திட்டத்திற்கு இறையாகி கி.பி.1481ல் கொல்லப்பட்டார். அதன்பின் பாமினி அரசு சிதைந்து ஐந்து தனி முஸ்லீம் நாடுகளாக தோன்றின. ஆவைகள்

- பிஜப்பூர்
- கோல்கொண்டா
- பிடார்
- பெரார்
- அகமது நகர்.

**முகமது கவான்**

பாரசீகத்தில் கவான் எனும் இடத்தில் 1411ல் முகமது கவான் பிறந்தார். அவர்இரண்டாம் அலாவுதீனிடம் பணியில் சேர்ந்தார். இவரது சிறந்த திறமைகளை ஹூமாயுன் அங்கீகரித்தார்கவான். ஹூமாயுன் நிஜாம் ஷா மூன்றாம் முகமது ஷா ஆகியோர்களிடம் பணியாற்றியுள்ளார். முகமது கவான் எளிய வாழ்வை மேற்கொண்டார். ஒரு. நாளில் நான்கு ஷில்லிங்தான் செலவழித்தார். பாயில்படுத்து உறங்கினார். மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார். இவரது செல்வம்யாவும் பிடாரில் ஏற்படுத்திய முஸ்லீம் கல்லூரிக்கு செலவிட்டார். இவரது தூய உண்மையான சீர்திருத்தங்கள். இவரது திறமை போரில், வீரம் பொது வாழ்விலும், தனி வாழ்விலும் அவரிடம் இருந்த உண்மையாவும் ஒன்று திரட்டினால் அதற்கு இணை இல்லை, என்று மெடோஸ் டெய்லர்கூறுகிறார். அவர்ஒரு கல்விமான், கணித அறிவில் புலமை பெற்றிருந்தார். அவர்ஒரு கவிஞர். அவரது பெரும்பாலான வருவாயை தர்மத்திற்குப் பொது நலனிற்கும் செலவிட்டார்.

**முகமது கவானின் நிர்வாகம்**

மூன்றாம் முகமது ஷாவின் முதல் மந்திரிமுகமது கவான் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி பாமினி அரசை வலுப்படுத்தினார். அதிக அளவிலான அதிகாரங்கள் அவர்பெற்றிருந்தும் ஒரு பொழுதும் அவருடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதில்லை. மாசுமருவற்ற விசுவாசம், திறமையான இராஜதந்திரம், வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகள் ஆகியவற்றால் முகமது கவான் பாமினி அரசை இதற்கு முன் எந்த அரசராலும் அடையமுடியாத சாதனையை அடையச் செய்தார். இவர்நான்கு மாநிலங்களை ஒவ்வொன்றும் இரண்டு மாநிலங்கலாக்கி மொத்தம் 8

மாநிலங்களாக மாற்றினார். இதனால் அதிக அதிகாரம் பெற்றிருந்த கவர்னர்கள் கட்டுப்படுத்தபட்டனர். இவர்ஒரு பாரசீகராக இருந்தாலும் அவரது ஆட்களுக்கு என எந்த ஒரு முறையற்ற ஆதரவும் தரவில்லை. நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். விவசாயம் செழிக்க பல நீர்பாசன திட்டங்களை மேற்கொண்டார், வரிசலுகை செய்து விவசாயிகளின் சுமையை குறைத்தார். இராணுவ அமைப்பை முற்றிலும் மாற்றினார். பல வசதிகள் படைவீரர்களுக்குத் தரப்பட்டது. அவரது சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆனால் கடுமையான கட்டுப்பாடு அவர்கள் மீது விதிக்கப்பட்டது. நடப்பில் இருந்த ஜாகிர்தார்முறை சீர்திருத்தப்பட்டது. இராணுவ அதிகாரம் இதற்கு முன் ஜாகிர்தார்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதை அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டார். அதிகாரம் மையப்படுத்தப்பட்டு சுல்தானின் அதிகாரம் அதிகரித்திருக்கும்படி செய்தார். இவ்விதம் படை திறமையானதாக இருந்தது. இவரது சீர்திருத்தங்கள் நிதி நீதி கல்வியாவற்றிலும் பரவியிருந்தது. உபயோகமற்ற செலவுகளைத் தவிர்த்து பொருளாதார சிக்கனத்தால் பெரியதொரு தொகையை நாட்டிற்கு சேர்த்து வைத்தார்.

**கவானின் படைவெற்றிகள்**

முகமது கவான் ஒரு பெரிய நிர்வாகி மட்டும் அல்ல தைரியமான வீரரும்கூட. வலிவற்ற அரசர்களுக்கு பதிலாக பாமினி அரசு முகமது கவானின் திறமையால் அதன் எல்லைகளின் விரிவாக்கம் கண்டது. விஜயநகர் கொங்கன் , ஒரிஸா ஆகியவற்றின் அரசர்களுக்கு எதிராக வெற்றிகரமான போர்நடத்தினார். அதனால் பல முக்கிய பகுதிகளைப் பெற்றார்.

**இவரது பிற பணிகள்**

இவர்கலை இலக்கியம் கல்வி ஆகியவற்றின் ஆதரவாளர். பள்ளிகளையும் கல்லூரியையும் ஆரம்பித்தார். பிடாரில் இவரால் ஏற்படுத்தப்பட்ட கல்லூரிஇவரது பெயரில் முகமது கவான் மதரஸா அழைக்கப்பட்டது.

**முகமது கவான் கொலை செய்யப்படுதல்**

எதிரியால் ஏற்படுத்திய சதிக்கு முகமது கவான் இறையானார். அதிகமாக குடித்த மன்னன் மனோநிலை தடுமாறிய நிலையில் முகமது கவானை கொல்வதற்கு ஆணையிட்டார். அவ்வாறே 5 ஏப்ரல் 1481ல் கவான் கொல்லப்பட்டார். பாமினி அரசு ஒரு திறமையான வழிகாட்டியை இழந்தது. சுல்தான் சீக்கிரமாகவே தன் தவறைஉணர்ந்தான். துயரத்தில் மூழ்கினான். இதன் பின் பல பிரபுக்கள் சுல்தானுக்கு ஆதாரித்து துணை புரியவில்லை. ஓராண்டிற்குள் சுல்தான் 22 மார்ச் 1482ல் இறந்தார்.

**பாமினி அரசு பிரிதல்**

தக்காணத்தில் ஐந்து சுல்தானியங்கள் ஒன்றின் பின் ஒன்றாக பாமினி அரசின் முறிவிலிருந்து எழுந்தது. அவைகள் அவற்றை தோற்றுவித்தவர்களின் பெயரால் அழைக்கப்பட்டன. அவைகள்

1. பெராரின் இமத் ஷாகி மரபு
2. அகமது நகரின் நிஜாம் ஷாகி மரபு
3. பிஜப்பூரின் அடில் ஷா மரபு
4. கோல்கொண்டாவின் குதுப் ஷாகி மரபு
5. பிடாரின் பரித் ஷாகி மரபு.

**பெரார்**

பத்ரிஎன்ற ஒரு நகர்அகமது நகர்தனது பகுதி என்று உரிமை கொண்டாடியதால் மராருக்கும் அகமது நகருக்கும் போர்ஏற்பட்டது. விஜயநகருக்கு எதிராக அகமது நகர்கூட்டுச் சேர்ந்தபோது பிரார்நடுநிலை வகித்தது. கலைக்கோட்டை (1365) போருக்குப் பின் முஸ்லீம் நாடுகள் பெராரை தண்டிக்க விரும்பின. இதற்கிடையே பெராரில் ஒரு கலகம் ஏற்பட்டது. அதில் அதன் சுல்தான் பாஹர்ன் இமாம் ஷாவை வீழ்த்தி விட்டு அவரது மந்திரிடாபல்கான் ஆட்சியைக் கைப்பற்றினார். அகமது நகர்கி.பி.1572ல் பெராரைக் கைப்பற்றியது. டாபல் கான் தோற்கடிக்கப்பட்டார். பெரார்அகமது நகருடன் கி.பி.1374ல் இணைக்கப்பட்டது.

**அகமது நகர்**

மாலிக் அகமது நிஜாம் ஷாகி மரபை ஏற்படுத்தினார் இவரது தந்ைத பாமினி அரசின் முதல் மந்திரியாவார். 1490ல் மாலிக் அகமது தன்னை சுதந்திர அரசராக அறிவித்து அகமது நகரைத் தலைநகராக்கினார். கி.பி.1499 இவர்தொளலதாபாத் கைப்பற்றி தனது நாட்டை ஒருங்கிணைத்தார். கி.பி.1508ல் இவர்இறந்தபின் முதலாம் பாகான் அரியணை ஏறினார். கி.பி.1565 ஹுசைன் நிஜாம் ஷா விஜய நகருக்கு எதிரான முஸ்லீம் கூட்டில் சேர்ந்தார். அப்பொழுது அகமது நகரில் குழப்பம் ஏற்பட்டது. அதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு முகலாய பேரரசர்ஷாஜஹான் படைகளை அனுப்பி அகமது நகரை தோற்கடித்து அதனை முகலாயப் பேரரசோடு இணைத்தார்.

**பிஜப்பூர்**

பிஜப்பூர்கவர்னர்யுசுப் அடில் கான் கி.பி. 1489ல் தன் பகுதியின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினார். ஆரம்பத்தில் இவர்ஜியார்ஜியன்

அடிமையாவார். முகமது கவர்னரால் விலைக்கு வாங்கப்பட்டவர். தனது திறமையால் முன்னுக்கு வந்தார். பாரசீகத்தில் சில காலம் இருந்ததால் ஷியா பிரிவை தேர்ந்தெடுத்தார். இவரைப் பின்பற்றி வந்த அரசர்களும் ஷியா மதத்தையே பின்பற்றினர். நில வருவாயில் சீர்திருத்தம் செய்தார். அலி அடில் ஷா அவர்பலஹிந்துக்களையும் மராத்தியர்களையும் பணியில் சோத்துக் கொண்டார். கிருத்துவ மிஷனரிகளுக்கு பாதுகாப்பளித்தார். 1626ஆம் ஆண்டு அவர்இறக்கும் வரை அலி அடில் ஷா தனது நாட்டில் சமயப் பொறையைக் கடைப்பிடித்தார். 1686ல் ஔரங்கசீப் பிஜப்பூரை தோற்கடித்து முகலாய சாம்ராஜ்யத்தோடு சேர்த்தார்.

**கோல்கொண்டா**

குதுப் உல் முல்க் 1512ல் குதுப் ஷாகி மரபை ஏற்படுத்தினார். கோல்கொண்டா தனி நாடாக ஆயிற்று. சுல்தானியங்களில் இரண்டாவது பெரிய நாடு கோல்கொண்டா. கிழக்கு கடற்கரை, கிருஷ்ணாவிற்கும் கோதாவரிக்கும் இடைப்பட்ட பகுதியை நாடு உள்ளடக்கியிருந்தது. இப்ராஹிம் குதுப் ஷாகி காலத்தில் வாரங்கல்" கோல்கொண்டாவோடு இணைக்கப்பட்டது. முகமது குலி (1580-1612) கோல்கொண்டாவின் எல்லையை விரிவுப்படுத்தினார் . ஹைதராபாத்தை உருவாக்கினார். அப்துல்லா குதுப் ஷா கி.பி.1635ல் முகலாயரின் மேலான்மையை ஏற்றுக்கொண்டார். மிர்ஜூம்லாவால் தூண்டப்பட்டு ஔரங்கசீப் கோல்கொண்டாவைத் தாக்கி கோல்கொண்டா சுல்தான் அடில் ஹர்சனைத் தோற்கடித்து கோல்கொண்டாவை முகலாய பேரரசோடு இணைத்துக் கொண்டார்.

**பிடார்**

பிடாரில் பரித் ஷாகி பரித் ஷாகி மரபை தோற்றுவித்தார். 1619ல் பிஜப்பூர் எதிராக பிடார்பல போர்கள் புரிந்தன. பிஜப்பூரின் இரண்டாம் இப்ராஹிம் அடில் ஷா பிடாருக்கு எதிராக போரிட்டு அதன் ஆட்சியாளர்இரண்டாம் அலி பரித்தை தோற்கடித்தார். பிஜப்பூரோடு பிடார்இணைக்கப்பட்டது. கி.பி.1656ல் ஔரங்கசீப் பிடார்கோட்டையை முற்றுகையிட்டு முகலாய பேரரசோடு இணைத்துக் கொண்டார்.

**சுய மதிப்பீட்டு கேள்விகள்**

1. குதுபுத்தீன் ஐபக்கிற்கு முன் உள்ள பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளை நோக்கி அவர் எடுத்த முயற்சிகளையும் விளக்கவும்.

…………………………………………………………………………….

2. கில்ஜியின் நிர்வாக அமைப்பை விளக்குக.

…………………………………………………………………………….

## இயல் - III

முகலாய பேரரசின் அடித்தளம்: பாபரின் மத்திய ஆசிய அனுபவம் - பாபரின் படையெடுப்பிற்கு முன்னதாக இந்தியா - வட இந்தியாவில் பேரரசுக்கான போராட்டம் - ஆப்கானிய சர்வாதிகாரத்தின் முக்கியத்துவம் - ஷெர்ஷா சூரின் எழுச்சி; விரிவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு- அக்பரின் அரசியல் கட்டம்; புதிய ஏகாதிபத்திய அமைப்பு மற்றும் நிர்வாகம்; முகலாய பிரபுக்கள், மன்சப்தாரி முறை- ஜாகிர்தாரி அமைப்பு- நூர்ஜஹான் ஜுண்டா - முகலாயர்கள் மற்றும் வடமேற்கு எல்லை - ஷாஜகான் மற்றும் அவரது பங்களிப்பு.

**நோக்கங்கள்**

- ✓ முகலாயப் பேரரசின் ஸ்தாபனம் மற்றும் பரிணாமத்தைப் புரிந்துகொள்வது.
- ✓ ஷெர்ஷா சூர் படையெடுப்பைப் புரிந்துகொள்வது
- ✓ அக்பரின் ஆட்சியைப் புரிந்து கொள்ளுங்கள்; புதிய ஏகாதிபத்திய அமைப்பு மற்றும் நிர்வாகம்.

### முகலாயர்ஆட்சி நிறுவப்படுதல்

கி.பி.1526 முதல் கி.பி.1556 இடைப்பட்ட கால இந்திய வரலாறு என்பது முதன்மையாக முகலாயர்களுக்கும் ஆப்கானியர்களுக்கும் இந்த நிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்த ஏற்பட்ட போட்டி என்றே கூறலாம். கடந்த காலத்தில் மங்கோலியர்கள்இந்தியாவின் மீது சில முறை படையெடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்திய பிரதேசங்களை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவில்லை.

மேலும் அவர்களுக்கு அத்தகையதோர் முதன்மையான நோக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் பொருள், செல்வம் மற்றும் பொன்னின் மீதுள்ள தங்களின் பேராசையை தனித்துக்கொள்ள இந்திய மாநகரங்கள் மற்றும் நகரங்களை, குறிப்பான வடமேற்கு இந்திய பகுதிகளை சூரையாடியும் கொள்ளையடித்தும் சென்றிருந்தனர். எதிர்பாராதவிதமாக, அவர்களின் ஓரிரு இந்திய படையெடுப்புகளின் போது, கணிசமான அளவில் சில மங்கோலியப் படைவீரர்கள் இந்தியாவிலேயே தங்கி, இசுலாமிய மதத்திற்கு மதம் மாறி அப்போதைய டில்லி சுல்தானிய அரசுக்கு கட்டுப்படுவதாக அறிவித்து குடியேறிவிட்டனர். பிற்காலத்தில் அவர்கள் "புது இசுலாமியராக" அழைக்கப்பட்டனர். இத்தகையோர்இந்திய மக்கள் அமைப்பில் சேர்ந்த ஒரு புது அங்கத்தினராகிவிட்டனர். சில நேரங்களில் இப்புது பிரிவினர், துருக்கிய ஆப்கானிய சுல்தான்களுக்கு பெரும் பிரச்சினையாகவும் இருந்தனர்.

**டில்லி சுல்தானிய அரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

மங்கோலியர்களின் தொடர்ச்சியான மற்றும் இடைவிடாத போர்களும் ஒரு முக்கிய காரணமாகும். ஆனால், தைமூரின் படையெடுப்பும், அவர்கள் பஞ்சாபை வென்று தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த செயலும் கொண்டிருந்த டில்லி சுல்தானிய ஆட்சிக்கு சீக்கிரத்தில் முடிவைக் கொண்டு வந்தது எனலாம். தைமூரின் சந்ததியைச் சேர்ந்த பாபர்என்பவர்தொலைநோக்குடன்தனது

விடாமுயற்சியால் வடஇந்தியாவை வென்று பிற்காலத்தில் இந்தியாவின் பெரியதோர்முகலாய பேரரசை ஏற்படுத்த உள்ளார்என்பது இந்நிகழ்ச்சியில் தெரியவருகிறது. அந்த ஆட்சி, துருக்கிய வம்சத்தை சேர்ந்ததாக கருதப்படுகிறது. முகலாயர்கள் குறிப்பாக சாங்டை துருக்கிய இனத்தின் ஒரு பிரிவினைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் செங்கிஸ்கான் என்கிற புகழ் வாய்ந்த மங்கோலிய தலைவனின் இரண்டாவது மகனான சாங்டையின் பேரால் அழைக்கப்படுகின்றனர். மத்திய ஆசியா மற்றும் துருக்கிஸ்தான் பகுதிகள் அப்போது செங்கிஸ்கானின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தன. முகலாயர்இந்திய படையெடுப்பை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அறியலாம். முதல் பிரிவில் கி.பி.1526-கி.பி.1530-க்கான கால கட்டத்தில் பாபரின் படையெடுப்புகள் - குறிப்பான அந்த காலகட்டத்தில் அவரால் ஆப்கானியர்கள் தோற்கடிக்கப்பட்டது. ராணா சங்காவின் தலைமையிலான ராஜபுத்திரர்களும் வெல்லப்பட்டது ஆகும். கி.பி.1530-கி.பி.1540-க்கான கால கட்டம் ஹூமாயூனின் ஆட்சிக்காலம். இது இரண்டாவது பிரிவாகும். ஹூமாயூனின் போர்கள், கண்ட தோல்விகள் மற்றும் அவர்எங்ஙனம் ஷெஷாவில் இந்தியாவிலிருந்து துரத்தப்பட்டது போன்ற சங்கதிகள் இப்பிரிவில் அடங்கும். ஷெர்ஷா சூரின் வருகையால், மீண்டும் இந்தியாவில் ஆப்கானியரின் அதிகாரம் நிலைநிறுத்தப்படுகிறது. மூன்றாவது பிரிவுக்கான காலகட்டம் கி.பி.1545-கி.பி.1556 ஆகும். இக்காலத்தில் ஹூமாயூன் மீண்டும்

முகலாய பிரதேசங்களை வென்று ஆட்சி செய்கிறார். அவ்வாட்சி பின்னால், அக்பரால் நிலைநிறுத்தப்பட்டு விரிவாக்கம் செய்யப்படுகிறது.

**பாபர் (கி.பி.1526-கி.பி.1530)**

பாபர்சாக்டெய் துருக்கிய இனத்தைச் சேர்ந்தவர். அவரது தகப்பனார்வரிசையில் அவர்தைமூர்இனத்தைச் சேர்ந்தவர். தாய் வரிசையில் செங்கிஸ்கான் வரிசையைச் சேர்ந்தவராவார். பாபர்கி.பி.1494-ம் ஆண்டில், அவர்பதினோறு வயது இளைஞராய் இருக்கும் போது பர்கானா என்கிற சிறு நகரத்தை ஆளும் உரிமையை தனதுதகப்பனாரிடமிருந்து பெற்றார். இப்போது அது சீன துருக்கிஸ்தான் மாகாணத்தில் உள்ளது. ஆரம்ப காலத்திலேயே அவருக்கு பல பிரச்சினைகள் தொல்லைகள் ஏற்பட்டன. ஆனால் அவையாவும் அவரை மிகுந்த துணிவுள்ளவராயும் உறுதியுள்ளவராயும் மாற்றின. தனது தந்தையாரிடமிருந்து பெற்ற பர்கானா பகுதியை எதிரிகளுக்கு இழந்த பாபர்மீண்டும் அதனைப் பெற மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

கி.பி.1497லும் கி.பி.1503லும் அவர்சாமர்கண்ட நகரைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. ஏனெனில் அவரது சொந்த உறவினர்களே தைமூர்ஆண்ட அப்பகுதியை பாபர்அடைவதை விரும்பவில்லை. இத்துடன் அவரால், பர்கானாவை மீண்டும் வெல்ல எடுத்த முயற்சிகள் அவரது வலிமை வாய்ந்த பகைவரால் முறியடிக்கப்படவே அவரது பிரச்சினைகள் அதிகரிக்கத்தான் செய்தன.

அதனால் அவர், வீடில்லாத நாடோடியாக சுமார்ஒரு வருடம் தன்னுடைய நண்பர்களின் உதவியை நாடினார். ஆனால் அவர்துன்பகாலங்களிலும் தன்னம்பிக்கை இழக்காத துணிவாளராக இருந்தார். அவரது முன்னோரான தைமூரின் போர்வலிமைகள் அவருக்கு ஏதம் பூட்டின. இந்துஸ்தானத்தை வென்றெடுக்க பெரியதோர்திட்டத்தை தீட்டினார். மத்திய ஆசியாவில் காபூலில் ஏற்பட்ட குழப்பமான நிலையற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி கி.பி.1504-ல் அதனைக் கைப்பற்றினார். காபூலில் ஏற்பட்ட வெற்றிக்களிப்புடன், பாரசீக மன்னன் ஷா இஸ்மாயில் சஃபாவின் உதவியுடன் கி.பி.1511-12ம் ஆண்டுகளில் சாமர்கண்டை கைப்பற்ற முயற்சித்தார். ஆனால் அம்முயற்சியில் தோல்வியே கண்டார். தோல்வியால் துவண்டு போகாமல் இந்துஸ்தானத்தின் மீது போர்த்தொடுக்க ஆயத்தமானார். பாபாகி.பி.1512-ம் ஆண்டு முதல் அடிக்கடி, அவர்இந்திய நகரங்களை தாக்கியும்பொருள்களை கொள்ளையடித்தும் வந்தார். ஆனால் எப்பகுதியையும் அவர்கைப்பற்றவில்லை. கடைசியாக, சந்தர்ப்பங்கள் சாதகமாக வந்த தருவாயில் கி.பி.1526-ம் ஆண்டில், இந்துஸ்தானத்தின் மையப் பகுதியை நோக்கி, அதனை கைப்பற்றும் எண்ணத்துடன் படையெடுத்தார்.

**பாபர்படையெடுப்பின் பொழுது இந்தியாவில் நிலை**

அச்சமயத்தில் தில்லி சுல்தானிய அரசு வலிமை இழந்த நிலையில் பெயரளவுக்கு அரசாய் இருந்தது. அது அமைப்பு ரீதியை இழந்து ஒற்றுமையின்றி, யாரும் கவனிப்பாரற்று ஆப்கானிய சீமான்களிடையே சண்டை ஏற்பட்டு அழிந்தொழியும் நிலையில் இருந்தது. அத்தகைய ஆப்கானிய சீமான்களில் இருவர்இந்தியாவைத் தாக்க பாபருக்கு அழைப்பு விடுத்தனர். தில்லி சுல்தானிய அரசின் கடைசி அரசன் இப்ராகிம் லோடி, ஆப்கானிய சீமான்களை சந்தேகித்து, அவர்கள் தனது ஆட்சிக்கு எதிரானவர் என்று அவர்களுக்கு பல கொடுமைகளை இழைத்து வந்தான். லாகூரின் கவர்னராக இருந்த திலாவாகான் லோடியின் மகனான தொளலத்கான் லோடியை, இப்ராகிம் லோடி சிறுமைப்படுத்தியதால் பிரச்சினை அதிகமானது. மேலும் ஆலம்கான் லோடி என்கிற இப்ராகிம் லோடியின் நெருங்கிய உறவினர். அவனும் இப்ராகிம் லோடிக்கு எதிராக போர்க்கொடி தூக்கி தானே தில்லி சுல்தானிய அரசுக்கு சுல்தானாக விரும்பினான். இப்ராகிம் லோடியின் அரசு மீது பெறும் அதிருப்தி ஏற்பட்டவுடன் தௌளலத்கான் லோடியும் ஆலம்கான் லோடியும் இணைந்து கி.பி.1524-ம் ஆண்டில், தைமூர்இனத்தைச் சேர்ந்த காபூல் மன்னரான பாபரை இந்தியாவின் மீது போரிட அழைப்பு விடுத்தனர்.

## வெற்றிகள்

மேவரின் மன்னனான ராணா சங்கா இப்ராகிம் லோடியுடன் ஒத்துப்போக முடியவில்லை இருவரும் பகைமை பாராட்டினர். அவர்களுக்கிடையே அரசியல் ரீதியாக போட்டியும் இருந்தது. டில்லி சுல்தானிய அரசை எப்படியும் கைப்பற்ற வேண்டும் என்கிற ஆசை இருந்தது. பாபர்ஒரு வலிமை வாய்ந்த படையுடன் இந்தியாவின் மீது படையெடுத்து வரும் போது, அவரின் சாம்ராஜ்யத்தை அமைக்கும் நோக்கத்தை ராணா சங்கா அறிந்திருக்கவில்லை. இப்ராகிம் லோடியை டில்லி அரியாசனத்திலிருந்து எப்படியாவது அகற்றிவிட வேண்டும் என்பதற்காக, பாபருக்கு உதவுவதாக ராணா சங்கா வாக்களித்தார். இந்தியாவின் மீது இதற்கு முன்னால் படையெடுத்து வந்த அயல்நாட்டவர்போன்று பாபரும் இப்ராகிம் லோடியை தோற்கடித்து விட்டு, அவருக்கு தேவையான அளவுக்கு வென்ற பகுதிகளை கொள்ளையடித்துவிட்டு தன் நாட்டுக்கு திரும்பிய பிறகு, டில்லியை எளிதில் கைப்பற்றி ஆளலாம் என்கிற நப்பாசையுடன் ராணா சங்கா, பாபருக்கு உதவ முன்வந்தார். பாபர், இந்தியாவில் இருந்து வந்த அழைப்புக்களை ஏற்று,

கி.பி.1524-ம் ஆண்டில் பஞ்சாபில் நுழைந்து லாகூரைக் கைப்பற்றினார். ஆனால் விரைவிலேயே, பாபருக்கு ஒத்துழைப்பு அளித்தவர்களான தொளலத்கானும் ஆலம்கானும், பாபர் உண்மையிலேயே இந்தியாவை வென்று தம் அரசை ஏற்படுத்தும்

நோக்கத்துடன் இருக்கிறார்என்பதை உணர்ந்து கொண்டனர். தங்கள் தவறுக்கு வருந்தி, பாபருக்கு தாங்கள் அளித்து வந்த உதவியை விலக்கிக் கொண்டனர்.அவருக்கு எதிராக செயல்படலாயினர். இந்திய மண்ணில் அவருக்கு எதிர்ப்பு வலுப்பெறவே, பாபர்காபூலுக்கு திரும்பிச்சென்று பெரும்படையை திரட்டி, டில்லியை கைப்பற்ற முயன்றார். காபூலுக்குத் திரும்பிய ஒரு வருட காலத்திற்குள்

கி.பி.1525-ம் ஆண்டில் இந்தியாவுக்கு திரும்பி, பஞ்சாபை மீண்டும் கைப்பற்றினார். தௌலத்கான் லோடியை பணியவைத்தார். இவ்வெற்றி கிடைத்த ஐந்து மாதங்களுக்குப் பிறகு, ஏப்ரல் மாதம் கி.பி.1526-ம் ஆண்டில் பாபர்இப்ரகிம் லோடியை வரலாற்று சிறப்புமிக்க பானிபட் என்கிற போர்க்களத்தில் இப்ரகிம் லோடியை சந்தித்தார். பாபரின் படை 12000 போர்வீரர்களைக் கொண்டது. அவர்களுக்குத் துணையாக, ஒரு பெரிய துப்பாக்கிப்படையும் இருந்தது. அதுதான் பாபர்படையின் வலிமை வாய்ந்த ஆயுதமாய் இருந்தது. ஆனால் இப்ரகிம் லோடியின் படையோ மிகப்பெரியது. ஒரு இலட்சம் படைவீரர்களைக் கொண்டதாக இருக்கலாம் என்பதே பாபரின் கணிப்பு. ஆனால் பாபரின் படை வலிமையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இப்ரகிம் லோடியின் படை திறமையும் ஏற்றுமையும் எந்தவித நோக்கமும் வேகமும் இல்லாத பெரும்படையாகவே இருந்தது. மேலும் இப்ரகிம் லோடி பாபரைப் போன்று ஒரு பெரும் திறமை வாய்ந்த படைத்தளபதி அல்ல. இத்தகைய பெரும் திறமை வாய்ந்த படை மற்றும் துப்பாக்கி படையின் உதவியுடன்

, சாதுர்யமான அணுகுமுறையுடன், பாபர்இப்ரகிம் லோடியை படைக்காலத்தில் தோற்கடித்தார்

பாபரின் படையை எதிர்த்தும், பாபரின் பெரும் வலிமையுடன் திகழ்ந்த துப்பாக்கி படைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. பாபரின் துப்பாக்கிப் படை இப்ரகிம் லோடியின் பெரும்படையை அழித்தது. இறுதியாக, இப்ரகிம் லோடி பெரும் படையுடன் தோல்வியுற்று மண்ணைக் கவ்வியது. இந்த வெற்றிக்குப் பிறகு பாபர்டில்லியையும் ஆக்ராவையும் எளிதில் கைப்பற்றினார். இப்ரகிம் லோடிக்கு எதிரான இம்மாபெரும் வெற்றியானது, பாபருக்கு பெரும் தெம்பையும் நம்பிக்கையையும் அளித்தது. மேலும் இந்தியாவின் சில முக்கிய பகுதிகளை வெல்லவும் அவர்துணிந்தார். டில்லியை வென்ற பிறகு, பாபருக்கு தனது கனவு சாம்ராஜ்யம் வெகு தொலைவில் இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் அவர்இன்னும், வலிமை வாய்ந்த ஆப்கானிய படை வீரர்களையும், ராணா சங்காவின் தலைமையிலுள்ள ராஜ்புத்திரர்களையும் தோற்கடிக்க வேண்டியுள்ளது. டோப்பை பாபர்கைப்பற்றினார். இதைத் தொடர்ந்து டோப்புக்கு வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கிலிருந்து எதிர்ப்பு தொரிவித்த ஆப்கானிய சீமான்களும் அடக்கப்பட்டனர். ஆப்கானிய சீமான்களை அடக்கிய பிறகு, பாபர், ராஜபுத்திர தலைவரான ராணா சங்காவை வெல்ல பெரும்படை ஒன்றை தயார்செய்து கொண்டார். பாபர்இந்துஸ்தானத்தில் தனது அரசை ஏற்படுத்த முயற்சிப்பதாக ராணா சங்கா புரிந்து கொண்டார். அவரது

அரசை ஏற்படுத்தும் ஏகாதிபத்ய நோக்கத்தை முறியடிக்க ராணா சங்கா தீர்மானித்தார். அவர், பாபருக்கு எதிராக வீழ்த்தப்பட்ட ஆப்கானிய சீமான்களையும், லோடி அரசின் இசுலாமிய ஆதரவாளர்களையும் இணைத்து கூட்டு சேர்த்தார். ஆனால் ராணா சங்கா எதிர்பார்த்தபடி எல்லா அதிருப்தி ஆப்கானிய சீமான்களையும் அவரால் பாபருக்கு எதிராக ஒன்று சேர்க்க முடியவில்லை. ஏனெனில் அந்த ஆப்கானிய சீமான்களே ஒருவருக்கொருவர்சண்டையிட்டுக்கொண்டனர். த்தகைய குழப்பமான ஒற்றுமையின்மை பாபருக்கு சாதகமாக அமைந்தது.

ராஜபுத்திரர்களின் பெருந்தலைவனும் கடவுளுக்கு இணையாகக் கருதப்பட்டவனான ராணா சங்காபெருவீரன்பாபரின் படைக்கும் வலிமைக்கும் ஒரு சவாலானவன் தான். ராஜபுத்திரர்களின் தேசியத்துக்கு சின்னமாக இருந்த ராணா சங்காவை தோற்கடிப்பது எளிதல்ல. பெரும்படையை சேர்த்து போரிடும் திறமையும் அவருக்கு உண்டு. மார்வார், ஆம்பா, குவாலியா, அஜ்மீர் சந்தோரிமற்றும் ராணா சங்காவால் தில்லி சுல்தானாக அங்கீகரிக்கப்பட்ட சுல்தான் முகமது லோடியின் இன்னொரு மகனான சுல்தான் சிக்கந்தாலோடி ஆகியோர் அளித்த பெரும்படையுடன், ராணா சங்கா கி.பி.1527-ம் ஆண்டில், மார்ச் மாதத்தில், ஆக்ராவில் உள்ள கான்வா என்கிற கிராமத்தில் பாபரின் படையை சந்தித்தார். இப்ரகிம் லோடியின் படையினர்போன்று இல்லாது, ராஜபுத்திர வீரர்கள், இறப்புக்கு அஞ்சாத தேசிய உணர்வுமிக்க தைரியமானவர். நாட்டுக்காக தங்கள் உயிரையும் பணயம் வைப்பதில்

பெருமை கொண்டவாகள். மேலெழுந்தவரியாக அலசிப் பார்க்கும் பொருட்டு பாபருடைய படை, ராணா சங்காவின் படைகளுக்கு எந்தவிதத்திலும் இணையானது அல்ல. ஆனால் பாபர்மனம் தளர்ந்து விடாமல், தன்னுடைய படைவீரர்களுக்கு அல்லாவின் மீதும் குரானின் மீதும் பற்று உண்டாகச் செய்து, அவர்களுக்கு நம்பிக்கை, வீரம் வரும் வழியில் பிரசாரம் செய்து உற்சாகப்படுத்தினார். அது அவர்களுக்கு ஊட்டச்சத்தாக அமைந்தது. இத்தகைய புதுமையான முறை பாபர் எதிர்ப்பார்த்த அளவுக்கு பயனை அளித்தது. பாபரின் படை வெற்றி கண்டது. ராஜபுத்திரர்களின் படைத்தோற்று சின்னா பின்னமானது. ராணா சங்கா படைக்களத்தினின்றும் தப்பிச் சென்றார். இந்த வெற்றிக்குப் பிறகு பாபர்யமுனா நதியைக் கடந்து ராஜபுத்திரர்களிடமிருந்து சந்தேரியைக் கைப்பற்றிக் கொண்டார்.

**கான்வா** போரானது இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான போராகும். பானிபட் போருடன் இதனை ஒப்பிடும்போது, இப்போரினால் ஏற்பட்ட முடிவுகளும் விளைவுகளும் மிக முக்கியமானதாய் கருதப்படுகின்றது. பானிபட் போரானது, வலிமையற்ற தில்லி சுல்தானின் அரசனான இப்ரகிம் லோடியை வீழ்த்தி, அவ்வரசை முடிவுக்கு கொண்டு வந்தது. ஆனால் கான்வா போரானது, பலம் பொருந்திய ராஜபுத்திர அரசை, தேசியத்துக்கு சின்னமாக விளங்கிய ராணா சங்காவை தோற்கடித்து, இந்திய மண்ணில் பாபர்ஆட்சியை நிலைநிறுத்த உதவியது. இந்த போருக்குப் பிறகு, பாபருடைய பணி எளிதாக்கப்பட்டு விட்டது. ரஷ்பூர்க்

வில்லியம்ஸ் என்கிற புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரின் வார்த்தைகளில் கூற வேண்டுமானால் "கான்வா போருக்குப் பிறகு பாபர் , தன்னுடைய அதிகாரத்தை விரிவாக்கவும், எதிர்ப்பாளர்களை அடக்கவும், ஆட்சியை நிலைநிறுத்தவும் நேரத்தை செலவழித்தார்". மேலும் பாபருடைய அதிகார மையம் காபூலிருந்து டில்லிக்கு மாறியது. இருந்தபோதிலும், பாபருக்கு இன்னும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. பீகார்மற்றும் வங்காளத்தைச் சேர்ந்த ஆப்கானிய தலைவர்கள், பாபர்டில்லியிலிருந்து ஆட்சி செய்ய எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த ஆப்கானிய தலைவர்முழுவதுமாக ஒழித்துக்கட்ட, ஒரு பெருந்திட்டத்துடன் பாபர், மே மாதத்தில், கி.பி.1529ஆம் ஆண்டில், கங்கை ஆற்றின் அருகில் உள்ள கோகரா நதிக்கரையில், பீகார்மற்றும் வங்காள தேசத்து

ஆப்கானியர்கூட்டுப் படையை சந்தித்து போரிட்டார்வெற்றி கண்டார். கி.பி.1526-ம் ஆண்டு முதல் 1529-ம் ஆண்டு முடிய இடைப்பட்ட காலத்தில் - வெற்றி கொண்ட மூன்று போர்களில், அக்ஸஸ் முதல் கோக்ரா வரையிலும், இமாலய மலைப்பகுதி தொடங்கி குவாலியாவரையிலுமான, ஓரிரு இடங்கள் நீங்களாக, இந்தியாவின் வடக்குப் பகுதி பாபரின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

ஆனால், கடும் உழைப்பிற்கு பின், பல வெற்றிகளுக்குப்பின் ஏற்பட்ட பலன்களை பாபரால் நெடுநாட்கள் ஆண்டு அனுபவிக்க முடியவில்லை. அவர்ஆக்ராவில் 45 அல்லது 48-ம் வயதில் கி.பி.1530-ல்

காலமானார். தன்னுடைய மகனின் புணர்வாழ்வுக்காகவே பாபர்தன்னை பலியாடாக்கிக் கொண்டார் என்கிற கூற்றுஒரு புறம் இருக்க, அவர்நிச்சயமாக ஒரு கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு இறந்திருப்பார்என்று கருத முடிகிறது. இறந்த பாபரின் உடல் காபூலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே அவர்உடல் அடக்கம் செய்யப்பட்டது.

**பாபர்நாமா (பாபரின் நினைவுகள்)**

பாபர்அவர்கள், “துஜ்கி பாபரி” (பாரசீக மொழியில் “பாபர்நாமா”) என்கிற தனது சுயசரிதையை அவர்தனது தாய்மொழியான துருக்கியில் எழுதினார். அறிஞர்களால், பின்னர், அது பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. இது பாபரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை அறிய உதவும் மிகச் சிறந்த மூல ஆதாரம் ஆகும்.

**ஹுமாயூன் (கி.பி.1530-1556)**

பாபர்இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, ஹுமாயூன் தனது இருபத்தி மூன்றாம் வயதில் இந்துஸ்தானத்தின் அரசராக பதவி ஏற்றார். அவர்அரசராக பதவி ஏற்றதை, அவருடைய உறவினரும் சீமான்களும் எதிர்த்தனர். அவருடைய மூன்று சகோதரர்களான கம்ரான். ஹிண்டால் மற்றும் ஆஸ்காரிஆகியோர்பாபருக்குப் பிறகு தாங்களே இந்துஸ்தானத்தின் மன்னர்களாக வர விரும்பினர். அவருடைய ஒன்று விட்ட சகோதரர்களும் ஆட்சி ஆள விரும்பினர். அரச சபையில் உள்ள சில செல்வாக்கு வாய்ந்த சீமான்களும் ஆட்சியைக் கைப்பற்றி திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். மேலும் பாபர்பிரச்சினையற்ற,

ஒற்றுமையான ஒரு அரசை ஹூமாயூனுக்கு விட்டுச் செல்லவில்லை. பாபர்போன்ற வலிமை வாய்ந்த ஒரு படையாளி, ராஜபுத்திரர்களையும், கலகம் விளைவித்த ஆப்கானிய தலைவர்களையும் வெல்ல முடிந்தது, அடக்க முடிந்தது. அத்தகைய வீரர்இல்லாத ஒரு வெற்றிடத்தில் வெல்லப்பட்டவர். யாவரும் மீண்டும் தம் இழந்த பகுதிகளையும் அதிகாரத்தையும் மீட்க முயற்சி மேற்கொள்வார்என்பதில் சந்தேகமில்லை. அவர்களும் ஹூமாயூனுக்கு பெரும் எதிர்ப்பாளர்களாக விளங்கினார்கள். குஜராத்தின் மன்னன், பகதூர்ஷா என்பவர்தன்னையே சுதந்திர மன்னனாக பிரகடனம் செய்து கொண்டு பெரும் அதிகாரமும் செல்வாக்கும் பெற்றவராய்த் திகழ்ந்தார். அவரும் ஹூமாயூனுக்கு ஒரு பெரும் தொல்லைக்காரராகவே விளங்கினார். “சிறந்த படைவீரராகவும் ஆட்சித்திறமை மற்றும் அரசியல் தந்திரம் மிக்கவராயும் இருக்கக்கூடிய ஒரு அரசர்தான் அப்போதைய தேவையாக இருந்தது. ஹூமாயூனுடன் இத்தகைய திறமைகள் எதுவும் இல்லை.
சொல்லப்போனால் அவரே அவருக்கு பகைவராய் இருந்தார்.”

ஹூமாயூன் செய்த முதல் தவறு என்னவென்றால், அரசியல் மற்றும் ஆட்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த நாட்டின் சில முக்கிய பகுதிகளை ஆள, தனது சகோதரர்களுக்கு பாகம் பிரித்துக்கொடுத்திருந்தார். அந்த சகோதரர்களை தனது முழுக்கட்டுப்பாட்டுக்குள் வைக்க அவர்தவறிவிட்டார். சாம்பல் பகுதி ஆஸ்காரின் ஆளுமைக்கு விட்டிருந்தார்ஆள்வார்பகுதியை

ஹிண்டாலுக்கும், கம்ரானுக்கு காபூல் மற்றும் பஞ்சாப் பகுதிகளும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. மற்ற சகோதரர்களுக்கு அளித்திருந்த பகுதிகளைக் காட்டிலும், கம்ரான் என்கிற அளித்திருந்த பகுதிகளான காபூலும், பஞ்சாபும் ஆட்சியின் ஸ்திரதன்மைக்கு முக்கிய பகுதிகளாகும் , அங்கு தான் முகலாயரின் படை பயிற்சி பெற சரியான இடம் ஆகும். டில்லி மற்றும் பஞ்சாபின் நெடுஞ்சாலையை இணைக்கும் முக்கிய பகுதியாகும். இந்த சூழ்நிலையில், ஹூமாயூனுக்கு எதிராக, அவரதுபகைவர்கள், நாட்டை சீர்க்குலைக்கும். விதத்தில், போர்த்தொடுக்க ஆயத்தமாயிருந்தனர்.

**ஹூமாயூன் வெற்றிகள்**

ஹூமாயூன், ஆரம்ப காலத்தில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட போர்களில், தனக்கு எதிராக இருந்த அரசர்களையும், ஆப்கானிய தலைவர்களையும் தோற்கடித்து அவர்களை பணியச்செய்தார். பண்டல் கண்ட் ராஜாவை கி.பி.1531ல் தோற்கடித்து, அவரிடமிருந்து ஒரு கணிசமான தொகையை பெற்றுக்கொண்டு, அங்கிருந்து கிழக்கு நோக்கி படையெடுத்தார்.

ஜான்பூரிலிருந்து சுல்தான் முதுமது லோடியை வெற்றிகரமாக விரட்டியடித்தார். கி.பி.1532ல் சுனாரின் ஆப்கானிய தலைவனான ஷெர்கானை தோற்கடித்தார். ஆனால் அவன் ஹூமாயூனுக்கு கட்டுப்படுவதாக வாக்களித்து சரணடைந்ததால் அவனையே சுனாருக்கு மீண்டும் தலைவனாக்கினார். அந்த ஷெர்கான் தான், பிற்காலத்தில்

தனக்கு எதிரியாக வந்து நடக்கப்போகும் போர்களில் தனது தலைவிதியை மாற்றப்போகும் ஆப்கானிய தலைவன் என்பதை உமாயூன் அப்போது அறிந்திருக்கவில்லை. பின்னர்தனது படைகளை குஜராத் பக்கம் திருப்பினார். ஹூமாயூன் குஜராத்தின் அரசன் பஹதூர்ஷா வேகமாக வளர்ந்து கொண்டிருந்தான். பஹதூர்ஷா, ஹூமாயூனின் கோபத்தை கிளரும்படி ஒரு காரியத்தை செய்திருந்தான் . ஹூமாயூனுக்கு எதிராக செயல்பட்ட பல ஆப்கானிய தலைவர்களுக்கு தன் அரசில் புகலிடம் கொடுத்திருந்தான்.

ராஜபுத்திரர்களின் வலிமையான எதிர்ப்பு இல்லாத காரணத்தால், மேவானரயும் மால்வாயையும் வென்று தனது அரச எல்லைக்குள் கொண்டு வரவேண்டும் என்கிற எண்ணம் பகதூர்ஷாவுக்கு ஏற்பட்டிருந்தது. பகதூர்ஷாவின் படை மேவரின் ராஜபுத்திரர்களை துன்புறுத்தியபோது, கி.பி.1534-ம் ஆண்டில் மேவரின் அரசி இராணி கானாவதி ஹூமாயூனின் உதவியை நாடினார். ஆனால் ஹூமாயூன் உதவிட முன்வரவில்லை. “இங்ஙனம், ஹூமாயூன் நல்லதோர்வாய்ப்பினை இழந்து ராஜபுத்திரர்களின் கோரிக்கையை உதாசீனப்படுத்தியதால், மிகப்பெரிய அரசியல் தவற்றினை செய்துவிட்டார்”. இதற்கிடையில், பகதூர்ஷாவின் படை, ஒரு துருக்கிய பொறியியலாளர்மற்றும் ஐரோப்பிய துப்பாக்கி வீரர்உதவியுடன் சித்தூர்கோட்டையை தகர்த்தெறிந்து ராஜபுத்திரர்களைத் தோற்கடித்தார். இருந்த போதிலும், அச்சமயத்தில்,கி.பி.1535ல் மாண்டசார்அருகில், ஒரு

போரில் பகதூர்ஷாவை தோற்கடித்து அவரை விரட்டியடித்தார். அவர்டையூ தீவுக்கு தப்பி ஓடி அங்கு அடைக்கலம் அடைந்தார். ஆனால் குஜராத்தின் மீதான ஹீமாயூனின் வெற்றி நெடுநாட்களுக்கு நிலைத்திடவில்லை. வெற்றிக்களிப்பில், இவ்வெற்றியை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக, எம்முயற்சியும் எடுக்காமல், ஹூமாயூனும் அவரைச் சார்ந்தோறும் இந்த சூழ்நிலையை, பதவியிழந்த குஜராத் மன்னன், தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இழந்த பகுதிகளை முகலாயரிடமிருந்து மீட்டுக் கொண்டார். பிறகு ஹூமாயூனுக்கு குஜராத்தை மீட்டுக் கொள்ள நேரமில்லை கிழக்கிந்தியாவில் ஷெர்கான் தலைமையில் ஆப்கானியர்வெற்றிமேல் வெற்றி பெற்று வளர்வதை அடக்க முனைந்தார். ஹூமாயூன் பகதூர்ஷாவுடன் போரிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், பீகாரில் ஷெர்கான் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். வலிமை வாய்ந்தசுனார்கோட்டையை அவர்தம் வசப்படுத்திக்கொண்டார். ஆப்கானிய சீமான்கள் பலர்அவரது தலைமையை ஏற்று பின் தொடர்ந்தார்கள்.

கி.பி.1536-ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆண்டுவந்த திறமையற்ற மன்னனான முதுமது ஷாவை வென்று அவனிடமிருந்து போர்இழப்பாக பதிமூன்று லட்சம் தினார்களை ஷெர்கான் பெற்றார். மேலும் கி.பி.1537-ல் அவர்வங்காளத்தின் மீது போர்தொடுத்தார். இவையெல்லாம் கேட்டறிந்த பிறகு தான் கிழக்கிந்தியாவில் ஷெர்கானை

வளரவிடக்கூடாது என்ற திடமான எண்ணத்தில் ஷெர்கானை எதிர்த்து போரிட்டார். ஆறுமாத கால போருக்குப்பின் ஷெர்கானின் அதிகாரத்தில் இருந்த சுனாகார்கோட்டையை கைப்பற்றி, காசிக்கு புறப்பட்டார். சமரச திட்டத்துக்கு வழிவகுக்காத ஷெர்கானை எதிர்த்து, வங்காளத்தின்மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றி அங்கு தன் அதிகாரத்தை நிலைநிறுத்தினார். ஆனால் அங்கு எட்டு மாத காலமாக எந்த வேலையும் செய்யாமல் தம் காலத்தைக் கழித்தார். இந்த இடைப்பட்ட காலத்தை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட ஷெர்கான் காரா, காசி, சாம்பல் போன்ற பகுதிகளை வென்றதுடன், சுனாகார்மற்றும் ஜான்பூரையும் கைப்பற்றினார். அங்கிருந்து ஹூமாயூன் ஆக்ராவுக்கு செல்லும் பாதையை அடைத்தார். ஷெர்கானின் வளரும் அதிகாரத்தால் பொறுமையிழந்த ஹூமாயூன் சௌஸாவில் ஷெர்கானை பெரும்படையுடன் கி.பி.1539-ம் ஆண்டில் தாக்கினார். அந்த சௌஸா என்கிற பகுதி பீகார்மற்றும் உத்திரப்பிரதேசத்தின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. ஷெர்கான் ஒரு சிறந்த படைத்தளபதியும்

அரசியல் தந்திரம் தெரிந்தவரும் நல்ல மழையில் முகலாயர்படையைத் தாக்கி அழித்தார். ஹூமாயூனால் தாக்குப்பிடிக்க முடியாமல் அவர்படைக்களத்திலிருந்து தப்பி ஓடிவிட்டார். அதற்குப் பிறகு ஷெர்கான் தன்னை சுல்தானாக ஆக்கிக் கொண்டு ஷெர்ஷா என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார். தோல்வியால் மனம் துவண்டு விடாமல், தன்னுடைய சகோதரர்களால் ஏற்பட்ட தொல்லைகளையும்

பொருட்படுத்தாமல், ஷெர்ஷாவை எப்படியும் எதிர்த்து வெல்ல வேண்டும் என்று துணிந்தார்ஹூமாயூன். ஷெர்ஷா தன் மகன் குதுப்கானின் தலைமையில் அனுப்பிய ஆப்கானியபடையை மால்வாவில் எதிர்த்து ஹூமாயூன் வெற்றி கண்டார். மேலும், கி.பி.1540-ம் ஆண்டில் ஷெர்ஷாவின் படையை கன்னோஜில் சந்தித்து போரிட்டார். இப்போரிலும், ஷெர்ஷா ஒரு சிறந்த போர்த்தந்திரத்தைக் கடைபிடித்து முகலாயர்படை எதிர்பாராத சூழ்நிலையில் ஹூமாயூன் போர்வீரர்கள் கடுமையாக சண்டையிட்டும், பயனில்லாமல், தோற்றுப்போகச் செய்தார். மீண்டும் ஹூமாயூன் படைக்களத்திலிருந்து தப்பி ஓடினார். ஹூமாயூனுக்கும் ஷெர்ஷாவுக்கும் இடையே ஏற்பட்ட இந்தக் கன்னோஜ் போர்பல வழிகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஹூமாயூன், ஷெர்ஷாவால் இந்தியாவிலிருந்து துறத்தப்பட்டார். இந்தியாவை விட்டு வெளியேறி ஹூமாயூன், பாரசீக மன்னன் ஷாவின் அரச சபையில் தஞ்சம் புகுந்தார். இதற்கிடையில் ஷெர்ஷா தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றி, முகலாயர்களிடமிருந்து தில்லி அரசதிகாரத்தைக் கைப்பற்றினார்.

ஹூமாயூன்ஷெர்ஷாவிடம் தோற்றதற்கான காரணங்கள் பல உள்ளன. ஒன்று அவருக்கு, அவருடைய சகோதரர்களால் கொடுக்கப்பட்ட தொல்லைகளும் பிரச்சினைகளும் இரண்டாவதாக அவரை எதிர்த்த பகைவர்கள், போர்த்திறமை வாய்ந்ததும் சக்தியுள்ளதுமான துப்பாக்கிகளை போர்க்களத்தில் உபயோகித்தும் தான்

. மூன்றாவதாக, அவரை எதிர்த்த பகைவர்களுள் ஷெர்ஷா மிகச் சிறந்த படைத்தளபதியும், போர்த்தந்திரம் தெரிந்தவரும் அதிகவேகம் கொண்ட மனோபாவம் உடையராயும் இருந்திருக்கிறார். ஹூமாயூன் இத்துறையில் அவருக்கு இணையானவராய் இருந்திருக்கவில்லை. நான்காவதாக ஹூமாயூனின் தனிப்பட்ட இயலாத தன்மையும், போரில் அவர்செய்த சில தவறுகளும் எதிரிகளுக்கு சாதகச் சூழ்நிலையை உருவாக்கின. ஆகையால் வரலாற்றாசிரியர்ஸ்டேன்லி லேன்பூல் கூறுகிறார்: ஹூமாயூன் வாழ்க்கை முழுவதும் சறுக்கி விழுந்தவராய் இருந்தார். கால் சறுக்கி தன் இறுதியை ஏற்படுத்திக்கொண்டார்.

**ஹூமாயூனின் தலைமறைவான காலம்**

கி.பி.1540 - முதல்1555-ம் ஆண்டு வரையில் ஹூமாயூன் தலைமறை வாழ்க்கையில் இருந்தார். அவர்ஆப்கானிஸ்தானத்தில் எப்படியாவது ஒரு நிரந்தர இடத்தைப்பிடித்து, அங்கிருந்து இந்தியாவின் மீது படையெடுக்க முயற்சித்தார். அந்த முயற்சியில் அவர்தன்னுடைய சகோதரர்கள் மற்றும் வடமேற்கு மாகாண மன்னர்களிடமிருந்து உதவி எதிர்பார்த்தார், கிடைக்கவில்லை. கி.பி.1544-ம ஆண்டில் பாரசீக மன்னன் ஷா தாமஸ் ஹூமாயூனின் நிலை உணர்ந்து வரவேற்று உதவி செய்வதாய் சொன்னார். அவருடைய போருக்கு, பாரசீக மன்னன் பணமும் படைவீரர்களும் ஹூமாயூனுக்கு கொடுப்பதாகவும், அதற்கு பதிலாக அவர்ஷியா மதப்பிரிவைச் சேரவேண்டுமென்றும் பின்னர் அவர்தம் மக்களிடையேயும் அம்மதப் பிரிவைப் பரப்ப வேண்டும்

என்றும் நிபந்தனை விதித்தார். மேலும் ஹூமாயூன் போரில் வெற்றி பெற்றால் காந்தகாரை பாரசீகத்திற்கு கொடுத்து விட வேண்டும் என்றும் நிபந்தனையிட்டார். வேறு வழியின்றி, தன் மனசாட்சிக்கு எதிராக, இத்தரக் குறைவான நிபந்தனைகளை ஹூமாயூன் ஏற்றுக்கொண்டு, பாரசீக மன்னர்அளித்த படை உதவியுடன் காந்தகார்பகுதியை வென்று, ஏற்கெனவே சொன்னபடி அப்பகுதியை பாரசீக மன்னனுக்கு அளித்துவிட்டார். விரைவிலேயே, ஹீமாயூன் தன்னை தனது சகோதரர்பிரச்சினைகளிலிருந்து விடுவித்துக் கொண்டார். கி.பி.1555-க்குள் ஆப்கானிஸ்தானத்தில் தனக்கென ஒரு இடம் பிடித்து தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். அங்கிருந்து அவர்இந்தியாவின் மீது படையெடுத்து இந்தியாவில் தான் இழந்த பகுதிகளை மீண்டும் பெற ஆவண செய்தார்.

அதிஷ்டவசமாக, ஹூமாயூனை இந்தியாவிலிருந்தே விரட்டிய ஷெர்ஷா கி.பி.1545-ல் இறந்தார். அவருக்கு அடுத்து இஸ்லாம் ஷா என்பவர்டில்லி சுல்தான் ஆனார். அவரும் ஷெர்ஷாவைப் போன்றே திறமையும் வலிமையும் உடையவராய் இருந்தார். அவரும் கி.பி.1553-ஆம் ஆண்டு காலமானார். இத்தகைய சூழ்நிலைகளால், இந்தியாவில் நல்ல வலிமை வாய்ந்த அரசன் இல்லாமல்,ஆப்கானியயர்ஆட்சி சிதறுண்டது. அங்கே சுல்தானிய குடும்பத்தாரிடையேயும் மற்றுமுள்ள ஆப்கானிய தலைவர்களிடையேயும் வாரிசு உரிமைப்போர்ஏற்பட்டு அவர்கள் நாட்டைக் கூறு போட்டுக் கொண்டார்கள். லாகூரிலும்

வயதில் தக்காணத்தின் கவர்னராக நியமிக் கப்பட்டார். 1644 வரை அப்பதவியிலிருந்தார். பின்னர் குஜராத், பால்க், மூல்தான் ஆகிய பகுதிகளின் கவர்னராக பதவி வகித்தார். 1652-ல் மீண்டும் தக்காண கவர்னராக நியமிக்கப்பட்டார். 1657 செப்டம்பர் மாதம் ஷாஜஹான் கடுமையான நோய்வாய்ப்படவே. அவரது நான்கு மகன்களான தாரா, ஷுஜா, ஔரங்கசீப், மூரத் ஆகியோர்க்கிடையே வாரிசு உரிமைப்போர் ஏற்பட்டது. இதில் வெற்றியடைந்த ஔரங்கசீப் 1658 ஜூலை 31-ல் 'ஆலம்கீர்' (உலகத்தை வென்றவர்) என்ற புனைப்பெயருடன் முகலாயப் பேரரசராகப் பதவி ஏற்றார்.இவரது பட்டமேற்பு விழா 1659, ஜூலை 25-ல் நடைபெற்றது. 'ஔரங்கசீப்பின் வரலாறு உண்மையில் இந்தியாவின் ஐம்பது ஆண்டு கால வரலாறு ஆகும்' என்று கூறுகிறார் J.N. சர்க்கார்.

**ஔரங்கசீப்பின் வெற்றிகள்**

**1. அஸ்ஸாம் கூச்பீஹார் கைப்பற்றப்படுதல்**:

முகலாயப் பேரரசின் கிழக்கு எல்லையில் இயற்கை அரண்க ளோடு அமைந்திருந்தவை அஸ்ஸாம், கூச்பீஹார் ஆகிய நாடுகள். பிறப் பால் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகோம் (Ahom) என்பவர்கள். அவர்கள் 13-ம் நூற்றாண்டில் இப்பகுதிகளில் குடியேறி காலப்போக்கில் இந்துக்களோடு இணைந்து இந்துக்களாகி விட்டனர். இந்த ஆகோம்கள் அடிக்கடி வங்காளத்தின் மீது தாக்குதல் தொடுத்து கொள்ளையடித்தார்கள். ஷாஜஹானின் பிள்ளைகளுக்குள் ஏற்பட்ட வாரிசுரிமைப்போரைப் பயன் படுத்திக் கொண்டு காமரூபத்தின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்ட னர். இதைக் கேள்விப்பட்ட ஔரங்கசீப் வங்காளத்தின் கவர்னராகப் பணி யாற்றி வந்த மீர்ஜும்லாவை, இழந்து போன முகலாயப் பகுதிகளை உடன் டியாகப்

பெறும்படி கேட்டுக் கொண்டார். 1661-ல் முப்பதாயிரம் காலாட்படையினர், பன்னிரெண்டாயிரம் குதிரை வீரர்களுடன் புறப்பட்டார் மீர்ஜும்லா. கூச்பீகார் அரசர் பிரேம் நாராயணன் ஓடிவிட்டார். ஆகோமிய மன்னர் ஜெயத்துவாஜரும் தலை நகரை விட்டு ஓடிப்போய்விட்டார். ஆனால் மீர்ஜூம்லாவின் வெற்றி நிலைத்து நிற்கவில்லை. கடுமையான மழைக்காலம் தொடங்கியதால் முகலாயப் போர் வீரர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார்கள். மழைக்காலம் முடிந்து தொடர்ந்து போரிட்டனர். தொடர்ந்து போரிட்டு பயனில்லை என்பதை உணர்ந்து ஜெயத்துவாஜர், முகலாயர்களுடன் சமாதானம் செய்து கொண்டு ஆண்டுதோறும் கப்பம் கட்ட சம்மதித்தார்.

**2. சிட்டகாங் சந்த்வீப் வெல்லப்படுதல்:**

வங்காளத்தின் கவர்னர் மீர்ஜும்லா 1663-ல் உயிர்நீத்தார். சிறந்த தளபதியை இழந்த ஔரங்கசீப் கவலை அடைந்தார். நம்பிக்கையும், நேர்மையும் மன உறுதியும் கொண்ட தனது தாய்மாமனான செமிஸ்ட கானை வங்காளத்தின் ஆளுநராக நியமித்தார். முகலாயர்களிடம் வலிமை யான கப்பற்படை இல்லாததை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, போர்ச்சுக்கீசியரும், அரக்கானைச் (Arakan) சேர்ந்த கடற் கொள்ளையரும் வங்காளத்தின் டாக்கா வரைக்கும் உள்ள பகுதிகளில் சூறையாடி நாசம் விளைவித்தனர். இதையறிந்த செயிஸ்டகான் பெரும் படையுடன் சென்று அரக்கான் நாட்டு மன்னரைத்தாக்கி அடிபணியச் செய்தார். கொள்ளையரின் குடியேற்றமான சிட்டகாங்கும், வங்கக்கடற் பகுதியிலிருந்த சந்த்வீப் என்ற தீவையும் செயிஸ்டகான் கைப் பற்றினார்.

**3.வடமேற்குப் பகுதியில் உள்ள கொள்ளையரை அடக்குதல்:**

இந்தியாவின் வடமேற்கு எல்லைப்பகுதி இந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த எல்லா மன்னர்கட்கும் தலைவலியாகவே இருந்து வந்தது. பட்டானிய இனத்தைச் சேர்ந்த ஒருவகை முரட்டு ஜாதியினர் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் பெருவழிக் கொள்ளைக் கூட்டத்தினராகவே தொழில் புரிந்தனர். இக்கொள்ளைக் கூட்டத்தினரை அடக்குவது சிரமமாக இருந்தது.எனவே ஔரங்கசீப் தானே தலைமை தாங்கி இப்பரம்பரை பகைவர் கூட்டத்தை ஒழிக்க முடிவு செய்தார். 1667-லிருந்து 1675-ம் ஆண்டுவரை தனது கவனத்தைச் செலுத்தி தொடர்ந்து போர் புரிந்து அக்கூட்டத்தினரை அழித்து அவர்கள் பகுதிகளைக் கைப் பற்றினார். காபூலில் நிரந்தரமாக அமீர்காள் என்பவரை கவர்னராக நியமித்தார்.

**4. மார்வார் வெற்றி**

முகலாயப் பேரரசரான ஔரங்கசீப் தீவிர இஸ்லாமியப் பற்றுடையவர். எனவே இந்துக்களையும் இராஜபுத்திரர்களையும் வெறுத்தார். மார்வார் என்ற இரஜபுத்திர நாடு ராஜா ஜஸ்வந்த்சிங் என்பவரால் ஆளப் பட்டு வந்தது. அவர் மிகத்திறமை வாய்ந்த தளகர்த்தர். வாரிசுரிமைப்போர் ஏற்பட்டபோது ஔரங்கசீப்பிற்கு எதிராகப் போரிட்டு தர்மாட் என்ற இடத்தில் அவர் படையை சிதறடித்த பெருமை இவருக்கு உண்டு. வஞ்சக மாக அவரைக்கொல்ல நினைத்த ஔரங்கசீப், அவரோடு நட்பு கொண்டு தனக்கு ஆதரவாக இந்தியாவின் வடமேற்கு எல்லையிலுள்ள கைபர் கணவாயின் பாதுகாப்பிற்காக அவர்தலைமையில் ஒரு பெரிய அனுப்பினார். அங்கு சென்ற ஜஸ்வந்த்சிங் 1678 டிசம்பர் 20-ம் தேதி இறந்து விட்டார். உடனே ஔரங்கசீப் மார்வாருக்குச் சென்று அதனைக் கைப் பற்றினார். ஆனால் ஜஸ்வந்த்சிங்கின் ஆதரவாளர்கள் முகலாயரின் ஆதிக் கத்தை ஒழிக்க வீருகொண்டு எழுந்தனர்.

ஜஸ்வந்த்சிங்கின் பிள்ளையான அஜித்சிங்கை அரச வாரிசாக ஏற்க மறுத்துவிட்டார் ஔரங்கசீப். இராஜ புந்திரத் தலைவர்களான சம்பத்ராய், சத்ராசல் ஆகியோர் தலைமையில் ஜபுத்திரர்கள் முகலாயர்களை எதிர்த்து கிளர்ச்சியிலீடுபட்டனர்.

**5. மேவார் வெற்றி**

மார்வார் நாட்டை ஔரங்கசீப் கைப்பற்றிக் கொண்டதால் மேவார் காட்டு ரஜபுத்திரர்கள் விழிப்படைந்தனர். மேவார் நாட்டு மன்னர் ராணா ராஜ்சிங் தனது நாட்டைக் காப்பாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். ரஜபுத்திரர்களின் போர் தங்கள் விடுதலையைக் காப்பதற்காக நடந்த தேசிய எழுச்சியாகத் தோற்றமளித்தது. இதனால் ஔரங்கசீப் மேவார் மீது படை யெடுத்தார். முகலாயப் படைகளைக் கண்ட ராஜ்சிங் மேவாரை விட்டு ஓடி விட்டார். இதனால் முகலாயப்படையினர் மேவாரின் தலைநகரான உதய்ப் பூரையும், புகழ்மிக்ககசித்தூர் கோட்டையையும் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால் ரஜபுத்திரர்கள் மலைகளில் ஒளிந்து கொண்டு கொரிலாப்போர் முறைகளைக் கையாண்டு முகலாயக் காவல் தளங்களைத் தாக்கினர். மார் வார் நாட்டு ரஜபுத்திரர்களும் இதே முறையில் முகலாயப்படைகளைத் தாக்கினர். இவ்வாறு ஔரங்கசீப்பின் தவறான இரஜபுத்திரக் கொள்கை யால் முகலாயப் பேரரசு பலவீனமடைந்தது. முகலாயப் பேரரசின் தூண்க ளாக விளங்கிய ரஜபுத்திரர்களை பகைத்துக் கொண்டதால், பல கலகங்கள் ஏற்பட்டு அதன் விளைவாக முகலாயப் பேரரசு வீழ்ச்சியடையக் காரண மானது.

**6. ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை:**

ஔரங்கசீப் தனது மூதாதையர்களான அக்பர், ஜஹாங்கீர், ஷாஜ ஹான் ஆகியோர் பின்பற்றிய தக்காணக் கொள்கையையே தானும் பின்பற் றினார்.

ஆனால் அவர்கள் மற்ற பிரச்சனைகளையும் கவனித்தால் முழு அளவில் தக்காணத்தில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் ஔரங்க சீப்போ 1682 முதல் 1797 வரை சுமார் 26 ஆண்டுகள் தக்காணத்திலேயே தங்கிவிட்டார். இதற்கு முக்கிய காரணம், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய ஷியா நாடுகளை இணைப்பது, மராட்டியர்கள் வளர்ச்சியைத் தடுப்பது, மராட்டியர்களின் ஆதரவுடன் கலகம் செய்யும் தனது மகன் அக்பரைப் பிடிப்பது, தனது பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்துவது ஆகியவை யாகும். பீஜப்பூர் கைப்பற்றப்படல் (1686) : பீஜப்பூரை சிக்கந்தர்ஷா என்ற சுல்தான் ஆண்டுவந்தார். அவருக்கும் ஔரங்கசீப்பிற்கும், ஔரங்கசீப் தக்காண கவர்னராக இருக்கும்போதே பகைமை ஏற்பட்டிருந்தது. பீஜப் பூரைக் கைப்பற்ற எண்ணிய பேரரசர் சிக்கந்தர்ஷாவிற்கு செய்தி அனுப்பி னார். "சுல்தான் முகலாயப் படையின் ஒரு பகுதிக்கான ஆகாரச் செலவைக் கொடுக்க வேண்டும். தக்காணத்தில் தமது பகைவர்களுக்கு விரோதமாகப் போரிட 6000 குதிரை வீரர்களை அனுப்ப வேண்டும்; மராட்டியர்களைத் தாக்க செல்லும் முகலாயப்படை பீஜப்பூர் எல்லைகளின் வழியாக கடந்து செல்ல அனுமதி வேண்டும்" என்று ஔரங்கசீப் கேட்டுக் கொண்டார். இச்செய்தியைக் கேட்ட சுல்தான் சிக்கந்தர்ஷா தைரியமாக பேரரச ரின் வேண்டுகோளை நிராகரித்தார். எனவே ஒரு படையுடன் தானே சென்று பீஜப்பூரை முற்றுகையிட்டார். 1686 செப். 22-ல் பீஜப்பூர் வீழ்ந்தது. முகலாயப் பேரரசுடன் அது இணைக்கப்பட்டது. தக்காண வெற்றிகளால் பேரரசின் எல்லை பெருமளவு விரிவடைந்து விட்டது. இதனால் மைய அரசு தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டது. இவ்வாறு ஸ்மித் கூற்றுப்படி `தக்காணம் ஔரங்கசீப்பின் புகழுக்கும், அவர் உடம்பிற்கும் கல்லறையானது".

**"ஔரங்கசீப்பின் மதக்கொள்கை"**

ஔரங்கசீப் பழமையான கொள்கைகளையுடைய சன்னிப் பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர் தீவிர மதப்பற்றுடைய ஔரங்கசீப் முகமது நபியையும்,குர்ஆனையும் தலைமேற்கொண்டு தனது வாழ்க்கையில் இவைகளே வழிகாட்டிகளாக அமையவேண்டும்ஏ அமையவேண்டும் என்ற மனதுடைய ஏராள மான மக்களைக் கொண்ட ஓர் புதிய இந்தியாவை உருவாக்க வேண்டு மென்று எண்ணினார். பழமைக் கொள்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று விரும்பியவர். இஸ்லாமிய மதத்தை இந்திய நாட்டின் மதமாக்கவே கடவுள் தன்னை அரசராக்கி இருப்பதாக எண்ணினார். இதனால் மதக் கோட்பாடுகளில் பல சீர்திருத்தங்களை தீவிரமாகச் செய்தார்.

**1. ஔரங்கசீப்பின் சமய சீர்திருத்தங்கள்:**

பேரரசர் வெளியிடும் நாணயங்களில் 'கலிமா' என்ற இஸ்லாமிய விசுவாசப் பிரமாணத்தின் பகுதி பொறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி னார். காரணம் முஸ்லீம்கள் அல்லாதவர் அந்த வாசகத்தை தொடக்கூடாது என்பதேயாகும். இந்துக்கள் பாரசீக ஆண்டு பிறப்பு தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவது தனது மதக் கோட்பாட்டிற்கு விரோதமானது என்று சொல்லி அதை நிறுத்தினார்.

- முகத்சீப் (Muhatjib) என்ற சமூக கண்காணிப்பாளர்களை நியமித்து குரானில் குறிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இசைந்து மக்கள் வாழுகின்றனரா என்று கவனிக்கும்படி செய்தார். மயக்கம் தரும் மதுவகை கள் அருந்துதல், சூதாட்டம் ஆகியவை தடை செய்யப்பட்டது. முஸ்லீம் கள் நாள் ஒன்றிற்கு ஐந்து முறைகள் தொழுகை புரிகின்றனரா

என்றும், ரம்சான் பண்டிகை சமயத்தில் குறிப்பிட்ட விரதங்களை தவறாமல் பின் பற்றுகின்றனரா என்றும் கண்காணிக்கும்படி செய்தார்.

- பேரரசருடைய பிறந்த தினத்தன்று அவர்கள் தராசில் நிறுக்கப் பட்டு அதற்குச் சமமான விலையுயர்ந்த உலோகங்களைப் பெறும் வழக்கத்தை நீக்கினார். தினந்தோறும் சூரிய உதய நேரத்தில் 'அரசர் தரிசனம்' கொடுக்கும் பழக்கத்தையும் நிறுத்தினார். அது தனிமனித வழி பாட்டுக்கு வழிவகுப்பதாக எண்ணினார்.
- இந்திய முறைப்படி அரசாங்க அலுவலர்கள் ஒருவரை ஒருவர் காலையில் கண்டு வணங்கும் பழக்கத்தை ஒழித்து இஸ்லாமிய முறைப்படி 'சலாம்-அலேகும்' (Salam Alekum. Peace lie with you) என்று தங்கள் காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள கட்டாயப்படுத்தினார்.
- அரசாங்கத்தில் வேலை செய்து வந்த யிலிருந்து நீக்கினார். பெண்கள் தெய்வ ஜோஸ்யர்களை அப்பதவி வழிபாட்டுத்தலங்கட்கும் புனிதர்கள் வாழும் இடங்களுக்கும் செல்வதைத் தடுத்தார். விபசாரம் புனிதர்கள் வாழும் பட்டது. அதில் ஈடுபட்டிருந்த பெண்கள் மவும் புரின்ை கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அதற்கு ஒப்புக்கொள் ளாதவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

**இந்துக்களுக்கு விரோதமாக ஔரங்கசீப் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்**:

இந்து சமயத்திற்கு எதிராக ஔரங்கசீப் செய்த சூழ்ச்சிகள் கொடூர மும் பயங்கரமும் ஆனவை. அவைகளில் சிலவற்றை மட்டும் காண்போம்.

- தீபாவளி, முகரம், ஹோலி முதலிய இந்துப்பண்டிகைகளை தடுத்து 1699-ல் சட்டம் இயற்றினார். இறந்து போனவர்களின் கல்லறை களில் விளக்கேற்றும் பழக்கத்திற்கு தடைவிதித்தார். சங்கீதக் கலைஞர் களையும், நாட்டிய நங்கைகளையும் அரண்மனையை விட்டு துரத்தியடித் தார். நாட்டியம் சமூகக்கேடுகளுக்கு வழி நடத்தும் என்றார். இந்துக்களில் இறந்தவர்களின் சடலங்களை சில குறிப்பிட்ட நதிக்கரையில் வைத்து எரிக்கக் கூடாது என்று சட்டம் இயற்றினார். இந்துக்கள் இஸ்லாமியர் போன்று நடை உடை பாவனைகளில் தோற்றம் அளித்தல் கூடாது. இஸ்லா மியர் அணிய வேண்டிய கால் சட்டைகளின் உயரமும் தாடிகளின் நீளமும் வரையறுக்கப்பட்டது. குதிரைகளிலோ, யானைகளிலோ, பல்லக்குக ளிலோ இந்துக்கள் சவாரி செய்தல் கூடாது. ஆனால் இந்த விதிகளிலிருந்து ரஜபுத்திரர்கட்கும் மராட்டியர்கட்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டது. புதிதாக இஸ்லாம் மதத்தில் சேர்ந்தவர்கட்கு அரசின் எல்லா சலுகைகளும் கிடைத்தது.
- இந்துக் கோவில்களை அழித்தல்: ஆரம்ப காலத்தில் இந்துக் கோவில்களைக் கட்டவோ, பழுதுபார்க்கவோ கூடாது என்று கூறிய ஔரங்கசீப் பல ஆண்டுகளில் இந்துக் கோவில்களை இடிக்கும்படியாக கட்டளையிட்டார். மதுராவில் கேசராய் ஆலயமும், காசியில் விசுவநாதர் ஆலயமும், கத்தியவாரில் சோமநாதர் ஆலயமும் தரைமட்டமாக்கப் பட்டன. மேவாரில் 240 கோயில்கள் தரைமட்டமாயின.
- ஜஸியாவரி (Jizya): வரி மீண்டும் விதிக்கப்பட்டது. பேரரசர் அக்பரால் நீக்கப்பட்ட ஜஸியாவரியை ஔரங்கசீப் 1679, ஏப்ரல் 12ல் திரும்பவும்

விதித்தார். அரசின் வருவாயை அதிகரிக்கவும் இந்துக்களை இஸ்லாமியர் ஆக்கவும் அது துணைபுரிந்தது. பேரரசின் எல்லைக்குள் இருந்த முகமதியரல்லாத எல்லோரும் அந்த வரியைக் கட்டாயம் கட்ட வேண்டியதாயிற்று. வரி செலுத்துபவர்கள் நேரடியாகச் சென்று, தேவையான மரியாதைகளைச் செய்து வரி செலுத்த வேண்டும். வேறு யார் மூலமா வது வரி செலுத்தக்கூடாது. அந்த வரி செலுத்தப்போகும் இந்துக்கள் கேவ லமாக நடத்தப்பட்டனர்.

- வர்த்தக வரி: நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய விரும்பிய ஔரங்கசீப் வியாபாரப் பொருட்களுக்கு வரிவிதித்ததில் வியப்பில்லை. ஆனால் அந்த வரி இஸ்லாமியர்கட்கு 2.5 சதவீதமாகவும் இந்துக்களுக்கு 5.5 சதவீதமாகவும் விதிக்கப்பட்டது. இது தவிர அந்த வரி வசூலிப்பதிலும் இஸ்லாமியர்கட்கு சலுகைகள் வழங்கப்பட்டது. இவை தவிர இந்துக்களுக்கென்று 'யாத்ரீ கர்கள் வரி' விதிக்கப்பட்டது. தகனம் செய்த இறந்த மனிதர்களின் தகனச் சாம்பலையும், எலும்புகளையும் கங்கை போன்ற புண்ணிய நதிகளில் கரைப்பதற்கும் வரி வசூலிக்கப் பட்டது.
- இந்துக்களும் அரசாங்க அலுவலர்களும்: அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்த அனேக இந்துக்களை விலக்கினார். சிறிது காலத்திற்குப்பின் இந்துக்களே அரசாங்க அலுவல்களைப்பெற முடியாத படி செய்யப் பட்டது.உயர்ந்த அரசு பதவிகளில் எல்லாம் வந்த இந்துக்கள் இஸ்லாமியப் பணியாட்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது. வேலை பார்க் கும் இந்து அலுவலர்களின் மதமாற்றம் பெரும் விழாவாகக் கொண்டாடப் பட்டது.

**ஔரங்கசீப்பின் மதக்கொள்கைக்கு எதிர்ப்பு:**

ஔரங்கசீப்பின் சமயக் கொள்கைகளின் விளைவு பயங்கரமா னவை. அவைகள் முகலாயப் பேரரசின் அழிவுக்கு அடிகோலின என்றால் அது மிகையாகாது. இந்துக்கள் திரண்டெழுந்து ஔரங்கசீப்பின் ஆட்சியை எதிர்க்க முன்வந்தனர். ஜாத்துக்கள், சத்ரமீஸ், பந்தேலர்கள், ரஜபுத்திரர்கள், மராட்டியர்கள் ஆகிய எல்லா இந்திய மக்களும் பேரரசின் முக்கிய எதிரிகள் ஆயினர்.

- ஜாத்துக்கள்: ஜாத்துக்கள் என்ற பிரிவினர் மதுரா மாவட்டத்தில் வாழ்ந்து வந்தனர். அந்த மாவட்டத்தில் அப்துல்நபி என்ற ஓர் இஸ்லாமிய அலுவலர் பணிபுரிந்து வந்தார். அவர் சிறந்த இஸ்லாமிய பக்தர். பேரரசின் கட்டளைகளை உடனடியாகச் செயல்படுத்துவதில் வல்லவர். எனவே பேரரசரின் கட்டளைப்படி மதுரா நகரிலிருந்த இந்துக் கோவில்களைத் தகர்த்தெறிந்து அவற்றிலிருந்து கைப்பற்றிய பொருட்களைக் கொண்டே அந்நகரின் மத்தியில் ஓர் அழகிய மசூதியைக் கட்டிமுடித்தார். இக்கொடிய செயலைக் கண்ட மதுரா நகர ஜாத்துக்கள் கோகல் (Gokal) என்ற தலைவரின் கீழ் 1649-ல் புரட்சி செய்தனர். புரட்சியின் ஆரம்பத்தில் அப்துல் நபி கொல்லப் பட்டார். எனவே பேரரசர் தனது படை வலிமை கொண்டுதர்மராஜ் ஜாத்துக்களை அடக்க முற்பட்டார். ஆனால் முடியவில்லை, ராஜசராம் என்பவர் தலைமையில் மீண்டும் கிளர்ச்சி செய்தனர். ஔரங்கசீப்பின் இறுதிக் காலம் வரை புரட்சி செய்தனர். இறுதியில் தங்களுக்கென ஓர் புதிய இராஜ்யத்தை அமைத்துக் கொண்டனர்.

- சத்தலீஸ்: சத்தமீஸ் என்பதற்கு கடவுளின் நல்ல நாமத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்று பொருள். இவர்கள் கடவுளின் கீழ் ஒற்றுமையுண்டு என்பதை நம்பி சமாதானத்துறையில் இயங்கி வந்த ஓர் சகோதர அமைப்பின் அங்கத்தினர்களாக நார்நல், ஸ்வாட் (Narnol, Swat) ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வந்தனர். பயிரிடுதலையே தொழிலாகக் கொண்டவர்கள் ஔரங்கசீப்பின் மதக்கொள்கையை வெறுத்த இவர்கள் அவருக்கு விரோதமாக1672-ல் புரட்சி செய்தனர்.ஆனால் ஆயிரக்கணக்கான சத்நமியர்களை ஔரங்கசிப் கொன்று குவித்தார். புரட்சி அடக்கப்பட்டது என்றாலும் சத்நமீஸ் மக்களின் கோபத்தை ஔரங்கசீப்பால் தணிக்க முடியவில்லை.
- பந்தேலர்கள்: இவர்கள் இரஜபுத்திரர்களில் ஓர் பிரிவினர் மாளவத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். கொரிலாப் போர் முறையில் இவர்கள் கைதேர்ந்தவர்கள். மத்திய இந்தியாவிலுள்ள அடர்ந்து காடுகளிலும், உயர்ந்த குன்றுகளிலும் வாழ்ந்து வந்தனர். நல்ல உடற்கட்டு உடையவர்கள். இவர்கள் சம்பட்ராய் (ChampatRai) என்பவரின் ஔரங்கசீப்பின் மதக் கொள்கைகளை எதிர்த்துப் போரிட்டனர். ஷத்திரிய இந்துக்களின் மதிப்பைப் பாதுகாத்து வெற்றி யடைந்தனர். மாளவத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு சுதந்திர இராஜ்யத்தை அமைத்துக் கொண்டார்கள்.
- சீக்கியர்கள்:சீக்கியர்கள் இந்தியாவிலுள்ள இந்துக்களும் முஸ்லீம்களும் இணைந்து வாழ்வதற்கான சமுதாய முறையை அடிப்படை யாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். ஆனால் இந்துக்களுக்கு விரோத மாக ஔரங்கசீப் செய்து வந்த கொடுமைகள் சீக்கியர்களையும் முகலாயர்

களுக்கு விரோதமாக்கியது. சீக்கிய குருவான 'குருதேஷ்பகதூர் காஷ்மீரந்தி லிருந்து முஸ்லீம் கவர்னர் ஷெராப்கானின் கொடுமைகள் தாங்காமல் தப்பி வந்த ஏழு குடும்பத்தினரைக் கண்டு பரிதவித்து. தான் முகலாய பேராதிக்க திற்குப் பெரிய எதிரி என்று விளம்பரப்படுத்தினார். ஔரங்கசீப் ம கொள்கையைக் குறை கூறி, இந்துக்களையும் இந்து மதத்தை ஆதரிக்கும் தலைவராக தான் விளங்கப் போவதாக வெளிப்படையாக அறிவித்தார் இதனால் கோபம் கொண்ட ஔரங்கசீப் 1675-ல் குருதேஷ்பகதை கொலை செய்தார். எனவே சீக்கிய மக்கள் முகலாயப் பேரரசை பழிவாங்க எண்ணினர். குருதேஷ்பகதூரின் மகனான குருகோவிந்த்சிங் அவருக்குட பின் சீக்கியர்களின் தலைவராகி கால்சா (Khalsa) என்ற குழுவினன உருவாக்கினார். சீக்கியர்கள் தனி நாடு ஒன்றை ஆரம்பிக்கத் தூண்டினர் இக்குழுவினர் முகலாயப் பேரரசை எதிர்த்து கிளர்ச்சி செய்து வந்தனர்.

- ரஜபுத்திரர்கள்: ரஜபுத்திரர்களுக்கு எதிராக ஔரங்கசீப் செய்த காரியங்கள் அரச பக்தி கொண்ட அவர்களை பேரரசிற்குப் பகைவர்களாக் இயது. ரஜபுத்திர நாடுகளான மேவார், மார்வார் ஆகிய நாடுகளை ஔரங்கசீப் இணைத்துக் கொண்டதால், ரஜபுத்திரர்கள் எதிர்ப்பு ஓர் எழுச்சிப் போராக மாறியது. பேரரசுக்கு விரோதமாக கடுமையான போர் புரிந்தனர். மேலும் ஔரங்கசீப் மதக்கொள்கைகளால் வெறுப்படைந்த ரஜபுத்திரர்கள் முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு பெரிதும் காரண மானார்கள்.

**மராட்டியர்கள்:**

இந்துக்களுக்கு விரோதமாக ஔரங்கசீப் மேற்கொண்ட நடவடிக்கைகள் மராட்டியர்களின் மதப்பற்றை கிளறி விட்டு கிளர்ச்சிக்கு வழி நடத்தியது. தென்

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் வாழ்ந்த மராட்டியர்கள் இந்து மதத்தைக் காப்பதற்கென்று வீரிட்டெழுந்து முகலாயப் பேரரசை அழித்துவிட்டு ஓர் தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்த முனைந்தனர். சிவாஜி மராட்டியர்களின் தலைவராகப் பொறுப்பேற்று 1663 முதல் 1680 வரை முகலாய அரசுடன் போரிட்டு வந்தார். இந்த மராட்டியப் போர்கள் ஔரங்கசீப்பின் ஆட்சிக்குசாவு மணி அடித்து முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமானது.

**ஔரங்கசீப்பின் மதக்கொள்கை-ஓர் மதிப்பீடு:**

இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் ஐக்கியப்படுத்தி ஒரு பெரிய முகலாயப் பேரரசை அமைக்க அக்பர் பாடுபட்டார். அவர் மதத்தை அரசியலில் இருந்து பிரித்து தனியே இயங்கும்படி செய்தார். ஆனால் ஔரங்க சீப் அரசியலையும் மதத்தையும் பிரித்து ஆட்சி செய்யாமல். இஸ்லாமியப் போதனைகளைப் பின்பற்றுகிற ஓர் அரசாங்கத்தை கட்டாயத்தின் மூலம் ஏற்படுத்த முயற்சித்தார். இதனால்தான் இவர் மத சகிப்புத்தன்மையை ஆதரிக்கவில்லை. இவரது இந்துமதத் துவேஷ கொள்கையால் இந்தியா வில் வாழ்ந்த முஸ்லீம்கள் அல்லாத எல்லா வகுப்பினராலும் இவர் பகைக்கப்பட்டார். இவ்வாறு தனது மதக்கொள்கையால் இந்திய மக்களின் அரச பக்தியையும் ஒத்துழைப்பையும் இழந்த ஔரங்கசீப் முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணமானார்.

**"முகலாயப் பேரரசின் ஔரங்கசீப்பின் பங்கு"**

1526-ல் நடைபெற்ற முதல் பானிபட் போரில் அடைந்த வெற்றி யால் இந்தியாவில் முகலாயப் பேரரசிற்கு வித்திட்டார் பாபர். பேரரசர் அக்பர் தனது வெற்றிகள் மூலமாகவும், சமரசக் கொள்கைகள் மூலமாகவும் பேரரசைப் பலப்படுத்தி புகழ் பெற்றார். நூர்ஜஹானின் உதவியால் நாட்டின் ஆட்சி

முறையை ஓரளவு கண்காணித்து நடத்தி வந்தார் ஜஹாங் கீர். பேரரசர் ஷாஜஹான் கலை இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் கொண் டார். அவரது காலம் 'முகலாய அரசின் பொற்காலம்' என்று போற்றப் படுகிறது. ஆனால் தீவிர மதவாதியான ஔரங்கசீப் முகலாயப் பேரரசிற்குத் தீமை செய்தார். இவரது காலத்தில்தான் முகலாயப் பேரரசின் எல்லைமிக அதிகமாக விரிவடைந்திருந்தது என்றாலும் அவருடைய காலத்தில்தான் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது என்பதை மறுக்க முடியாது.

ஆனாலும் ஔரங்கசீப் ஒருவரே முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் 'காரணமானவர் என்று கூறமுடியாது. ஏனெனில் முகலாய அரசு முழுவது மாக வீழ்ச்சியடைந்தது 1761-ல் நடைபெற்ற மூன்றாம் பானிபட் யுத்தத்தின் முடிவில் ஆகும். பல பேரரசர்களும், அனேக நிகழ்ச்சிகளும் பேரரசின் அழிவுக்கு காரணமாக இருந்தன. ஆனால் ஔரங்கசீப்பின் நடவடிக்கை களே பேரரசின் அழிவில் பெரும் பங்கு கொண்டுள்ளன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஔரங்கசீப் அந்த அளவுக்குக் காரணமாவார் என்பதை இனி காணலாம்.

**பேரரசின் பரப்பு** :

ஔரங்கசீப்பின் வெற்றிகள் முகலாயப் பேரரசின் எல்லைகளை விரித்துக் கொண்டே போயின. தக்காணத்தில் அவர் அடைந்த வெற்றி களால் முகலாயப் பேரரசு மிகவும் பெரியதாக காடசியளித்தது. துரித போக்குவரத்து இல்லாத அக்காலத்தில் இவ்வளவு பரந்த பெரிய நாட்டை தலைநகர் டில்லியிலிருந்து ஆட்சி புரிவது மிகக் கடினமானது. இதனால் ஆங்காங்கே உள்ள கவர்னர்கள் கிளர்ச்சி செய்து பேரரசின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தனர்.

**ஔரங்கசீப்பின் மைய ஆட்சி முறை**

ஔரங்கசீப்பின் காலம் எதேச்சதிகாரிகளின் காலமாகும். ஐரோப்பிய எதேச்சை அரசர்களைப் போலவே ஔரங்கசீப்பும் தெய்வீக உரிமைக் கொள்கையில் ஊறினவராகக் காணப்பட்டார். நாட்டின் எல்லா அதிகாரங்களையும் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் வைத்துக் கொண்டார். தனது அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கவில்லை. இவ் வகை மைய ஆட்சிமுறை அவர் திடகாத்திரமாக இருக்கும்போது ஒழுங் காக நடைபெற்றது. ஆனால் தனது ஆட்சியின் பிற்காலத்தில் நாடு முழுவ தும் சுற்றித்திரிய சக்தியற்றுப்போனதால் ஆட்சி முறையில் அவரது பிடி தளர்ந்தது. அதிகாரிகளும், கவர்னர்களும் தன்னிச்சைப்படி செயல்பட ஆரம்பித்து விட்டனர்.

**பேரரசரின் அதிக அறிவினால் ஏற்பட்ட குறைபாடுகள்:**

ஔரங்கசீப் சிறந்த கல்விமான். நல்ல அறிவும் விவேகமும் இருந்த போதிலும் தம்முடைய ஆட்சியில் ஏற்பட்ட பல பிரச்சனைகளை அறிந்து கொள்ள இயலாதவராகவே இருந்தார். மனித வாழ்க்கையைப் பற்றிய குறுகிய நோக்கங்களைக் கொண்ட அவர், வாழ்வில் ஏற்படும் பிரச்சனை களை துருவி ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான முடிவுகளை எடுக்க இயலாதவராகவே இருந்துவந்தார். அரசியலில் ஏற்படும் எந்த பிரச் சனையும் சமய கண்ணோட்டத்துடனேயே பார்க்கப் பட்டது. எனவேதான் அவருடைய தியாகம், வீரம், நீதியான தீர்ப்பு இவை எல்லாவற்றின் மத்தியிலும் அவர் தீட்டிய திட்டங்கள் சீக்கிரத்தில் நிறைவேற்றப்படாமல் போயின. அவருடைய திட்டங்களின் நோக்கமும் நிறைவேறாமல் போனது.

**ஔரங்கசீப்பின் மத துவேஷம்**

ஔரங்கசீப் ஓர் இஸ்லாமிய மதத்தலைவராக நாட்டை ஆட்சி புரிய விரும்பி இஸ்லாமியச் சட்டதிட்டங்களையே அமுல் நடத்த எண்ணினார். இஸ்லாமியர்கள் அல்லாத இந்தியர்கள் அனைவரையும் இழிவாக கருதி னார். அவர்கள் இஸ்லாம் மதத்தில் சேரும்படியாக கட்டாயப்படுத்தப் பட்டனர். மேலும் ஷியா மதத்தவரையும் வெறுத்ததால் அவர்களும் பேரரசின் மீது வெறுப்புக் கொண்டனர். சுமார் 80% இந்துக்களால் நிறைந்த இந்தியாவை இஸ்லாமிய மயமாக்குவது முடியாத காரியம் என்பதை ஔரங்கசீப் மறந்தது பேரரசின் வீழ்ச்சிக்கு பெரிதும் காரணமானது.

**ஔரங்கசீப் தனது குமாரர்களை ஆட்சிமுறையில் பழக்கத் தவறியது:**

'தான் கள்ளன் பிறத்தியானை நம்பாள்' என்ற முதுமொழிப்படி, ஔரங்கசீப் தான் தன் தகப்பன் ஷாஜஹானுக்குச் செய்த கொடுமைகள் தன் பிள்ளைகளும் செய்துவிடுவார்களோ என்று பயந்து தனது பிள்ளைகளும் நம்பவில்லை. அவர்களை ஆட்சி முறையில் பழக்குவித்து தமது பரந்த பேரரசின் நிர்வாகப் பொறுப்பில் பங்குகொள்ளச் செய்ய வில்லை. கூடுமானவரை அவர்களை தலை நகரத்தை விட்டு தூர இடங் களில் வாழும்படி செய்தார். கலகம் செய்த தனது மகன் அக்பரை நாடு கடத் தினார். மகன் மௌசாம் (Mauzzam), மகள் 'செப் உன்னிஷா' (Zeb-un-Nissa) ஆகியோரை சிறையிலடைத்தார். எனவேதான் ஔரங்கசீப் இறந்த பின்னர் பட்டத்திற்கு வந்த மகன் பகதூர்ஷா ‘வயது முதிர்ந்தவராக இருந்தாலும் அனுபவத்தில் இளைஞராகவே' காணப்பட்டார். இவ்வாறு ஔரங்கசிப் பிற்குப் பின் நாட்டின் நிர்வாகத்தை நடத்த அனுபவம் பெற்ற ஓர் இளவரசர் இல்லாததால் நாளடைவில் முகலாயப் பேரரசு அழிய ஆரம்பித்தது.

**ஔரங்கசீப்பின் நிர்வாகச் சீர்கேடு:**

ஔரங்கசீப் நிர்வாகத் திறமை படைத்த ஓர் அரசர். அவருடைய அனுபவமும் திறமையும், அவரது கையின்கீழ் பணி புரிந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் திறமையற்றவர்கள் என்ற ஓர் உணர்ச்சியை அவருக்கு உண்டாக்கியது. எனவே அவர்களை மிகக் குறைவாக மதிப்பிட்டு சாதாரண எழுத்தர்களாகக் கருதினார். எனவே அந்த அதிகாரிகள் சுயமாக எந்தக் கொள்கையையும் உருவாக்க இயலாதவர்கள் ஆனார்கள். அவசர காலங்களில் கூட தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க திகைத்தனர். மொத்தத்தில் அரசர் இல்லையென்றால் அலுவலர்கள் தனித் தியங்க முடியாதவர்களாயினர். இதனால்தான் ஔரங்கசீப்பிற்கு பின்னால் அரசர்கட்கு வழிகாட்டிகளாக அமைய அமைச்சர்களும் இல்லை. அதிகாரி களும் இல்லை.

**நாட்டின் பொருளாதார நலனைக் கவனியாமை**:

ஔரங்கசீப் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும், நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதும் தனது கடமை என்றுணராது, நாட்டின் எல்லையை வரிவடையச் செய்வதும் அதற்கென போர் புரிவதும், பிற நாட்டுப் படையெடுப்பிலிருந்து தன் நாட்டைக் காப்பது மட்டுமே தனது கடமை என்று எண்ணினார். எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பற்றிக் கண்டுகொள்ளவே இல்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஐரோப்பிய வியாபாரிகளும் பாரசீக வணிகர்களும் இந்திய பொருட்களை வாங்கிவிற்று கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இஸ்லா மிய வியாபாரிகட்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டன. இவ்விதப் பொருளர்தாரச் சீர்கேடுகளால் முகலாயப் பேரரசின் சிதைவிற்கு ஔரங்கசீப் வழிவகுத்தார்.

**இந்தியக்கலை, கட்டிடக்கலை ஆகியவற்றை ஆதரிக்கத் தவறியது:**

தீவிர மதப்பற்றுடைய பேரரசர் சாதாரண எளிய வாழ்க்கையையே மேற்கொண்டார். மது அருந்துவதை நிறுத்தினார். அழகுக்கும், ஆடம்பர வாழ்க்கைக்கும் அவர் விரோதியாகவே காணப்பட்டார். கட்டிடங்கள் கட்டுவதில் ஆர்வமில்லை. சங்கீதம், நடனம், வர்ணம் தீட்டுதல் போன்ற கலைகளை ஒழித்துக் கட்டினார். எனவே இவர் காலத்தில் கலை வளர்ச் சியே இல்லை. நிர்வாகம் ஓர் சாவு ஊர்வலம் போலவே காணப்பட்டது. ஆனால் குடிப்பது, நடனம் ஆடுவது, பாடுவது போன்ற களியாட்டங்களில் ஊறித்திளைத்த முகலாய பிரபுக்கள் ஔரங்கசீப்பின் இக்கொள்கைகளை எதிர்த்தனர். தங்கள் சந்தோஷங்களுக்கு எதிராக இருந்த ஔரங்கசீப்பை விரும்பவில்லை, மேலும் வேலை இழந்த கலை வல்லுநர்கள், தொழிலா ளர்களின் ஆதரவும் முகலாயப் பேரரசுக்கு கிடைக்கவில்லை.

**நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறியது**:

சிறந்த நிர்வாகத் தலைவரான ஔரங்கசீப் தனது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் நாட்டில் அமைதியை நிலைநாட்டி சட்டத்தை அமுல்படுத்தி யதில் தோல்வியடைந்தார். இதனால் புரட்சிகளும் குழப்பங்களும் நாட் டில் மலிந்தன. கொலைக் குற்றங்கள் சாதாரண காரியங்களாயின. இஸ்லா மியர் அல்லாத மக்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளில் எதிர்ப்புணர்ச்சி யோடு புரட்சி செய்தனர். இதனால் நாட்டில் சீர்கேடுகள் நிறைந்தன. இது முகலாய ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமானது.

**அடிக்கடிப் போரிடல்**

போர் என்பது பேரரசர்களுக்கு பெரும் விருப்பத்தைக் கொடுக்கக் கூடியதே என்றாலும் அது 'தேவையான தீமை' (necessary evil) என்பதை ஔரங்கசீப் மறந்துவிட்டார். நான்கு திசைகளிலும் போர் செய்ததால் லட்சக்கணக்கான போர் வீரர்கள் இறந்தனர். அரச கருவூலம் காலியானது. போர்ச்செலவு அதிகமானதால் மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை செயல்படுத்த வழியில்லாமல் போய்விட்டது. யுத்தத்தின்மீது மோகம் கொண்ட முகலாயப் பேரரசின் ஆட்சியை சமாதான நோக்கம் கொண்ட இந்திய மக்கள் வெறுத்தனர். ஔரங்கசீப் அடிக்கடி போரிட்டதால் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

**முடிவுரை**

இதுவரை சொல்லப்பட்ட காரணங்களிலிருந்து முகலாயப் பேரரசின் வீழ்ச்சி ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலத்திலிருந்தே ஆரம்பமாயிற்று என்பது தெரியவருகிறது. அவரது ஞானமற்ற மதக்கொள்கை களால் பல இடங்களில் புரட்சி ஏற்பட்டன. கவர்னர்களும் அதிகாரிகளும் பேரரசரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். பல பகுதிகளில் சுதந்திர நாடுகள் அமைக்கப்பட்டன. ஔரங்கசீப் தனது ஆட்சி முறையில் பெரிய வீழ்ச்சியடைந்தார். அந்த வீழ்ச்சி முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு அடிகோலியது!

**ஔரங்கசீப்பைப் பற்றிய மதிப்பீடு**:

ஔரங்கசீப்பின் சொந்த வாழ்க்கை போற்றுதலுக்குரியது. இளமைக்காலம் தொட்டே அறிவுக் கூர்மையுள்ளவராகவும் வீரமிக்கவராசு வும் திகழ்ந்தார். தனது ஆற்றலை வெளிப்படுத்த கிடைத்த வாய்ப்புகளை அவர் பயன்படுத்தாமல் நழுவவிட்டதேயில்லை. இவரது வாழ்க்கை எளிமையும், பக்தியும், புலனடக்கமும் நிறைந்தது. அவர் எப்பொழுதும் உணர்ச்சிகளுக்கு

அடிமைப்பட்டதில்லை. விலக்கப்பட்ட உணவையும், பணத்தையும், எடையையும் விலக்கினார். ஔரங்கசீப் இஸ்லாமிய சமயத்து இறையியலின் ஆர்வமிக்கக மாணவராகத் திகழ்ந்தார். இவரது கையெழுத்து மிக அழகாக இருக்கும். ஆனால் இவர்கலையையும் இலக்கி யத்தையும் ஆதரிக்காதது பெருங்குறையாகும். இவருடைய ஆதரவுடன் எழுதப்பட்ட ஒரே நூல் பதாவா-இ-ஆலம்கீர் (Fatawa-I-Alamgirl என்பதாகும்.

ஔரங்கசீப்ஒருபக்தியுள்ளமுஸ்லீம். குர்ரானி விதிமுறைகட்கேற்ப வாழ்ந்தார். ஆனால் தனது சமயக்கொள்கையில் அளவுக்கு மீறிய பிடிவாதத் தோடு நடந்து கொண்டது அவரை ஓர் சமய வெறியராக்கி விட்டது. இவர் பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டிருந்தாலும் இந்தியாவின் ஆட்சியாளர் என்ற முறையில் பெருந்தோல்வியே அடைந்தார். ஒரு பேரரசின் பெருமை யும், புகழும் மக்களின் ஒத்துழைப்பினாலே கிடைக்கின்றன என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்துக்கள் நிறைந்த இந்திய நாட்டை ஆட்சி செய்கின்ற அரசருக்கு சமயத்துறையில் பரந்த நோக்கம் இன்றியமையாதது என்பதையும் அவர் உணர்ந்திருக்க வில்லை. எல்லாத் துறைகளிலும் தோல்வியடைந்து முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு வித் திட்ட ஔரங்கசீப் 1707-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி அகமது நகரில் காலமானார். அவரது உடல் தௌலதா பாத்தில் அடக்கம் செய்யப்பட்டது..

**சிவாஜி**

தக்காணத்தில் பல பெரிய அரசுகள் தோன்றி மறைந்துள்ளன. அவற்றுள் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய மராட்டிய அரசு மிகச்சிறந்ததொன்றாகும். இந்தியாவின் தென்பகுதியில் இஸ்லாமிய மதம்,

அதிகமாகப் பரவவிடாமல் தடுத்தவர்கள் மராட்டியர்கள். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமானவர்களும் இவர்களே. இவர்களின் சிறந்த தலைவராக விளங்கியவர் சிவாஜி ஆவார். மராட்டியர்களின் எழுச்சிக்கு சிவாஜிதான் காரணமாவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த மராட்டி யர்களின் எழுச்சி இந்திய வரலாற்றில் முக்கியத் திருப்பத்தை உண்டாக்கியது.

**மராட்டியர்களின் எழுச்சிக்கான காரணங்கள்:**

**நிலவியல் அமைப்பு**

நிலவியல் அமைப்பு மராட்டியர்களின் எழுச்சிக்குக் காரணமாகும். மராட்டிய நாடு வடக்கிலிருந்து தெற்காக சயாத்திரி (Savadri) மலைத் தொடராலும், கிழக்கிலிருந்து மேற்காக விந்திய சாத்பூரா மலைத் தொடர் களாலும் சூழப்பட்டிருந்தது. மேலும் கணக்கிலடங்கா மலைக் கோட்டை கள் இருந்தன. இம்மலைகளும் கோட்டைகளும் நாட்டைப் பகைவர் களிடமிருந்து காத்துக்கொள்ள இயற்கையான பாதுகாப்பு அரண்களாக விளங்கின.

**மக்களின் தன்மை**

இந்த நாட்டில் மழை குறைவு என்பதாலும், கற்கள் நிறைந்த வளமற்ற நிலமாக இருந்ததாலும் மக்களின் வாழ்க்கை மிகக்கடினமாக இருந்தது. தங்கள் அன்றாட உணவிற்கே கடுமையாக உழைக்க வேண்டிய திருந்தது. இதன் காரணமாக மராட்டியர்கள் தன்னம்பிக்கை,வீரம், விடாமுயற்சி,மனஉறுதி போன்ற நல்ல தன்னம்பிக்கைகளைக் கொண்டி குந்தார்கள். நேர்மையும், சமுதாய சமத்துவ உணர்ச்சியும் அவர்களிடம் காணப்பட்டது.

**மதப்பற்று**

மராட்டிய மக்களிடையே துக்காராம். ஏக்நாத், வாமன்பண்டிட் குகுராம்தாஸ் போன்ற சமயப் பெரியோர்கள் தோன்றி மக்களிடம்

பக்தியையும், சமத்துவத்தையும் போதித்தார்கள். ஜாதி, மதம், தொழிலின் சிறப்பு, சமூகத்திலுள்ள மதிப்பு இவற்றால் பயனில்லை என்று போதித்தார்கள். பல பக்தி இலக்கியங்களைப் படைத்தார்கள். பல பாடல்கள், இலக்கியங்கள் படைத்தார்கள். அவைகளில் 'தசபோதம்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவை மக்களிடம் இனப்பற்றையும், ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்தி யது. மக்களின் வாழ்க்கை, மொழி கொள்கைய ஆகியவற்றில் ஐக்கியம் வளர்ந்தது.

**போர்துறை அனுபவம்:**

மராட்டியர்கள் தென்னிந்திய சுல்தானியங்களின் அரசுகளின் பல பதவிகளை வகித்தார்கள். இதனால் அரசியல் மற்றும் படைத்துறை ஆகிய ' வற்றில் அனுபவமிக்கவர்களாக இருந்தனர். சிவாஜியின் தந்தை ஷாஜி பான்ஸ்லே அக்மத்நகர் சுல்தான் படையில் பணியாற்றியவரே! முராரிராவ், நமதன்பண்டிதர், தர்சோகலே, யேசுபண்டிதர் போன்ற மராட்டிய தலைவர் கள், அமைச்சர்கள், திவான்கள் போன்ற பதவிகளை பல சுல்தானியங்களில் வகித்தார்கள். இந்த அனுபவங்கள் அவர்களின் எழுச்சிக்கு காரணமானது

**அரசியல் விழிப்புணர்வு**

இந்தியாவின் அரசியல் நிலை மராட்டியர்களின் எழுச்சிக்கு மிகவும் உதவியது. தக்காண சுல்தான்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டு வலிமையிழந்து காணப்பட்டார்கள். அவர்கள் மராட்டியர்களின் எழுச்சிக்கு எந்த இடையூறும் செய்ய வலியற்றிருந்தார் கள். அதேநேரம் இந்துக்களுக்கு எதிராக ஔரங்கசீப் பின்பற்றிய அடக்குமுறைக் கொள்கையும் போரும் ஒரு சுதந்திர மராட்டிய நாட்டை அமைக்க வேண்டும் என்ற அரசியல் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத் தியது. எனவே பல பிரிவுகளாக இருந்த மராட்டியத் தலைவர்கள், தங்களின் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டார்கள்.

**சிவாஜியின் தலைமை**

மராட்டியர்களின் எழுச்சிக்கு சிவாஜியின் தலைமை முக்கியக் காரணமாகும். சிவாஜிக்கு முன்னர் சுதந்திர தீபத்தை ஏற்றி வைக்க தகுந்த தலைவர்கள் தனது தலைமையில் ஒன்றுபடுத்தினார். தக்காண சுல்தான்கள் மற்றும் முகலாயருடன் போரிட்டு ஒரு சுதந்திர நாட்டை அமைக்க காரண மானார். இவரது தேசப்பற்றும், திறமையும், தலைமைத்தன்மையும் மராட்டியர்களின் எழுச்சிக்கு காரணமானது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சிவாஜியின் வாழ்க்கைக் குறிப்பு:**

மராட்டிய வீரரான சிவாஜி பூனா மாவட்டத்தில் பல கிராமங்களில் தலைவர்களாக விளங்கிய 'பான்ஸ்லே ' என்ற வம்சத்தில் ஷாஜி பான்ஸ்லே என்பவரின் மகனாக 1627 ஏப்ரல் 4-ம் தேதி ஷிவனேரி (Shivaneri) என்ற கிராமத்தில் பிறந்தார். தாயின்பெயர் ஜீஜாபாய், ஷாஜிபான்ஸ்லே தனது இரண்டாவது மனைவியான துக்காபாய் மீது அதிகப் பற்றுக் கொண்டு, சிவாஜியை தம் தாயுடன் தாதாஜி கொண்ட தேவ் என்ற பிராமணரின் பராமரிப்பில் விட்டுவிட்டு, பீஜப்பூர் சுல்தானிடம் பணியாற்ற சென்று விட்டார். கணவரால் புறக்கணிக்கப்பட்ட ஜீஜாபாய் அறிவும், பண்பும், நல்லொழுக்கமும் மிக்கவர். தனது மகன் சிவாஜிக்கு வீரத்தையும், பக்தியையும் ஊட்டினார். சிறந்த பண்புள்ளவராக உருவாக்கினார். குருராம்தாசும், துக்காராமும் சிவாஜியின் சிறந்த மதகுருக்கள். மராட்டியர்களை ஒன்றுபடுத்தவும், இந்து சமயத்தைப் பாதுகாக்கவும் அவர்கள் போதித்தனர். "தாயும் தாய்நாடும் சொர்க்கத்தைவிடச் சிறந்தவை. கடவுள் பெயரில் நம்பிக்கையில்லாமல் வாழ்வதைவிட சாவதே சிறந்தது. மதத்தைப் பாதுகாக்காமல் வாழ்வதில் பயனில்லை" என்று கூறினார் ராம்தாஸ்.- இதனால் சிவாஜியின்

நாட்டுப்பற்றும் மதப்பற்றும் வளர்ந்தது. தாதாஜி கொண்டதேவ் சிவாஜிக்கு போர் பயிற்சி குதிரையேற்றம் ஆகிய கலைகளைக் கற்றுக் கொடுத்தார். வலிமையான படையை அமைத்தல், கோட்டைகளை எதிரிகளிடமிருந்து காத்தல், கொரில்லாப் போர் போன்ற வற்றையும் சிவாஜி அவரிடம் கற்றுக்கொண்டார்.

சிவாஜி தனது இளமைக் காலத்தில் மேற்கு கடற்கரையிலுள்ள மாவல் நாட்டு மலைஇன மக்களுடன் நெருங்கிப் பழகினார். மாவாலி மக்கள் முரட்டுத்தனம் வாய்ந்த சிறந்த வீரர்கள், சலியாது உழைப்பவர்கள். அவர்களுடன் மலைப்பகுதிகளிலெல்லாம் சிவாஜி சுற்றித் திரிந்ததால் மராட்டிய நாட்டின் மலைவழிகள் பள்ளத்தாக்குகளை நன்கு அறிந்தி ருந்தார். எனவேதான் பின்னர் சிறந்த 'மலையெலி' என்ற பட்டத்துடன் வீரராகத் திகழ்ந்தார்.

**சிவாஜியின் வெற்றிகள்:**

சிவாஜி தனது பன்னிரெண்டாவது வயது முதலே தந்தையின் ஜாஹீரின் நிர்வாக முறைகளை கவனித்து வந்ததால் நல்ல நிர்வாக அனுபவம் கிடைத்தது. தனது 19-ம் வயதில் போரில் இறங்கினார். அத்தியர்களின் ஆதிக்கத்தி லிருந்து மராட்டிய மக்களை விடுதலையாக்கற் அவர்களுக்கென்று ஒரு தனி ராஜ்யத்தை ஏற்படுத்தப் போரில் இறங்கினார்.

**தோர்னா கோட்டையைக் கைப்பற்றுதல்**

பீஜப்பூர் சுல்தானின் சீர்கேடான ஆட்சி முறையில் அப்பகுதியில் உள்ள மராட்டிய மக்கள் கடுந்துன்பமடைந்தனர். 1646-ல் சுல்தான் நோய் வாய்ப்படவே நாட்டில் கலகங்களும் புரட்சியும் ஏற்பட்டன. இச்சூழ் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பூனாவிற்கு தென்மேற்கிலிருந்த தோர்னா

கோட்டையைத் தனது 19-ம் வயதில் கைப்பற்றினார் சிவாஜி. அதன் பலனாக சுமார் இரண்டு லட்ச ரூபாய் கிடைத்தது. அதைக் கொண்டு தனது படையைப் பலப்படுத்திக் கொண்டார். அதேயாண்டில் ரெய்க்கார் கோட்டையைக் கைப்பற்றினாலும் அதை சிறிது காலத்தில் இழக்க வேண்டியதாயிற்று.

**ஷாஜிபான்ஸ்லே கைது செய்யப்படல்:**

இவ்வாறு சிவாஜியின் அதிகாரம் வளர்வதைக் கண்டு கோபமடைந்த சுல்தான் சிவாஜியின் தந்தை ஷாஜியைக் கைது செய்து சிறையிலடைத்தார். அவரது ஜாஹிர் பறிமுதல் செய்யப்பட்டது. இதனால் சிவாஜி திகைத்தார். சுல்தானுக்கெதிராக சிவாஜி தனது நடவடிக்கைகளைத் தொடரக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், ஷாஜி விடுதலை செய்யப்பட்டார். சிவாஜியும் 1649-'55 வரை தனது செயல்பாடுகளை நிறுத்தி வைத்தார். இக்காலத்தில் தனது படைக்கு நல்ல பயிற்சி அளித்தார் சிவாஜி.

**ஜாவ்லி கோட்டையைக் கைப்பற்றுதல்:**

சர்தார் சுந்தர்ராவ் என்ற மராட்டியத் தலைவர் ஒருவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து 16-ம் நூற்றாண்டிலேயே ஒரு ஜாகீரைப் பெற்று மராட்டியப் பகுதியின் வடமேற்கில் ஜாவ்லி கோட்டையை அமைத்திருந் தார். அவர் அடில்ஷா என்ற கவர்னருடன் சேர்ந்து கொண்டு சிவாஜிக்கு எதிராகப் பல சதித்திட்டங்களை வகுத்தார். இதை அறிந்த சிவாஜி போர்க் கருவிகளை வாடகைக்கு வாங்கி போரிட்டு 1656-ல் ஜாவ்லி கோட்டையைக் கைப் பற்றினார். இதனால் சிவாஜியின் பெயரும் புகழும் மராட்டியர் மத்தியில் உயர்ந்தன. அதிகமானபேர் இவரது படையில் சேர முன்வந்தனர்.

**ரெய்கார் கோட்டையைக் கைப்பற்றுதல்:**

ஜாவ்லி கோட்டையைக் கைப்பற்றிய சிவாஜி தொடர்ந்து தன் ராஜ்யத்தைப் பெரிதாக்க நினைத்தார். எனவே ரெய்கார் கோட்டையைத் திரும்பவும் தாக்கி கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து பூனாவிற்கு அருங் லுள்ள 'சுபா' கோட்டையைப் பிடித்தார். சுபா, பாரமதி, இந்துபூர் ஆகிய இடங்கள் பூனா மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் சிவாஜிக்குப் பாதுகாப்பாக விளங்கின. புரந்தர், ரெய்க்கார், கோண்டு வானா, தோர்வா, கல்யாண் ஆகிய கோட்டைகள் வொஜி ராஜ்யத்தில் சிறந்த மலைக் கோட்டைகளாக விளங்கின.

**பீஜப்பூர் சுல்தானோடு போர் (1657-62):**

இதுவரை முகலாயப் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாது காத்துக் கொண்டிருந்த பீஜப்பூர் சுல்தான் ஔரங்கசீப் மகுடப் போட்டியில் ஈடுபடுவதற்காக தக்காணத்தை விட்டு சென்றதால் பயமில்லாமல் வாழ்ந்தார். எனவே சிவாஜியின்மீது சீற்றம் கொண்டு அவரைத் தண்டிக்க நினைத்தார். தனது தலைமைத் தளபதியான அப்சல்கானை (Afzal Khan ஒரு வார காலத்தில் சிவாஜியைக் கைதுசெய்தோ அல்லது பிணமாகவோ பீஜப்பூர் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். வீராவேசத்துடன் சென்ற அப்சல்கான் மராட்டிய எல்லைக்குள் கால் வைத்தவுடன் மக்களைக் கொள் றும், பயிர்களை அழித்தும் சேதப்படுத்தினார். பல இடங்களில் இந்துக் கோவில்களை அழித்தார். ஆனால் சிவாஜி தனது பிரதாப்கார் கோட் டையை விட்டு வெளியே வரவில்லை.

ஆனால் சிவாஜி தங்கியிருந்த மலைப்பகுதியை அடைய முடியாது என்பதைப் புரிந்துகொண்ட அப்சல்கான், தான் தங்கியிருந்த இடத்திற்கு சிவாஜியை பேச்சுவார்த்தை நடத்துவதாக அழைத்து வஞ்சகமாக கொல்ல நினைத்தார். எனவே கிருஷ்ணாஜி பாஸ்கர் என்ற மராட்டிய பிராமணர் மூலம்

சிவாஜிக்கு தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லி அனுப்பினார். அப்சல்கான் அதற்கு சம்மதித்த சிவாஜி முன்னெச்சரிக்கையாக உள்கவசம் அணிந்து சென்றார். சிவாஜியை வரவேற்பதுபோல பெரிய உருவம் கொண்ட அப்சல்கான் தனது இருகைகளாலும் அவரைத் தழுவிக்கொண்டு தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்த முயன்றார். உடனே சிவாஜி தான் மறைத்து வைத்திருந்த பாக்நக் (Bagh Nagh) என்ற புலிநகம் போன்ற எஃகு ஆயுதத்தால் அப்சல்கானைத் தனது பிரதாப் கோட்டையில் வைத்து கொன்றார்.தலைவரைஇழந்தபீஜப்பூர்படையும்சின்னாபின்னமாக்கப்பட்டது.

பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்த மான கொங்கணம் கோல்காப்பூர் மாவட்டங்களைக் கைப்பற்றினார் சிவாஜி. 1661-ல் சிவாஜியுடன் பீஜப்பூர் சுல்தான் சமாதானம் செய்து கொண்டு அதுவரை சிவாஜி வென்ற பகுதிகளின் தலைவராக அவரை அங்கீகரித்தார்.

**முகலாயர்களுடன் தொடர்பு:**

பீஜப்பூர் சுல்தானின் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்த சிவாஜி அச்சமயம் தக்காணத்தின் கவர்னராக இருந்த ஔரங்கசீப்பிடம் தட்பு கொண்டிருந்தார். சில சமயங்களில் மராட்டியப்படை ஔரங்கசீப் பிற்கு ஆதரவாக பீஜப்பூர் சுல்தானை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் மகுடப் போட்டியில் ஔரங்கசீப் தீவிரமாக ஈடுபட்டதைக் கண்ட சிவாஜி தக்காணத்திலிருந்த சில முகலாயப் பகுதிகளைத் தாக்கிப் பிடித்தார். முகலாயப் பேரரசராக வந்த ஔரங்கசீப் சிவாஜியின் தந்திரத்தையும், அப்சல்கானுக்கு அவர் செய்த தீங்கினையும் கேள்விப்பட்டு சிவாஜியை அடக்குமாறு தக்காணத்தில் முகலாயக் கவர்னராகப் பதவியேற்றிருந்த தனது மாமனான செயிஸ்டகானுக்கு கட்டளையிட்டார்.

**சிவாஜியும் செயிஸ்டகானும்**

பேரரசரின் கட்டளையை ஏற்ற செயிஸ்டகான் வீராவேசத்துடன் சென்று மராட்டியப் பகுதிகளைத் தாக்கினார். பூனாவிற்கு சென்று சாகன் (Chahan) கோட்டையைக் கைப்பற்றினார். அதோடு நில்லாமல் கல்யாண் மாவட்டத்திலுள்ள மராட்டியரை விரட்டியடித்தார். அச்சமயத் தில் சிவாஜி தனது தகப்பனாரின் உதவியால் பீஜப்பூர் சுல்தானுடன் சமாதானம் செய்து கொண்டு முகலாயப் படையை எதிர்த்து கடுமையாகப் போர் புரிந்தார். போர் இரண்டு ஆண்டு காலம் நீடித்தது. திடீரென சிவாஜி பூனாவிலிருந்த செயிஸ்டகானின் பாசறையை நாநூறு போர் வீரர்களுடன் சென்று 1663, ஏப்ரல் 14-ம் தேதி இரவு நேரத்தில் தாக்கினார். அவரது படுக்கை அறையிலேயே கொல்ல முயற் சித்தார். ஆனால் தனது மூன்று கை விரல்களை இழந்து தப்பி ஓடிவிட்டார். ஆனால் அவரது மகள், தளபதி. நாற்பது துணிகரச் செயல் அவர் புகழை மேலும் உயர்த்தியது.

**சிவாஜி சூரத்தைக் கைப்பற்றுதல்:**

செயிஸ்டகானைத் தோற்கடித்து பூனாவைக் கைப்பற்றியதால் மராட்டிய வீரர்கள் ஊக்கம் கொண்டனர். சிவாஜியின் தீரச்செயல்கள் யாவராலும் பாராட்டப்பட்டது. இதனால் சிவாஜியின் ஆசையும் அதிக மானது. 1664 ஜனவரியில் திடீரென்று மேற்கு கடற்கரையில் வாணிபத்தில் சிறந்த செல்வச் செழிப்புடன் இருந்த சூரத் நகரைத் தாக்கினார். சிவாஜியின் 4000 படைவீரர்களைக் கண்ட முகலாய கவர்னர் சூரத்திலிருந்து ஓடிவிட் டார். சூரத்தைத் தாக்கி சுமார் ஒருகோடி ரூபாய் பெறுமான கொள்ளைப் பொருட்களுடன் அங்கிருந்து திரும்பினார். இதுவும் சிவாஜியின் மற்றொரு

துணிகரச் செயலாகும். 1670 அக்டோபர் மாதம் இரண்டாம் முறையாக சூரத்தைத் தாக்கினார்.

**சிவாஜியும், ராஜா ஜெய்சிங்கும்:**

முகலாய அரசின் மதிப்பையும், புகழையும் பாதிக்கக்கூடிய படை யெடுப்புகளில் ஈடுபட்ட சிவாஜியின் செயல்களைக் கண்ட ஔரங்கரிப் அவருடைய கொட்டத்தை அடக்கும்படியாக ஆம்பர்நாட்டு அரசன் மிர்சா ராஜா ஜெய்சிங்கையும், இலர்கான் என்ற படைத்தலைவனையும், 1655-ல் தக்காணத்திற்கு அனுப்பி வைத்தார். போர் அனுபவமும் திறமையும் மிகுந்த ஜெய்சிங் மராட்டியத் தளபதிகளும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கியிருந்த புரந்தர் கோட்டையைத் தாக்கினார். இதில் ஏராளமான சிவாஜியின் வீரர்கள் கொல்லப்பட்டனர். இதன் பிறகு முகலாயப்படை சிவாஜியின் தலைநகரான ரொய்க்கார் கோட்டையையும் தாக்கியது. எனவே சிவாஜி 1665 ஜூன் 22-ம் தேதி ஜெய்சிங்குடன் புரந்தர் என்னுமிடத் தில் உடன்படிக்கை செய்து கொண்டார்.

**புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்:**

சிவாஜி தனது முப்பத்தைந்து கோட்டைகளில் இருபத்தி மூன்றை முகலாயப் பேரரசுக்குக் கொடுத்துவிட்டு பன்னிரெண்டு கோட்டைகளை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும். தக்காணத்தில் முகலாயப் படைகளுடன் சேர்ந்து போர் புரிய 5000 குதிரைகள் அடங்கிய படையை சிவாஜி கொடுக்கவேண்டும். சிவாஜியின் இழப்பீட்டிற்கு ஈடாக பீஜப்பூர் ராஜ்யத்தைச் சேர்ந்த சில மாவட்டங்களில் சௌத், சர்தேஷ்முகி முதலியன வரிகளை வசூலிக் கும் உரிமை கொடுக்கப்பட்டது.

**ஆக்ராவில் சிவாஜி:**

புரந்தரில் உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர் ராஜா ஜெய்சிங் கும் சிவாஜியும் சேர்ந்துகொண்டு பீஜப்பூரைத் தாக்கினர். ஆனால் அப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. இதனால் சிவாஜி பீஜப்பூர் சுல்தானோடு சேர்ந்து விடுவாரோ என்று சந்தேகித்த ஜெய்சிங் சிவாஜியை முகலாயப் பேரரசின் அரசவைக்கு வருமாறு வேண்டிக் கொண்டார். வேண்டிய மரியாதையும், நல்ல வரவேற்பும் கிடைக்கும் என்றும் உயிருக்கு ஆபத்தில்லை என்றும் ஜெய்சிங் உறுதி கூறினார். அதன்படி தனது மகன் சாம்பாஜியுடன் 1666-மே மாதம் ஆக்ராவுக்குச் சென்றார். அரசவையில் அவருக்குரிய மரியாதை கொடுக்கப்படவில்லை. மூன்றாம் நிலை பிரபுக்களின் வரிசையில் நிற்கும்படி சிவாஜி கேட்டுக் கொள்ளப் பட்டார். இதனால் அவமானம் அடைந்த சிவாஜி கோபம் கொண்டு அரச வையில் வைத்தே ஔரங்கசீப்பைத் தாக்கிப் பேசிவிட்டார். எனவே சிவாஜியும் அவர் மகனும் கைது செய்யப்பட்டு ஆக்ரா சிறையில் அடைக் கப்பட்டார்கள். சுமார் மூன்று மாத காலமாகத் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகும் எந்த பயனும் ஏற்பட வில்லை, சிறிது காலத்தில் சிவாஜியைக் கொல்ல ஔரங்கசீப் திட்டமிட்டி ருந்தார். ஆனால் சிவாஜியோ தந்திரமாக பழக்கூடை மூலம் தனது மகனுடன் சிறையிலிருந்து தப்பித்து 1666 செப்டம்பர் 22-ல் தன் நாட்டிற்குக் திரும்பி வந்தார். அவர் தப்பி வந்தது கடவுள் செயல் என்று மக்கள் அவரை வரவேற்றனர்.

**முகலாயப் பேரரசுடன் மறுபடியும் போர்:**

ஆக்ராவிலிருந்து தப்பிவந்த சிவாஜியை அடக்க எந்த முயற்சியும் எடுக்க இயலாதபடி ஔரங்கசீப் வடமேற்கு எல்லைப் போர்களில் ஈடு பட்டிருந்தார். சிவாஜியும் 1667 முதல் 1669 வரை தனது முழுக் கவனத்தை யும் ஆட்சி

முறையில் செலுத்தினார். நாட்டில் சிறந்த ஆட்சி முறையை நிறுவினார். 1667-ல் தக்காண கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த தன்வந்த்சிங் குடன் நட்புறவு கொண்டிருந்தார். தன்வந்த்சிங் பேரரசர் ஔரங்கசீப்பிடம், சிவாஜியுடன் சமாதானம் செய்து கொள்ளும்படி கூறினார். எனவே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி சிவாஜிக்கு 'மராட்டியமன்னர்' என்ற பட்டமும், ஷாம்பாஜிக்கு 5000 மன்சப்தார் பதவி யும் அளிக்கப்பட்டது. ஆனால் பேரரசருக்குக் கீழ்ப்படிந்த சிற்றரசராக சிவாஜி இருக்க விரும்பவில்லை. எனவே 1670-ல் தான் புரந்தர் உடன்படிக்கைப்படி விட்டுக் கொடுத்த கோட்டைகளையெல்லாம் கைப்பற்றிக் கொள்ள படையெடுத் தார். இரண்டாம் முறையாக சூரத்தைத் தாக்கி மிகுதியான செல்வத்தைக் கொள்ளையடித்தார். 1672-ல் முகலாயர்களை சால்கர் (Salher) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். 1670-74-க்குள் முகலாயர்களிடமிருந்து எல்லாக் கோட்டைகளையும் மீட்டார். அதே நேரம் பீஜப்பூருக்குச் சொந்தமான ஹுப்ளி, கர்வர், அங்கோலா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். முகலா யர்களிடமிருந்தும், பீஜப்பூரிடமிருந்தும் தாம் கைப்பற்றிய பகுதிகளில் சௌத் என்னும் வரியை வசூலித்தார்.

**சிவாஜி மகுடம் சூட்டிக் கொள்ளல்:**

தனது புகழின் உச்சியிலிருந்த சிவாஜி, 1674-ம் ஆண்டு ஜூன் 6ல் 'சத்ரபதி' (The Lord of the Umbrella) என்ற பட்டமேற்று தனது தலைநகர் ரெய்காரில் கோலாகலமாக முடிசூட்டிக் கொண்டார். ஒரு தனி இந்து ராஜ்யம் தக்காணத்தில் தோன்றியது. ஔரங்கசீப்பிற்கு பெரும் மனக் குழப்பத்தைக் கொடுத்தது. மராட்டிய மக்களும் மற்ற இந்துக்களும் புதிதாக ஓர் விஜயநகர ராஜ்யம் தோன்றியுள்ளதாக நினைத்து மகிழ்ந்தனர்.

**சிவாஜியின் ராஜ்ய பரப்பு:**

முகலாயப் பேரரசின் பல பகுதிகளை வென்ற சிவாஜி 1677-ல் கோல்கொண்டா சுல்தானுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு தெற்கு முகமாகப் படையெடுத்தார். ஓராண்டு காலத்திற்குள், செஞ்சிக்கோட்டை, வேலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, ஆரணி மற்றும் கர்நாடகத்தின் ஒரு சிறு பகுதியையும் கைப்பற்றினார். இவ்வாறு தென்னிந்தியாவில் முஸ்லீம் களின் ஆதிக்கத்திற்கு முடிவுகட்டினார். மொத்தத்தில் இவரது ஆட்சியின் கீழ் சுமார் அறுபது லட்சரூபாய் வருட வருமானமுள்ள சுமார் நூறு கோட்டைகள் இருந்தன. மேற்கு கடற்கரை ஓரமான பகுதிகளும், மைசூர் ராஜ்யத்தின் பெரும் பகுதியும், துங்கபத்திரை மாவட்டத்திலுள்ள பெல்லாரியும் மராட்டிய ராஜ்யத்திற்குள் அமைந்திருந்தன. வடக்கே கோல் காப்பூர் வரை சிவாஜி ராஜ்யம் பரவியிருந்தது. இவ்வாறு மாவீரன் சிவாஜி சமயக் கொள்கையாலும் சமூகக் கோட் பாடுகளாலும் தூண்டப்பட்டு ஒரு பெரிய இந்து ராஜ்யத்தை அமைத்து புகழ் பெற்றார். அவருடைய போர் முறையும் அரசின் தந்திரங்களும் பகைவர்களாலும் பாராட்டப்பட்டது. 'மலைஎலி' என்று சிவாஜியை அழைத்த ஔரங்கசீப் 'எலி கடித்தாலும் மரணம் ஏற்படலாம்' என்றார். சிறந்த போர் வீரராக இருந்ததுடன் மட்டுமல்லாமல், தனது ராஜ்யத்தில் சிறப்பான ஆட்சிமுறையை அமைத்து பெரும் புகழ்பெற்றார் சிவாஜி. 1680-ம் ஆண்டு தனது 53-ம் வயதில் காலமானார் சிவாஜி.

**சிவாஜியின் ஆட்சி முறை :**

வரலாற்றில் தோன்றிய நெப்போலியன் போன்ற சிறந்த வீரர்களில் ஒருவராகத் திகழ்பவர் சிவாஜி. போர்வீரராக மட்டுமல்லாமல் திறமையாக ஆட்சி செய்பவராகவும் இருந்தார். பிறப்பிலேயே தலைமைத் தன்மை

வாய்ந்தவராகக் காணப்பட்டார். நாட்டின் படைக்கும் அலுவல்களுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் அவரது திறமைவெளியாயிற்று. எப்போ தும் சிரித்தமுகம்படைத்தவர். மக்களின் குணநலன்களை நிதானித்துக் கண்டுபிடிக்கும் திறமையுடையவர். அவருடைய நிர்வாகமும், நாட்டின் ஆட்சி முறையும் இணையற்ற திறனுடன் விளங்கின. 1. மைய ஆட்சி முறை (அரசர்): சிவாஜியின் அரசு முகலாய அரசைப்போன்றே முடியரசாகும். எல்லா அதிகாரங்களும் சத்ரபதியிடமே குவிந்திருந்தன. ஆட்சிமுறைத் தலைவராக விளங்கியவர் அரசே! மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஆட்சி புரிந்த எதேட்சதிகாரிகளை போலவே விளங்கினார். ஆனால் சிவாஜி மக்களின் வின் நலனை மனதிற்கொண்டு செயலாற்றிய ஒளியூட்டும் வல்லரசராக விளங்கினார். அவர் நினைத்ததெல்லாம் சட்டமாகியது. எல்லா நிர்வாகத் துறைகளையும் தாமே தேரில் கண்காணித்தார். நாடு முழுவதும் செயல்பட்ட வேண்டிய அரசியல் கொள்கைகளை அவரே வகுத்தார்.

**அஸ்டபிரதான்:**

நாட்டின் ஆட்சி முறையை செவ்வனே நடத்துவதற்காக எட்டு அமைச்சர்களைக் கொண்ட அஸ்டபிரதானம் (Ashta Pradhan) என்ற சபை சிவாஜிக்கு உதவியது.இது இப்போது இருக்கும் கேபினட் போன்று அதிகாரமுடையதாக இல்லை. அரசருக்கு அறிவுரை கூறுவதாகவே காணப் பட்டது. எட்டு அமைச்சர்கட்கும் தனித்தனியாக இவாக்காக்கள் கொடுக்கப் பட்டு அவைகளின் செயல்பாடுகள் பற்றி அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. அஸ்டபிரதான அமைச்சர்களின் பணிகள் பின்வருமாறு:

**முதலமைச்சர் பீஷ்வா**

இவருக்கு முக்கிய பிரதானி என்று பெயர். இதர அமைச்சர்களின் அலுவல்களை மேற்பார்வையிடுவதாகவும், அரசர் தலைநகரில் இல்லாத காலங்களில் நிர்வாகத்தை நடத்துவதும் இவரது முக்கிய அலுவல்கள். அரசருடைய முத்திரைக்குக் கீழாக, இவரது பெயர் முத்திரையை வைத்தே அரசர் தலைநகரில் இல்லாத காலங்களில் தபால்கள் அனுப்பப்பட்டது. இவை தவிர நாட்டின் பொதுநலன்களையும் அவற்றின் முன்னேற்றத்தி குரிய வழிகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

**நிதியமைச்சர்: அமாத்தியர்**

நாட்டின் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்த்து கையொப்பம் இடவேண்டியது அமர்த்தியரின் பணியாகும்.

**மந்திரி**

அரசரின் அன்றாட நடவடிக்கைகளையும், அலுவல்களையும் குறித்து வைத்து அப்புத்தகங்களைப் பாதுகாப்பவர் இவரே. அரச சபை நிகழ்ச்சிகளையும் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். அரசர் நடத்தும் விருந்துகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து குறிப்பிட்ட நபர்களை அழைத் தனுப்ப வேண்டும். ஏதேனும் சதித்திட்டங்கள் நடந்தாலும் கண்டுபிடித்து அரசரைக் காப்பாற்ற வேண்டியது மந்திரியின் கடமையாகும்.

**கண்காணிப்பாளர் சச்சீவா:**

இவர் உள்நாட்டு காரியதரிசி என்று அழைக்கப்படுவர். அரசரின் தபால் போக்குவரத்துகளை இவர் கவனித்து வந்தார். தபால் எழுதுவதும் அதில் அரசரின் முத்திரையிடுவதும் இவரது முக்கியப் பணியாகும்.

**அயல்நாட்டுச் செயலாளர்: சுமந்த்**

அயல்நாட்டுக் காரியங்களிலும் போர், சமாதான உடன்படிக்கை கள் செய்வதிலும் அரசுக்கு ஆலோசனை கூறுவதும் இவரது பன்படிக்கை நாட்டுத் தூதுவர்களை வரவேற்பதும் அவர்களை உபசரிப்பதும் அத பலம் வாய்ந்த செயல்களை அறிந்து அவற்றிற்குத் தகுந்த நடவதும் அதிக எடுப்பதும் இவருடைய வேலை.

**தலைமைத் தளபதி : சேனாபதி**

படைக்கு ஆள் எடுத்தல், படையைப் பல பிரிவுகளாக அமைத்தல், படை ஒழுக்கத்தையும் பயிற்சியையும் கண்காணித்தல், யுத்த காலங்களில் படையை போர் முனைக்கு அனுப்புதல் ஆகியவை இவரது பணியாகும்.

பண்டிட்ராவ் தானாதியக்ஷா:

இவர்கள் சமயத்துறை தலைவர்களாக விளங்கினார்கள். மத சம்பந்தமான விழாக்களுக்கு நாட்குறித்தல், மன்னர் கொடுக்கும் தர்மத்தை பிராமணர்கட்கு பகிர்ந்துகொடுத்தல், மக்களின் சன்மார்க்க வாழ்க்கை யைப் பரிசீலித்தல், சமய சன்மார்க்கக் கொள்கைகளை மீறியவர்களுக்குத் தண்டனைகொடுத்தல்ஆகிய அலுவல்களைச் செய்தனர். மத நிறுவனங்கள், படித்த அலுவலர்களின் சொத்துக்கள் ஆகியவற்றைக் கண்காணிப்பது இவர்களது சுடமையாகும். மதக்கொள்கை அடிப்படையில் உண்டாகும் வழக்குகளையும் இவர்களே தீர்க்க வேண்டும்.

**தலைமை நீதிபதி நியாயதீட்சா**

சிவில் கிரிமினல் வழக்குகளையும், சொத்து தகராறுகளையும் விசாரித்துத் தீர்ப்புக் கூறுவது இவரது கடமையாகும்.

இவர்களைத் தவிர வேறுசில பதவிகளிலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு இலாக் காவிற்குப் பொறுப்புள்ளவராக இருந்தனர். இந்த அஸ்டபிரதானம் சிவாஜி முடிசூட்டிக் கொண்டபோது திடீரென அமைக்கப்பட்டதல்ல. மராட்டிய அதிகாரம் வளரவளர ஆரம்ப முதலே படிப்படியாக பல பதவிகள் ஏற்படுத் தப்பட்டு வளர்ந்து வந்தன. நியாய தீட்சாகவும் பண்டிட்ராவும் தவிர இதர எல்லா அமைச்சர்கட்கும் படையை நடத்தி போருக்குச் செல்லவேண்டிய பொறுப்பும் இருந்தது.

**மாகாண அமைப்பு:**

சிவாஜி தனது ராஜ்யத்தை மூன்று மாகாணமாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு அரச பிரதிநிதியையும் நியமித்தார். மாநிலங்களை பர்கானாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு அரச பிரதிநிதியை நியமித்தார். மாநிலங்களைப் பர்கானாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் கலெக்டரின் ஆதிக்கத்தின்கீழ் வைத்தார். அவருடைய பொறுப்பில் ஒரு படையும் இருந்தது. ஒவ்வொரு பர்கானாவும் பல டார்பு(Tarbiகளாகப் 3. சிக்கப்பட்டிருந்தன. இராமம்தான் ஆட்ணாவும் யின் சிறிய பிரிவு ஆகும்

**உழவுத் தொழில் வளர்ச்சி:**

பெரும்பாலும் மலைப்பாங்கான நாட்டில் உழவர்களை ஊக்கு விப்பதற்காக சிவாஜி பல திட்டங்களைத் தீட்டினார். பயிரிடப்படும் நிலங் கள் முழுவதிலும் பயிரிடுமாறு செய்தார். நிலச்சுவான்தார்கட்கு கால்நடை கள் வாங்கவும், விதைகள் வாங்கவும் அரச கருவூலத்திலிருந்து கடனாகப் பணம் கொடுக்கப்பட்டு பின் பல தவணைகளில் அது வசூலிக்கப்பட்டது. இதனால் விவசாயம் விருத்தியடைந்தது.

**நிலவரி வசூல் முறை:**

விவசாயிகளிடமிருந்து நேரடியாக அதிகாரிகள் மூலமாக வ வசூலிக்கும் ரயத்துவாரி முறை பின்பற்றப்பட்டது. நிலங்கள் கவனமாக அளக்கப்பட்ட பின்னரே வரியின் அளவு நிர்ணயிக்கப்பட்டது.உத்தேச விளைச்சலில் முப்பது சதவீதம் அரசாங்க வரியாக வசூலிக்கப்பட்டது. இந்த வரிவிகிதம் பின்னர் 40 சதவீதமாக உயர்ந்தது. வரியைப் பணமாகவோ இ தானியமாகவோ கொடுக்கலாம்.

**இதர வரிகள்:**

மராட்டிய நாடு மலைப்பாங்கான நாடு. எனவே நிலவரியின் மூலம் நாட்டிற்குக் கிடைத்த வருவாய் மொத்த வருமானத்தில் பத்து சதவீதம்தான். எனவே சௌத், சர்தேஷ்முகி என்ற இரண்டு வரிகளை சிவாஜி வசூலித்தார். சௌத் என்ற வரி சிவாஜியினால் வெல்லப்பட்டு அவருக்கு அடங்கியிருந்த பகுதிகளின் நிலவகுமானத்தில் நான்கில் ஒரு பகுதியாக வசூலிக்கப்பட்ட வரியே ஆகும். வெல்லப்பட்ட பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கப்பம் போன்றது இது. Dr. சென் என்பவர் 'இது நெருக்கடி காலத்தில் படைத்தலைவரால் வசூலிக்கப்படும் வரி' என்கிறார். அதாவது ஒரு திருடன் தன்னைத் தாக்காதபடி அவனுக்கு விலை கொடுத்தது போலாகும் இந்த வரி, இந்த வரி அரசு படைத்துறைக்குப் போய் சேர்ந்தது. சர்தேஷ்முகி என்பது 'பரம்பரையாக வந்த மராட்டியர்களின் முக்கியத் தலைவர் (சர்தேஷ்முக்) என்ற முறையில் சிவாஜியின் ஆட்சி முறைக்கு உட்பட்ட பகுதியில் மேலும் பத்து சதவீத வரி வசூலிக்கப்படும் வரியாகும்இந்த வரிகளால் மராட்டியர்கள் தங்கள் ஆட்சிக்கு அப்பாற்ப்பட்டபகுதிகளிலும் உட்பட்ட பகுதிகளிலும் தங்கள்

செல்வாக்கை நிலைப்படுத்தி நாளடைவில் அப்பாற்ப்பட்ட பகுதிகளை தங்கள் ராஜ்யத்துடன் இணைத்துக்கொள்ள வசதி ஏற்பட்டது.

**படை அமைப்பு**:

சிறந்த போர் வீரரான சிவாஜியின் படையமைப்பு போற்றக்கூடிய - ஒன்றாகும். படைமுறையில் பல புதிய சீர்திருத்தங்களைப் புகுத்தி ஒரு நிலையான வலிமைமிக்க படையை ஏற்படுத்தினார். தனது படையை - கட்டுப்பாட்டுடன் தடத்தி சிறந்த ஒழுக்கம் உள்ளனவாகத் திகழச்செய்தார். இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களும் யாதொரு பாகுபாடும் இல்லாமல் சிவாஜியின் நேரடிப் பார்வையிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சம்பளம் ரொக்கப் பணமாகக் கொடுக்கப்பட்டது. வீரநீரச் செயல்கள் புரிந்த படை வீரர்களுக்கு சன்மானம் வழங்கப்பட்டது. சம்பளத்திற்கு பதிலாக போர்வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட வருவாய் மானியத்திற்கு 'சரஞ்சமி முறை (Saranjami System) என்று பெயர். கொள்ளைப் பொருட் களில் வீரர்கட்கும் பங்கு கொடுக்கப்பட்டது. பெண்களோ, அடிமைகளோ, நடனமாதுக்களோ படையுடன் செல்லக்கூடாது. ஒரு படைவீரன் இக்கட்டளையை மீறினால் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. போரில் பசுக்களையும், பெண்டிர்களையும், பிராமணர்களையும் கவர்ந்து வரக்கூடாது. பாக்கிரி, முல்க்கிரி (Bargigiri, Mulkgini) போன்ற கொரில்லாப் போர் முறைகள் படையினரால் கையாளப்பட்டன. சிவாஜியின் படையில் கீழ்க்கண்ட ஐந்து பிரிவுகள் இருந்தன.

**காலாட்படை:**

இதில் அதிகாரிகள் தரவாரியாக நியமிக்கப் பட்டிருந்தார்கள். நாயக் (Nayak) என்பவர் பத்து காலாட்படை வீரர்களின் தலைவர் ஆவார். ஐந்து நாயக்குகளுக்கு ஒரு ஹவில்தாரும் (Havildar) இரண்டு அல்லது மூன்று

ஹவில்தார்களுக்கு ஒரு ஜுமல்தாரும், பத்து ஜுமல்தார்களுக்கு ஒரு ஹசாரி (Hasarilயும் தலைவர்களாக நியமிக்கப் பட்டனர். ஏழு ஹசாரிகள் ஒரு 'சர்இநாபத்' (Sar-i-Nahati என்பவர் தலைமையில் செயல்பட்டனர். மொத்தத்தில் ஒரு லட்சம்பேர் கொண்ட காலாட்படை இருந்தது.

**குதிரைப்படை:**

குதிரைப் படையில் 25 குதிரை வீரர்களைக் கொண்ட பகுதியே குறைந்த அளவு ஆகும். அதற்கு தலைவராக ஒரு ஹவில்தாரும், ஐந்து ஹவில்தாருக்கு மேலாக ஒரு ஜுமல்தாரும், பத்து ஜுமல்தாருக்கு ஒரு ஹசாரியும் இருந்தனர். சுமார் 1,50,000 குதிரைப்படை வீரர்கள் இருந்தனர்.

**கடற்படை:**

மராட்டிய நாடு கடற்கரைப் பகுதியில், ததால், கப்பற்படையின் முக்கியத்துவத்தை சிவாஜி நன்கு உணர்ந்திருந் தார். கொலாபா (Colaba) என்ற இடத்தில் 200 கப்பல்களைக் பெருங்கப்பற்படையை அமைத்தார். இப்படை முதலில் முகலாய கடற்படை கப்பல்களை கொள்ளையிட பயன்பட்டது. இந்த கப்பற்படை வளர்ந்து நாளடைவில் ஐரோப்பியப் படைகளுடன் போர் புரிய பயன் பட்டது. அமைந்திருந் கொண்ட யானைப்படை, ஒட்டகப்படை: சிவாஜியின் படையில் 120 யானைகளைக் கொண்ட ஓர் படையும், 1500 ஓட்டகங்கள் கொண்ட படையும் இருந்தன. ஆனால் இவை சுமை தூக்குவதற்கு மட்டுமே பயன் படுத்தப்பட்டன. மலைப்பிரதேசங்களில் யானைப்படை அதிகமாகப் பயன்பட்டது.

**பீரங்கிப்படை:**

சிவாஜியின் பீரங்கிப்படையும் பலம் வாய்ந்த தாக இருந்தது. அப்படைக்கான ஆயுதங்கள் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கிடைத்தன.

"சிவாஜி எண்பது பீரங்கிகளையும், பொருத்துப் பூட்டுகளுக்கு வேண்டிய காரீயத்தையும், சூரத்திலிருந்த பிரெஞ்சு டைரக்டரிடம் வாங்கினார்" என்று ஓர்ம் (Orme) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**கோட்டைகளின் முக்கியத்துவம்:**

சிவாஜியின் காலத்தில் மலைக்கோட்டைகள் நாட்டின் பாதுகாப் பில் முக்கிய பங்கு வகித்தன. சிவாஜியின் கோட்டைகள் மிகச்சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட படைகளால் பாதுகாக்கப்பட்டு வந்தன. சிவாஜி 240 கோட்டைகளை வைத்திருந்தார் அவற்றின் ராய்கார் கோட்டை மிகச்சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு கோட்டையிலும் போதுமான நீர்வசதி, உணவு வசதி, படைப்பொருட்கள் இருந்தன. ஒவ்வொரு கோட்டையும் ஹல்தார், சப்னி, சரினாபாத் என்ற சம மதிப்புள்ள மூன்று அதிகாரிகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டன. கோட்டையிலுள்ள படையினரிடம் சதித்திட்டங்கள் ஏற்பட்டுவிடாதபடி ஒவ்வொரு கோட்டைப்படியிலும் பல ஜாதிப்பிரிவினரும் இருக்க சிவாஜி வழி செய்திருந்தார்.

**நீதி வழங்குதல்:**

சிவாஜியின் ராஜ்யத்தில் பண்டைக்கால முறையிலேயே பஞ்சாயத் துக்கள் மூலம் நீதி வழங்கப்பட்டது. குற்றவாளிகளை வதைத்து வழக்கு களின் உண்மையை அறிந்தனர். கிரிமினல் வழக்குகள் பட்டேல் (Patell என்ற அதிகாரியினால் விசாரிக்கப்பட்டது. இவர் தற்போதைய தாசில்தார் அந்தஸ்து உடையவர். தலைமை நீதிபதி அப்பில் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு அளித்தார். ஹஜீர்மஜ்ஸில் (Hazir Majjis) என்ற சபைதான் நீதி வழங்கு வதில் எல்லா அதிகாரமும் கொண்ட மன்றமாகும்.

**சிவாஜியின் சமயக் கொள்கை:**

சிவாஜி புராதனக் கொள்கையைக் கொண்ட ஓர் தீவிர இந்துவாக இருந்த போதிலும் மத சகிப்புத் தன்மையுடையவராகவே விளங்கினார். இஸ்லாமியர்கள் விரும்பியபடி கடவுளை வணங்க அனுமதித்தார். மசூதி சட்கு மானியம் அளித்தார். எவ்விதப்பாகுபாடும் இன்றி படைகளிலும் அரசாங்க உயர் பதவிகளிலும் முஸ்லீம்கள் சேர்க்கப்பட்டனர். "அந்தக் காலத்தில் உபத்திரவமடைந்த இந்துக்களுக்கு ஓர்நம்பிக்கையூட்டும் நட்சத் திரமாகவும், அவர்கள் நெற்றியிலிட்ட திலகத்தின் பாதுகாவலராகவும். பிராமணருடைய பாதுகாவலராகவும் சிவாஜி விளங்கினார்' என்று J.N.சர்க்கார் என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**சிவாஜியைப் பற்றிய மதிப்பீடு:**

சிவாஜி ஒரு சிறந்த வீரராகவும் தளபதியாகவும் திகழ்ந்தார். கொரிலாப்போர் முறையிலும், மலைக்கோட்டைகளைக் கட்டுவதிலும் நல்ல திறமை பெற்றிருந்தார். ஔரங்கசீப்பின் பிற்போக்குக் கொள்கையை எதிர்த்தே மராட்டியர்களின் நாட்டை உருவாக்கினார். மராட்டிய நாட்டை உருவாக்குகின்றபொழுது குறுக்கிட்ட தடைகளையெல்லாம் உடைத் தெறிந்தார். இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்று அவரை சமய வெறியராக மாற்றவில்லை. சிவாஜியின் சொந்த வாழ்க்கை மிகவும் தூய்மையானது. அக்கால அரசர்களிடம் காணப்பட்ட ஒழுக்கக்கேட்டை சிவாஜியிடம் பார்க்க முடியாது. கற்றோரை ஆதரிக்கும் பண்பு மிகுதியாக இருந்தது. சிவாஜி தன் மக்களின் நன்மைக்காக கடினமாக உழைத்தார். சிவாஜி திறமை மிக்க பரந்த மனப்பான்மையுள்ள நல்ல நிர்வாகி. சுக்ராச்சாரியார், கௌடில்யர் போன்றவர்களின் வடமொழி நிர்வாக நூல்களில் காணப்பட்ட

கொள்கைகளின்படி அரசாண்டார். ஆனால் போர்களினால் காணப்பட்ட கொள்கைகளின்படி வென்று தமது நாட்டின் எல்லையைப் பெரிதாக்கி னாரே தவிர நிலையான மராட்டிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார் என்று கூறிவிடமுடியாது. இவருடைய காலத்தில் போரினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். தனது 3வது வயதில் வியாதிப்பட்டு 1680 ஏப்ரல் 4-ம் தேதி தனது பிறந்தநாள் அன்றே இறந்தார்.

**சிவாஜிக்குப் பிறகு மராட்டிய பேரரசு**

**சாம்பூஜி -1680-1689**

சிவாஜிக்கு ஷாம்பூஜி, ராஜாராம் என்ற இரு புதல்வர்கள் இருந்தார்கள். சிவாஜி இறந்த பின்பு அவரது இரண்டாவது மகனான ராஜாராமுக்கு அவரது தாய் சோய்ராபாய் (Soyrabail 1680 ஏப்ரனில் பட்டம் சூட்டினார். ஆனால் இந்த சதியை உடைத்து, சோய்ராய்பாய் மற்றும் ராஜாராமை சிறையில் அடைத்து 1681 ஜனவரி 20 ல் பட்டம் சூட்டிக் கொண்டார் சாம்பூஜி.

சாம்பூஜி மிகப்பெரிய வீரர் ஆவார். ஆனால் களியாட்டங்களில் மிகவும் விருப்பமுடையவராக இருந்தார். இவர் கன்னோசியைச் சேர்ந்த கவிகுலஷ் (Kavikutash) என்ற பிராமணரை தனது முக்கிய ஆலோசகராக வைத்துக் கொண்டார். கவிகுலஷின் ஆலோசனையின்படி நடந்து வந்த ஷாம்பூஜி மராட்டிய பேரரசை திறமையுடன் சுட்டிக்காக்கின்ற அக்கரை சிறிதும் இல்லாமல் இருந்தார். இச்சமயத்தில் ஒளரங்காப்பின் நான்காவது மகனான இளவரசர் அக்பர், ஒளரங்கசீப்பிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து மராட்டிய பேரரசில் வந்து தஞ்சமடைந்தார். 1681 ஜூன் 11-ல் ராய்கார் அருகே பாலி என்ற இடத்தில் தங்கவைக்கப்பட்டார். அவரைக் கவனித்துக் கொள்வதற்கு நேதாஜி பால்கர் என்பவரை சாம்பூஜி நியமித்தார். நவம்பர் 23-ல் அக்பரைச் சந்தித்தார்

சாம்பூஜி. ஆனால் ஔரங்கசீப்பிற்கு எதிராக எந்த கூட்டும் செய்து கொள்ளவில்லை. இதற்கிடையில் அக்பரைப் பிடிப்பதற்காக ஷாகேப் உத்தீன்கான் என்பவர் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். சாம்பூஜியின் உதவி கிடைக்காத அக்பர் 1687-ல் ராஜாப்பூரிலிருந்து ஒரு ஆங்கில வணிகக் கப்பலில் ஏறி ஈரானுக்கு தப்பித்து ஓடிவிட்டார்.

1684-ம் ஆண்டிலிருந்தே சாம்பூஜியைப் பிடிப்பதற்காக ஔரங்கசீப் ஒரு படையை அனுப்பிவைத்தார். அப்படையினர் தந்திரமாக சாம்பூஜி தங்கியிருந்த இடத்தைத் தெரிந்து கொண்டனர். சங்கமேஸ்வரம் என்ற இடத்தில் களியாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஷாம்பூஜியும், கவிகுலாஷும் முக்காரப்கான் (Mukarrabkhani என்ற முகலாயதளபதியால் 1689, பிப்ரவரியில் கைது செய்யப்பட்டனர். ஷாம்பூஜி குருடாக்கப்பட்டார். கவிகுலாஷ் நாக்கு வெட்டப்பட்டது. மேலும் பல சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு 1689, மார்ச் 21-ல் இருவரும் கொல்லப்பட்டனர். ஒன்பது ஆண்டு காலமே ஆட்சி புரிந்த சாம்பூஜி பெரிய போர் வீரராக இருந்தாலும் சிறந்த நிர்வாகி இல்லை.திறமையான அதிகாரிகளுக்கு மதிப்பு கொடுக்கவில்லை. தனது தந்தை காலத்தில் இருந்த மந்திரிகளுடன் அடிக்கடி சச்சரில் ஈடுபட்டார். இளவரசர் அக்பர் ஔரங்கசீப்பிற்கு எதிராக கிளர்ச்சி செய்த போது அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை. ஆனால் அவர் கைது செய்யப்பட்டபின் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதால் மராட்டியர்களிடையே புதிய வேகமும், வீரமும் எழுந்தது முகலாய பேரரசுக்கு எதிராக போராட ஒன்று பட்டனர்.

**ராஜாராம் : 1689-1700**

சாம்பூஜி கொல்லப்பட்டவுடன் அவரது சகோதரர் ராஜாராம் சாம்பூஜியின் மகனான ஷாஹீதான் பிரதிநிதியாக ஆட்சி புரியத் தொடங்கினார். 1689 அக்டோபர் மாதம் முகலாயப் படைத்தளபதி கர்பிகர்கான் ராய்க்கார் கோட்டையைக் கைப்பற்றினார். சாம்பூஜியின் மனைவி ஏசுபாய், மகன் ஷாஹி ஆகியோரைக் கைது செய்து டில்லி கொண்டு செல்லப்பட்டனர். ராஜாராம் தப்பித்து செஞ்சிக்கு ஓடிவிட்டார். இதன்பின் முகலாயர்கள் மராட்டியக் கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றினர். மராட்டியப் பேரரசு வீழ்ந்துவிடும் நிலையை அடைந்தது. ஆனால் சிவாஜி ஆட்டிய வீர உணர்வு மராட்டியர்களிடம் அவ்வளவு விரைவாக மறைந்துவிட வில்லை. மராட்டியர்களின் தேசிய உணர்வை இராமச்சந்திர பந்த், சங்கரஜி மால்ஹர், பரசுராம்திரிம்பக் போன்ற தலைவர்கள் தட்டி எழுப்பினர். முகலாயர்களுக் கெதிரான போர் இப்போது மக்கள் போராக மாறியது. மராட்டியர்களை எதிர்த்து கடுமையாகப் போர் புரிந்தனர். மராட்டியத் தளபதிகளான சாந்தாஜி கோர்படே, தானாஜிஜாதவ் ஆகியோர் முகலாயப் பாசறைகளைத் தாக்கி குறையாடினர். சாம்பாஜி தங்கியிருந்த செஞ்சிக் கோட்டையை சுல்பிகர்கான் முற்றுகையிட்டார். ஆனால் சாம்பாஜி தப்பி மராட்டியத்திலுள்ள சதாராவுக்கு ஓடிவிட்டார். பின்னர் தானே மராட்டியப் படைகளுக்குத் தலைமை தாங்கி முகலாயப்படைகளை எதிர்த்து தாக்குதல் நிகழ்த்தினார். ஆனால் திடீரென நோய்வாய்ப்பட்டு 1700 மார்ச் மாதம் 12-ம் தேதி சிமகார் (Simhagarh) என்ற இடத்தில் காலமானார்.

**தாராபாய்:1700-1707**

ராஜாராம் காலமானபிறகு அவரது மனைவி தாராபாய் தனது நான்குவயது மகனுக்கு இரண்டாம் சிவாஜி என்று பட்டம் சூட்டி அவரது பிரதிநிதியாக நாட்டை ஆட்சி புரியலானார். இவரது தலைமையின் கீழ் மராட்டியப்படை வீருகொண்டெழுந்தது. முகலாயப் பகுதிகள் மீது தாக்குதல்கள் தொடுத்தது. மீண்டும் மராட்டியர் வலிமை பெற்றனர். பர்கான்பூர், சூரத், புரேச் போன்ற பகுதிகள் தாக்கப்பட்டன. இதற்கிடையில் 1707-ல் ஔரங்கசீப் இறந்தபிறகு பட்டத்திற்கு வந்த ஆசம்ஷா (முதலாம் பகதூர்ஷா) ஷாஹிவை விடுதலை செய்தார். ஷாகு சதாராவைக் கைப்பற்றிக் கொண்டு 1708-ல் முடிசூட்டிக் கொண்டார். தாராபாய் கோலாப்பூரில் குடியேறி அங்கு ஒரு போட்டி அரசை அமைத்தார். தொடர்ந்து மராட்டியர்களிடையே உள்நாட்டுப் போர் நடைபெற்றது. 1712-ம் ஆண்டிலிருந்து மராட்டிய அரசியலில் பீஷ்வாக்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கினர்

**முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்:**

பேரரசர் ஔரங்கசீப் இறந்த பின்னர் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. அவரது மூத்த மகனான ஷா ஆலம் ஏற்கனவே மகுடப்போட் டிக்கென படைகளை ஆயத்தப்படுத்தி வைத்திருந்ததால் போட்டியில் வெற்றி பெற்று பகதூர்ஷா என்ற பெயரில் பட்டம் சூட்டிக்கெண்டார். இவர் அனுபவமற்றவர். இவரது ஆட்சி சிறிது காலமே நீடித்தது. 1712-ல் பகதூர்ஷா உயிர்நீத்தார். இவருக்குப் பின் வந்த எல்லாம் முகலாய அரசர் களும் போட்டியிட்டே பட்டம் பெற முடிந்தது. அனைவரும் குறுகிய காலங்களே ஆட்சி புரிந்தனர். மகுடப்போட்டி, உள்நாட்டுப்புரட்சி, வெளி நாட்டுப் படையெடுப்பு இவற்றால் அவர்களது ஆட்சி பாதிக்கப்பட்டது. இதனால் முகலாயப் பேரரசு படிப்படியாக

வீழ்ச்சியடைந்து முதலாவது மராட்டியப் பேரரசு ஏற்படுத்தப்படுவதற்கும் பின்னர் ஆங்கிலப் பேரரசு நிறுவப்படுவதற்கும் உதவியது. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு கீழ்க் கண்ட காரணங்களைக் கூறலாம்.

**முகலாயப் பேரரசின் வீழ்ச்சியில் ஔரங்கசீப்பின் பங்கு**

**முகலாயர்கள் அந்நியர் என்ற உணர்ச்சி:**

இஸ்லாமிய மதத்தில் தீவிர பற்றுக் கொண்ட முகலாயர்கள் நீண்ட காலம் இந்தியாவில் வாழ்ந்த போதிலும் தாங்கள் இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ள முன்வரவில்லை. பேரரசர்களும், பிரபுக்களும் இந்திய பழக்கவழக்கங்களையும், மொழிகளையும், கலாச்சாரங்களையும் ஒப்புக் கொள்ள மனமற்று திகைத்தனர். மாறாக பாரசீகத்திலிருந்தும் கெய்ரோவி லிருந்தும் இறக்குமதி செய்தனர். இதனால் இந்தியர்கள் மனதில் 'இஸ் லாமியர்கள் வெளிநாட்டினரே' என்ற உணர்ச்சி ஏற்பட்டது. உள்ளான மனதுடன் இந்தியர்கள் முகலாயப் பேரரசுக்கு ஆதரவளிக்க மனமற்றவர் களாயினர்.

**திறமையற்ற அரசர்கள்:**

ஔரங்கசீப்பிற்கு பின்வந்த அரசர்கள் திறமையற்றவர்கள். பகதூர் ஷா ஓர் வயது முதிர்ந்த கிழவர். அனுபவமற்றவர். நாட்டை திறமையாக ஆளும் கலை அவருக்குப் புதிது. அவருக்குப் பின் வந்த ஜகந்தர்ஷா ஒரு முட்டாளாகவே காட்சியளித்தார். ஓர் ஆண்டுகாலமே ஆட்சி செய்தார். அவருக்குப் பின்வந்த பருக்ஷயர் எல்லா முகலாய அரசர்களையும் விட கோழையாக காணப்பட்டார். இவர்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து சுயநலம் பிடித்த மந்திரிகள் பிரபுக்களின் ஒரு பொம்மையாகவே இருந்தனர். இதனால் நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்து முகலாயப் பேரரசு வீழ்ந்தது.

**முகலாய பிரபுக்களின் கெட்ட பண்பு:**

பைராம்கான் ஆசப்கான் மகபத்கான் அப்துர்ரகீம் மீர்ஜும்வா சாதுல்லாகான் போன்ற முகலாய பிரபுக்கள் அரசியல் ஞானம் கொண்டவர் களாகவும் நேர்மை உள்ளவர்களாகவும். அரசனிடம் விசுவாசம் கொண்ட வர்களாகவும் விளங்கினர். பேரரசின் தூண்களாகக் காணப்பட்டனர். ஆனால் ஔரங்கசீப்பிற்குப் பின்வந்த காலத்தில் முகலாயப் பிரபுக்கள் இழி குணம் படைத்தவர்களாக விளங்கினர். குடியிலும், ஆடம்பர வாழ்க்கை யிலும் மூழ்கினர். அவர்களுடைய வீடுகள் வேசிப்பெண்களால் நிறைந்தி ருந்தது. எனவேதான் திறமையற்ற பேரரசுக்கெதிராக தோன்றிய கிளர்ச்சி களை அடக்க முடியவில்லை. அவர்களுக்குள்ளேயே 'இந்திய சந்ததியினர், அந்நிய சந்ததியினர்' என்ற இரு பிரிவு ஏற்பட்டு, வலிமையிழந்து பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயினர்.

**முகலாயப் படையின் திறமையின்மை:**

முகலாயப்படையின் அமைப்பு பலவீனமுமாய் இருந்தது. ஆப்கானியர்கள், துருக்கியர்கள், பாரசீகர்கள், இந்தியர்கள் ஆகிய பல்வேறு இனத்தவர் இருந்தனர். அவர்கள் வெறும் கூலிப்போர் வீரர்களாயிருந்தனர். அவர்களிடம் நாட்டுப்பற்று காணப்படவில்லை. ரஜபுத்திரர்களை ஔரங்கசீப் பகைத்துக் கொண்டதால் வீரத்தோடு போர்புரியும் சமரச பக்தி கொண்ட ரஜபுத்திரர்கள் முகலாயப்படையில் சேர முன்வரவில்லை. படைத்தலைவர்கள் அரசருக்கு நம்பிக்கை உரியவர்களாகத் திகழவில்லை. இது தவிர படைவீரர்கள் பழைய போர் முறையைப் பின்பற்றினர். புதிய போர் முறைகளில் அவர்கள் பயிற்சி பெறவில்லை.

**மன்சப்தார் முறையின் குறைபாடுகள்**:

முகலாயப் பேரரசின் படையமைப்பு மான்சப்தாரி முறையில் அடிப்படையிலே அமைக்கப்பட்டிருந்தது. இம்முறையின்படி பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் குறிப்பிட்ட அளவு டவீரர்களையும் குதிரைகளையும் வைத்து பராமரிக்க வேண்டும். அதற்கு ஆகும் செலவை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். போர்க்காலங்களில் இக்குதிரைவீரர்களை பேரரசருக்கு உதவியாக அனுப்ப வேண்டும். ஆனால் பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் தங்கள் சுயநலனைக் கருதினவர்களா கவே வாழ்ந்து வந்தனர். அவர்கள் குதிரை வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டு செல்வச் செருக்குடன் பேரரசர்கட்கு விரோதமாகவே வாழ்ந்து வந்தனர். சில சமயங்களில் மான்சப்தாரி தலைவர்கள் ஒன்று சேர்த்து கொண்டு பேரரசருக்கு விரோதமாக புரட்சி செய்தனர். எனவே பேரரசு அழிவுற்றது.

**பொருளாதாரச் சீர்கேடு:**

ராஜா தோடர்மால் என்ற சிறந்த ரஜபுத்திர நிதியமைச்சரின் உதவி யைக் கொண்டு அக்பர் நல்லதொரு பொருளாதார நிலையை அமைத்து வைத்திருந்தார். அவருக்குப் பின்வந்த அரசர்கள் காலத்தில் நிலவரி 1.5 மடங்கு உயர்த்தப்பட்டது. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப் பட்டது. ஜஹாங்கீர் நூர்ஜஹானின் ஆடம்பர வாழ்வுக்கு அடிபணிந்து நாட்டின் செல்வத்தை விரயம் செய்தார். ஷாஜஹானின் அழகிய கட்டிடங் கள் அரசு கருவூலத்தை காலியாக்கியது. ஔரங்கசீப்பின் இடைவிடாத போர்கள் அதை வறட்சியாக்கியது. இவ்வாறு பொருளாதாரநிலை சீர்கேட டைந்தது. அரச கருவூலம் திவாலாவானது, பணவலிமையில்லாத முகலாயப் பேரரசு மிக விரைவில் வீழ்ச்சியடைந்தது.

**லஞ்ச ஊழலும் ஒழுங்கீனமும்:**

முகலாயர் ஆட்சிக் காலத்தில் லஞ்சமும் ஊழலும் பெருத்துவிட் டது. சட்டத்திற்குப் புறம்பாக நன்மைகள் செய்ய அனேக அதிகாரிகள் லஞ்சம் வாங்கினார்கள். பேரரசர்கள் கூட லஞ்சம் வாங்கியதாகச் சொல்லப் படுகிறது. தக்காணத்தில் பணிபுரிந்து வரும் படைத்தலைவரை டில்லிக்கு மாற்றுவதற்கு ஒரு லட்ச ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டது. குபில்கான் என்ற முகலாய அரசவை அங்கத்தினர் ஒருவர் தமது 2.5 ஆண்டு பதவி காலத்தில் பணமாக மாத்திரம் 12 லட்சம் ரூபாய் சம்பாதித்தார். இந்த லஞ்ச ஊழலால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். அதிகாரிகள் தங்கள் சுயநல வைக் கருதி பேரரசின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் நீங்கிழைத்தனர். லஞ்ச மும், ஊழலும் நாட்டை ஆளும் தலைவரிடமும், மந்திரிகளிடமும். அரசாங்க அதிகாரிகளிடமும் காணப்படும் எந்த ஆட்சியும் வீழ்வது நிச்சயம்

**துரிதமான போக்குவரத்து இல்லாமை**:

துரிதமாக போக்குவரத்து இல்லாத அக்காலத்தில் பரந்த முகலாயப் பெரரசை ஒரு குடையின் கீழ் ஆட்சிசெய்வது அரிது. கிளர்ச்சிகள் வர்களின் பொது அச்செய்திகள்தலைநகர் சென்றடைய தாமதமானது. பகைவர்களின் படையெடுப்பைப் பற்றிய செய்திகள் கூட பேரரசருக்குத் தாமதமாகக் கிடைத்தது. படைகளை குறிப்பிட்ட இடங்களுக்கு வேகமாகக் கொண்டு செல்ல இயலவில்லை, கிளர்ச்சி செய்யும் மாகாண கவர்னர்கள், பேரரசின் படைகள் வருவதற்குள்ளாக தங்கள் நாட்டை சுதந்திர நாடாக அறிவித்தனர். இது வீழ்ச்சிக்கு வித்திட்டது.

**கப்பற்படையை கவனியாமை**

முகலாயப் பேரரசர்கள் ஓர் சிறந்த கப்பற்படையை அமைத்து அதை வளர்ப்பதில் அக்கறை செலுத்தவில்லை. மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட இந்தியாவிற்கு கடற்படை தீராத அவசியமானது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இதனால் கடல் வலிமை வாய்ந்த ஐரோப்பிய நாடுகள் மிக எளிதில் தங்கள் ஆதிக்கத்தை இந்தியாவில் ஏற்படுத்த முடிந்தது. இதனால் இங்கிலாந்து வியாபாரத்திலும் அரசியலிலும் தன் நிலையை உயர்த்தி முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

**நாதிர்ஷாவின் படையெடுப்பு:**

பாரசீக அரசரான நாதிர்ஷா 1738-ல் இந்தியாவின் மீது படையெ டுத்து டில்லியைக் கைப்பற்றி இரண்டு ஆண்டுகள் ஆட்சிசெய்தார். தன் நாடு திரும்பும்போது எழுபது கோடி மதிப்புள்ள கொள்ளைப் பொருட்க ளைக் கொண்டு சென்றார். மேலும் உலகப் புகழ் வாய்ந்த 'கோஹினூர்' வைரத்தையும், ஷாஜஹானின் அழகுமிக்க மயிலாசனத்தையும் எடுத்து சென்றுவிட்டார். அவருடைய படையெடுப்பினால் ரத்தக்களரி ஏற்பட் டது. முகலாயப் பேரரசின் வீழ்ச்சியை இது துரிதப்படுத்தியது.

**அகமதுஷா அப்தாலியின் படையெடுப்பு:**

ஆப்கானிய அரசரான அகமதுஷா அப்தாலி, நாதிர்ஷா இறந்த பின்னர், 1748 1750 ஆகிய வருடங்களில் டில்லி மீது படையெடுத்தார். ஆனால் பஞ்சாபிலிருந்த சீக்கியர்கள் இவர் டில்லியை நோக்கிச் செல்வ தற்கு இடையூறாக இருந்தனர். இவருக்கு முகலாய படைத்தலைவர்கள் சிலர் மறைமுக உதவி புரிந்தனர். எனவே பலமுறை வந்து கொள்ளை யடித்துச்

சென்றார். இந்த இருவருடைய படையெடுப்பால் முகலாயப் பேரரசு நிலை குலைந்தது. அது பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமானது.

**பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் வளர்ச்சி:**

ஐரோப்பிய நாடுகளின் வருகை முகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகும். 1600-ல் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனி தனது ஆதிக்கத்தை இந்தியாவில் நிலை நாட்டியது முகலாயப் பேரரார்களிடமிருந்து பல சலுகைகளைப் பெற்றது. தனக்குப் போட்டியாக இருந்தபிற ஐரோப்பிய கம்பெனிகளை தோற்கடித்து விரட்டி யது. இவ்வாறு அரசியலிலும், வியாபாரத்திலும் பிரிட்டன் வேகமாக இந்தியாவில் வளர்ந்தது. 1757-பிளாசிப் போரிலும், 1764-ல் பக்சார் போரி லும் வென்று வங்காளத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர். பின்னர் பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் அவர்கள் ஆதிக்கம் ஏற்பட்டது. கடலா திக்கம் கொண்ட ஆங்கிலேயர். புதிய போர் ஆயுதங்களைக் கையாண்டு. புதிய போர் முறைகளைப் பின்பற்றி தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். இதனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் வளர்ச்சியின் முன்னே முகலாயப் பேரரசு மங்கி மறையலானது.

**முடிவுரை:**

இவ்வாறு பாபரால் 1526-ல் அமைக்கப்பட்ட முகலாயப் பேரரசு அக்பரால் நிலைநிறுத்தப்பட்டு, ஷாஜஹான் காலத்தில் புகழடைந்தது. சுமார் 181 ஆண்டுகள் சிறப்புடன் விளங்கி வந்தது. ஆனால் ஔரங்கசீப்பின் மறைவுக்குப்பின் முகலாயப் பேரரசு மேற்கண்ட பல காரணங்களால் நிலைகுலைந்தது. பேரரசின் வீழ்ச்சி தவிர்க்க இயலாதது ஆகிவிட்டது. 1761-ல் நடந்த மூன்றாம் பானிபட்போர் இந்தியாவில் முகலாயப் பேரர சுக்கு

முற்றுப்புள்ளி வைத்தது. கடைசி முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷா ஆவார்.

**முகலாயரின் ஆட்சி முறை:**

ஒருசிறந்த ஆட்சிமுறையை இந்தியாவில் நிறுவியதற்கான பெருமை அக்பருக்கே உரியதாகும். பாபருக்கு உள்நாட்டு ஆட்சி முறை யை பலப்படுத்த கால அவகாசம் இல்லை. ஹுமாயூனுக்கு அதைச்செய் வதற்கு திறமையில்லை. மிக உயர்ந்த அரசியல் மேதையான அக்பர் முகலாய ஆட்சி முறையை ஒழுங்குபடுத்தினார். அவரது ஆட்சிமுறை இந்தியப் பின்னணியில் அமைந்த பாரசீசு அராபிய முறையாகும். எனவே முகலாய ஆட்சிமுறை என்பது அக்பரின் ஆட்சிமுறையே ஆகும். முகலா யர்களின் ஆட்சி முறையைப் பற்றி அறிவதற்கு அபுல்பாசல் எழுதிய 'அயினி அக்பரி முதாமத்கான் எழுதிய 'இக்பால் நாமா ஜஹாங்கிரி', நிஜாம் உதின் எழுதிய 'துசுக்கி ஜஹாங்கிரி' ஆகிய நூல்களும், வெளிநாட்டினர்களான சர்தாமஸ்ரோ, பெர்னியர், ஹாக்கின்ஸ். மானுக்கி, டெர்ரி ஆகியோரின் பயணக் கட்டுரைகளும் முகலாய ஆட்சி முறையைப்பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றன. முகலாயரின் ஆட்சிமுறையின் முக்கிய அம்சங்கள் விரிவாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அரசர்**

முகலாய ஆட்சி முறையில் அரசரே அரசியல், சமயம் ஆகியவற்றின் தலைவராக இருந்தார். எல்லா அதிகாரங்களும் அவரிடத்தில் குவிக்கப்பட்டிருந்தது. அரசரின் அதிகாரம் அளவில்லாதது. சட்டம் பெரும்பாலும் அவர் வாய்ச்சொல்லேயாகும். அவருடைய விருப்பத்தை எவரும் மறுத்துக் கூற முடியாது. அவரே கடவுளின் கலி்ஃபா. இஸ்லாமிய

மரபுகளையும் இஸ்லாமிய வேத நூல்களையும் அனுசரித்து அவற்றின் விதிகளுக்கு அவர் உடன்பட்டு நடக்க வேண்டும். (அக்பர் இதற்கு விதிவிலக்கு) அமைச்சர் களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வதோ அல்லது தட்டிக்கழிப்பதோ எல்லாம் அரசனின் விருப்பத்தைப் பொறுத்தது. தினமும் மக்களுக்கும் அரசர் தரிசனம் கொடுப்பார். அதற்கு 'ஜரோகாதரிசனம்" (Jharokho-I-Darshan) என்று பெயர். இந்தியாவில் முதல் ஆறு முகலாய அரசர்கள் நல்ல பொது அறிவும் ஆற்றலும் படைத்திருந்தனர். அரசர் எங்காவது பயணம் மேற்கொண்டால் அதனைப் பிரகடனப் படுத்தும் பொருட்டு 'நகரா' (Naggera) என்ற முரசுகளை முழங்குவர். முகலாயப் பேரரசர்கள் சரியான வாரிசுரிமைக் கொள்கையைப் பின்பற்ற வில்லை. எனவே பல வாரிசுரிமைப் போர்கள் ஏற்பட்டது. முகலாய அரசர்கள் தங்கள் பேரரசின் அடித்தளமாக படை பலத்தையே வைத்துக் கொண்டதால் அவர்கள் ஆட்சி வல்லாட்சியாகவே விளங்கியது.

**மத்திய அரசு நிர்வாகம்:**

நிர்வாகம் நடைபெறுவதற்காக மத்திய ஆட்சி முறை பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இத்துறைகளைக் கவனிப்பதற்காக பல அதிகாரிகளை பேரரசர் நியமித்தார்.

- **திவான் அல்லது வாசிர்** இவர்தான் அரசாங்கத்தின் மிக உயர்ந்த அதிகாரியாவார். அரசருக்கும், அதிகாரிகட்கு மிடையே ஓர் இணைப்பு பாலமாகச் செயல்பட்டார். நிதித்துறை இவர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.
- **மீர் பகஷி** இவர் பல வேலைகளைக் கவனித்து வந்தார். முக்கியமாக அரசாங்க அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கும் பொறுப்பு இவருடையது

ஆகும். படைக்கு ஆள் திரட்டுதல், உயர் அதிகாரி களின் பெயர்பட்டியல் தயாரித்தல், போர் நடைபெறும் முன்பு படை துக்கள் முழுப் பெயர்ப்பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளைச் படை வந்தார்.

- **தலைமைக்காஸி** மன்னருக்கு அடுத்த படியாக நித்துறையின் தலைமை நீதிபதியாக பொறுப்பு ஏற்றிருந்தார்.
- **கானிசாமன்** (Khan-I Saman): இவர் அரச குடும்பத்தின் தேவை களைக் கவனித்து வந்தார். அதாவது அரண்மனைத் துறைத் தலைவர் ஆவர்.
- **முஹ்தசீப்** (Muhtasib): இவரது தலைமையில் பொது ஒழுக்கக் கட்டுப்பாட்டுத்துறை அமைக்கப்பட்டிருந்தது. பொது மக்களின் ஒழுக்கத் தைக் கண்காணிப்பதே இவர் வேலை. நபிகள் நாயகத்தின் ஒழுக்க விதி களை நாட்டு மக்கள் பின்பற்றுமாறு கவனித்துக் கொண்டார்
- **தலைமை சதர்** (Chief Sadr): இவர் சமயம் மற்றும் அறநிலைய அமைச்சர் ஆவார். இஸ்லாமியக் கோட்பாடுகளின் பாதுகாவலர் இவரே!
- **தரோகாதாக் சௌகி** (Duroga Dag chaukil: இவர் தபால் போக்குவரத்து மற்றும் உளவுத்துறை தலைவராவார். இவர்கள் தவிர நாணயசாலை தலைவர், தணிக்கைத்துறை அதிகாரி, அரசாங்க தொழிற்சாலை கண்காணிப்பாளர், செய்தி கொண்டு வந்து தரும் செயலர் ஆகிய பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**மாநில அரசு நிர்வாகம்:**

முகலாயப் பேரரசு பரந்ததாக இருந்ததனால் அது பல மாநிலங் களாகப் (Sulas) பிரிக்கப்பட்டிருந்தது. அக்பர் தனது பேரரசை பள்ளிரெண்டு மாநிலங்களாகப் பிரித்திருந்தார். ஔரங்கசீப் காலத்தில் இது 21 ஆக உயர்ந்தது. மாநில ஆட்சி முறை மைய அரசின் மாதிரியாகவே இருந்தது. இந்த

மாநிலங்கள் சுபா என்றழைக்கப் பட்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் சுபேதார் எனப்பட்ட மாநில ஆளுநர் நியமிக்கப்பட்டார். சட்டம், அமைதி. நீதி, பாதுகாப்பு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றிருந்தார். போர்க்காலங்களில் பேரரசருக்குத் துணையாக செல்ல வேண்டியது இவரது கடமையாகும். இவர் கீழ் இருந்த திவான் ஊரியல் மற்றும் வருவாய்த்துறையின் தலைவராவார். இவர் மைய அரசுக்கு மட்டுமே பொறுப்பானவர். 'பக்ஷி' என்பவர் மாநில அளவில் படை வீரர்களைச் சேர்த்தல், பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை மேற் கொண்டார். கொத்தவால் என்பவர் முக்கிய நகரங்களில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டினார். சமூக விரோத சக்திகளை அழிப்பது இவரது கடமையாகும். இவர்கள் தவிர சதர், அமில், பிதிக்ஸி, போட்தார் போன்ற அதிகாரிகளும் இருந்தனர். மாவட்டங்கள் சர்க்கார்கள் என்றழைக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டங்களும் பர்கானாக்கள் என்ற வட்டங்களாகப் பிரிக்கப்பட்டி ருந்தன. நிர்வாக அமைப்பின் கீழ்நிலையான ஊர்களின் நிர்வாகத்தை ஊராட்சி மன்றங்கள் கவனித்து வந்தன.

**சட்டமும் நீதியும்:**

முகலாயர் காலத்தில் சட்டமென்பது ஒன்று இருக்கவில்லை. எழுதி வைக்கப்பட்ட சட்டமுறைகளும் கிடையாது. சமயம் சார்ந்த சட்டங் களே நீதித்துறையின் அடிப்படையாக அமைந்தன. ஜஹாங்கீர் காலத்தில் 12 கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஔரங்கசீப்பின் காலத்தில் முஸ்லீம் சட்டத்தின் சாரமான ஃபாத்வா-இ-ஆலம்கிரி (Fatva-I-Alamgiri} ஒன்று தயாரிக்கப்பட்டது. நீதிபதிகள் குர்ரானின் கட்டளைகள், பாத்வாக்கள் அல்லது மிகச்சிறந்த ஜூரிகளினால் மதச்சட்டத்திற்கு கொடுக்கப்பட்ட விளக்கங்கள், கானுக்கள் அல்லது பேரரர்களின் ஆணைகள் ஆகியவற்றின்

அடிப்படையில்தான் தீர்ப்புகளைக் கூறினர். முகலாய அரசர்கள் விரைவாக நீதி வழங்குவதை தங்கள் முக்கிய கடமையாகக் கருதினார். அரசரே முக்கிய வழக்குகளைத் தீர்மானித்தார். நீதி வழுவாதவர் எனப் புகழ்பெற்றவர் ஜஹாங்கீர். மக்கள் நீதிவேண்டி மன்னரை அணுக காலத்தடை ஏற்படாதிருக்க யமுனை நதிக்கரையில் எழுப்பப்பட்ட ஓர் கற்றூணுக்கும் ஆக்ரா கோட்டைக்குமிடையே 'நீதிச் சங்கிலி' ஒன்றைக் கட்டிவைத்தார். சங்கிலி இழுக்கப்பட்டம் எழும் மணியோசையைக் கொண்டு நீதிநாடி வருவோரின் நிலையைப் புரிந்து கொள்ளும் மன்னர் உடனடியாக நீதி கிடைக்க ஏற்பாடு செய்வார். பொது வாக நீதி வழங்குவதில் மன்னர்கள் நடுநிலையுடன் செயல்பட்டனர். மீர் அர்ஸ் (Mir-Arz) என்ற நீதிபதிகள் பொதுமக்களின் வழக்குகளைப் பெற்று அரசரிடம் சமர்ப்பிப்பர்.

மன்னருக்கு அடுத்தபடியாக தலைமை நீதிபதியாக இருந்தவர் **காஸி உல் காசாத்** ஆவார். அனைத்து முறையீட்டு வழக்குகளையும் இவர் விசாரிப்பார். மாகாண தலைநகரங்களில் நீதிபதி யாக இருந்தவர் காஸி, காஸிகள் நேர்மையாகவும் நீதியாகவும், ஒரு சார்பின்றியும் இருக்கவேண்டும் என்றும், பொது மக்களின் விருந்து மற்றும் விழாக்களில் கலந்து கொள்ளக்கூடாது என்றும் எதிர்பார்க்கப்பட்டது. மு∴ப்திகள் (Muftis) முஸ்லீம் சட்டங்களுக்கு விளக்கம் அளித்தனர். நகர, மாநில நீதிமன்றங்களுக்கும் முகலாயப் பேரரசரே தலைவ ராக இருந்தார். பேரரசரே நீதியின் ஊற்றாகவும், கடைசி முறையீட்டு மன்றமாகவும் விளங்கினார்.

**நில வருவாய்த்துறை அமைப்பு:**

முகலாயர்கள் காலத்தில் விவசாயம் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்தது. எனவே விவசாயத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்

பட்டன. நிலச்சீர்திருத்தங்களில் ஷெர்ஷா பல முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தார். மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நில வரியில் மாற்றங்களைக் கொண்டுவந்தார். அவை, விளைபொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவது, உழுபவர்களின் வாழ்க்கைத் திறனை உயர்த் துவது, அரசின் நிலவருவாயைப் பெருக்குவது என்பதாகும். அவர் விவசா யத்திற்குத் தேவையான நிலங்களை பொதுவான அளவு முறையைக் கொண்டு அளந்து அவைகளை உயர்ந்தது. நடுத்தரமானது, மோசமானது என மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். ஒவ்வொரு வகை நிலத்தின் ஆண்டு உற்பத்தி தீர்மானிக்கப்பட்டது. அதில் 1/3 பங்கு நிலவரியாக நிர்ணயிக்கப் பட்டது. வரியினை விவசாயிகள் பொருளாகவோ, பணமாகவோ செலுத்த அனுமதிக்கப்பட்டனர். இதன் மூலம் விவசாயிகள் இடைத்தரகர்கள் இன்றி அரசுடன் நேரடியாகத் தொடர்புகொண்டனர். இதன் மூலம் ஷெர்ஷா மக்களின் அன்பைப் பெற்றார்.

ஆண்டுதோறும் நிலவரி கணக்கிடுவதில் உள்ள கஷ்டங்களையும் அசௌகர்யங்களையும் நீக்கி புதிய நிலச்சீர்திருத்தங்களை மேற்கொள்ள அக்பர் ராஜாதோடர்மாலை 1582 திவானாக (Diwan+Ashraf) நியமித்தார். அவர் பல நில வருவாய் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். தோடர்மால் பத்து ஆண்டு நிலவருவாய் ஒப்பந்தம்' என்ற முறையினைக் கொண்டு வந்தார். இதன்படி அக்பர் ஆட்சியின் 15-வது ஆண்டு முதல் 24-வது ஆண்டுகளுக்கு இடையே உள்ள பத்து ஆண்டுகளின் சராசரி வருவாயைச் கணக்கில் கொண்டு ஆண்டு களுக்கு தொடர்ந்து ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய நிலவரி நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம் முதலில் அலகாபாத், ஆக்ரா, ஆஜ்மீர்,

மாளவம், டெல்லி, லாகூர் மற்றும் மூல்தான் ஆகிய எட்டு மாநிலங்களில் செயல் படுத்தப்பட்டது.

**இத்திட்டத்தின்கீழ் விவசாயத்திற்குத் தகுதியான நிலங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. அவை:**

- ஆண்டுதோறும் பயிரிடக்கூடிய நிலம் (போலாஜ்
- விளைச்சல் சக்தியை மீண்டும் பெறுவதற்காக உழுது விதைக்காமல் சிறிதுகாலம் விட்டு வைக்கப்படும் நிலம், (பரௌதி-
- மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் உழுது விதைக்கப்படாமல் விட்டுவிடும் நிலம் (சச்சர்- Chachar)
- ஐந்தாண்டுள் அல்லது, அவற்றிற்கு மேலும் பயிரிடப்படாத நிலம், (பாஞ்சார்-Banjar) ஆகியவையாகும்.

பல வகையான பயிர்கள், அதன் பல வகையான நிலப்பிரிவுகள் ஆகியவையின் சராசரி வருமானத்தில் 1/3 பகுதி நிலவரியாகத் தீர்மானிக்க பட்டது. விவசாயிகள் வரியை விளைபொருளாக செலுத்த அனுமதிக்கப்பட்டனர். வரிகளைப் போதுமான கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் வசூலிக்க வேண்டுமென்றும் விளைச்சலில்லாத காலத்தில் அதட்டிக் கேட்கக்கூடாது என்றும் அரசர்கள் வரிவசூல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டி ருந்தனர். வறட்சி மற்றும் பஞ்சகாலங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப் பட்டது.விவசாயிகட்கு 'தக்காலி' கடன் வழங்கப்பட்டு அவர்கள் துயரங் கள் நீக்கப்பட்டன. விளைநிலங்கள், மற்றும் தரிசு நிலங்களில் அதிக உற் பத்தி செய்யும் விவசாயிகட்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு வருவாய்துறை அமைப்பு முகலாயர் காலத்தில் பல சிறப்பு அம்சங்க ளைக் கொண்டு நல்ல முறையில் இயங்கி வந்தது.

**படை அமைப்பு: (மான்சப்தாரி முறை):**

முகலாயப் பேரரசு படை வலிமை என்ற அடித்தளத்தில் அமைக் கப்பட்டது என்பதால் பேரரசர்கள் படை அமைப்பிற்கு அதிக முக்கியத் துவம் கொடுத்தனர். அக்பர் இராணுவத்தினைச் சீர்திருத்தம் செய்வதை தனது முதல் பணியாக மேற்கொண்டார். 1570-ல் அவர் 'மன்சப்தாரி' திட்டத் தினை வெளியிட்டார். அனைத்து இராணுவ அமைப்புகளும் மன்சப்தார் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 'மன்சப்' என்ற சொல் அரேபிய மொழியிலிருந்து வந்ததாகும். இது பதவி, கௌரவம் ஆகியவற்றைக் குறிப்பது ஆகும். எனவே 'மன்சப்தார்' என்பது அரசின் ஒரு பதவியினை யோ அல்லது அதிகாரத்தினையோ குறிப்பதாகும். மன்சப்தார்களை நிய மிக்கும் அதிகாரம் அரசரிடமே இருந்தது.

முகலாயப் பேரரசில் 66 வகையான மான்சப்தார் பதவிநிலைகள் இருந்தாலும் 33 முறைகள் தான் செயல் முறையில் காணப்பட்டன. 10 முதல் இருபது வீரர்களைக் கொண்ட கீழ்நிலை மான்சப்தாரிலிருந்து 5000 வீரர்க ளைக் கொண்ட மன்சப்தார் வரை நிலைகள் உயர்ந்து இருந்தன. 5000 வீரர்க ளுக்கு மேற்பட்ட 'மான்சப்' பதவிகள் அரசால் கௌரவம் அளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் இளவரசர்களுக்கும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மான்சப்தாரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரைகள், யானைகள் மற்றும் வீரர்களை தங்கள் தரத்திற்கு ஏற்ப வைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மான்சப் பிரபுக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட அளவு ஆட்களை படையில் சேர்த்திருக்க வேண்டும் என்பதற்காக,

ஒருவருக்கொருவர் ஆட்களை கடன்கொடுத்து வந்தனர். தெருவில் சுற்றித்திரியும் சோம்பேறி களையும் சேர்த்தனர். எனவே அக்பர் காலத்தில் மான்சப்தார் படைவீரர் பற்றிய விளக்கப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்த மான்சப்தாரிகள் தவிர தாக்கிலிஸ், அகாடிஸ் (Dalchilis, Ahadis) வேறு இருவகையான பிரிவுகளும் இருந்தன. தாக்கிலிஸ் என்பது மான்சப்தார்கள் அதிகாரத்தின் கீழ் வைக்கப் பட்டு அரசாங்கத்தால் சம்பளம் கொடுக்கப்பட்ட துணைத் துருப்புகள் ஆகும். அகாடிஸ் என்பது அக்பர் தனது பேரரசில் நேரிடையாக தனது மெய்க்காப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்ட ஓர் தனிப் பிரிவு ஆகும். இந்த அகாடிஸ் வீரர்கள் சாதாரண வீரர்களைவிட நல்ல ஊதியம் பெற்றார்கள்."

முகலாயப்படை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை குதிரைப்படை, காலாட்படை, பீராங்கிப்படை, கடற்படை ஆகிய வையாகும். வலிமை மிக்க கடற்படை ஒன்றை முகலாயர்கள் அமைக்க வில்லை. முகலாயப்படை சக்தி வாய்ந்ததாக இருப்பினும் அதில் பல குறைகள் இருந்தன. முகலாயப்படை ஒரு தேசியப்படையாக இருக்க வில்லை. காரணம் மான்சப்தார்களுக்கு தனது விருப்பம் போல் போர் வீரர்களை தேர்வு செய்ய உரிமை வழங்கப்பட்டதால், தங்கள் பகுதி, தங்கள் இனம், தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்களையே இராணுவத்திற்குத் தேர்வு செய்தனர். எனவே முகலாய ராணுவம், ஒரே மாதிரியான அமைப்பாக இல்லை. போர் வீரர்கள் தங்களது மான்சப்தார்களையே பேரரசராகக் கருதினார்கள். பேரரசர்களைவிட தங்கள் படைத்தலைவரிடமே அதிக விசுவாசம் காண்பித்தார்கள். போர் வீரர்களுக்கான ஊதியத்தை அரசாங்கம் மன்சப்தார் மூலமே வழங்கியதால் மான்சப்தார்கள் போலியான வருகைக் கணக்கை காண்பித்து அரசை ஏமாற்றினர்.

இவ்வாறு மான்சப்தாரி திட்டம் வெற்றியடையவில்லை. எனவே முகலாயப்படை அதிக எண்ணிக்கை கொண்டதும், நல்ல பயிற்சி இல்லாத தும், நவீன போர்க்கருவிகள் இல்லாததுமாகவே காணப்பட்டது. முகலா யக் குதிரைப் படையில் தாக்கோ மஹல்லி (Dag-o-Mahalli) அல்லது 'தாக்' என அழைக்கப்படும் குதிரைகளுக்கு குறியிடும் வழக்கம் மீண்டும் கொண்டு வரப்பட்டது.

**முகலாயர் காலத்தில் சமுதாய பொருளாதார நிலை பண்பாட்டியல்புகள்**:

முகலாயர் காலத்தில் சமுதாய பொருளாதார நிலை பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு அக்காலத்து வரலாற்று நூல்கள் பெரிதும் உதவு கின்றன. அபுல்பாசல் எழுதிய 'அயினி அக்பர்' அக்பர்நாமா, வெளிநாட்டி னரான பெல்சார்ட் என்பவர் எழுதிய 'ரெமான்ஸ்டிரேட்டி', டி.லேட்ஸ் என்பவர் எழுதிய இந்தியாவின் வர்ணனை, டெவர்னியரின் செய்திகள், மற்றும் சர்தாமஸ்ரோவின் குறிப்புகள் ஆகியவை மூலம் நாம் முகலாய சமுதாய பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்ளலாம்.

**சமுதாயத்தின் பல்வேறு நிலைகள்:**

**மன்னர்:**

முகலாயர் கால சமுதாயம் நிலமானிய அடிப்படையில் அமைக்கப் பட்டிருந்தது. அரசர் இந்த அமைப்பின் உயர் நிலையில் இருந்தார். அரசரின் 'அரசவை' செல்வம் மற்றும் பண்பாட்டின் மையமாக விளங்கியது. அரச வையில் வேலை பார்ப்பது சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தாகக் கருதப்பட் டது, ஒவ்வொரு திறமையான இளைஞனும் அரசரவைப் பணியை விரும்பினான். அரசர்கள் தடையில்லா அதிகாரங்களைக் கொண்டிருந் தனர். அவரிடம் பதவியும் சலுகைகளையும் பெற விழைந்தோர், அரசரைப் போற்றி

புகழ்ந்தனர். மிக உயர்ந்த அன்பளிப்புகள் அளித்தனர். ஔரங்கசீப் தவிர பிற முகலாய அரசர்கள் குடிப்பழக்கத்தில் ஈடுபட்டனர். எல்லா அரசர்களும் 'அந்தப்புரம்' (Harem) வைத்திருந்தனர். அக்பர் அந்தப்புரத்தில் ஐந்தாயிரம் அழகிய பெண்கள் இருந்தனர். அரச விருந்துகள் விலை உயர்ந்த உணவு வகைகளைக் கொண்டிருந்தது. அரசர் கள் விலை உயர்ந்த உடைகள் அணிந்தனர். உல்லாச வாழ்வு, ஆடல், பாடல், விழாக்கள், வேட்டையாடல் அனைத்தும் அரசர்களின் சிறப்புரிமையானது.

**பிரபுக்கள்:**

அரசருக்கு அடுத்த நிலையில் பிரபுக்களும், மான்சப்தார்களும் இருந்தார்கள். இவர்கள் சிறப்பு பதவிகளும், உரிமைகளும் பெற்று மின்புற்றனர். செல்வத்திலும் சுகபோலிகளும், உரிமைகளும் பெற்று மது, மாது இவற்றில் அளவுக்கு மீறிய ஈடுபாடு கொண்டார்கள். அரசாங்கத்தில் உயர் பதவிகளைப் பெற்ற இந்த பிரபுக்கள் சமுதாயத்தில் தோன்றிய பல சீர்கேடு களுக்குக் காரணமானார்கள். தங்கள் இறப்பிற்குப் பிறகு தங்கள் சொத்துக்கள் 'எஸ்சீட்' (Escheat) என்ற சட்டப்படி அரசால் எடுத்துக் கொள்ளப்படுவதால், சம்பாதித்த செல்வம் அனைத்தையும் ஏகபோக வாழ்வில் ஈடுபட்டு செலவு செய்தனர். இந்த ஒழுக்கங்கெட்ட பிரபுக்களின் போட்டிகளும், சதிகளும், தீயபழக்கங்களும் சமுதாய வாழ்க்கையில் பல தீங்குகளை ஏற்படுத்தின.

**நடுத்தர வகுப்பினர்:**

இவர்கள் பிரபுக்களுக்கு அடுத்த நிலையில் இருந்தனர். வணிகர் கள், தொழில் வல்லுநர்கள், சிறிய மன்சப்தார்கள் போன்றோர் நடுத்தர வகுப்பினராக இருந்தனர். இவர்கள் தங்கள் தொழில்களுக்கும், வருமானத் திற்கும் தகுந்தவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் வளமாக

இல்லை. வாழ்க்கை கடினமாக இருந்தது. வியாபாரிகள் எங்கே தங்கள் செல்வம் வெளிப்படையாகத் தெரிந்து கவர்னர்களால் கைப்பற்றப் பட்டுவிடுமோ என்று பயந்து மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். தங்கள் செல்வத்தை மறைத்து வைத்தனர்.

**கீழ்மட்ட மக்கள்**:

விவசாயிகள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள், பணியாட்கள், " அடிமைகள் ஆகியோர் சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் உழன்றனர். அவர்கள் வாழ்க்கை மிகக்கடினமாக இருந்தது. அவர்கள் உடுப்பதற்கு உடையில்லா மலும், குளிர் காலங்களில் கம்பளி, செருப்பு இல்லாமலும் அவதியுற்றனர். - அவர்களின் தேவைகள் மிகக் குறைந்தவையாக இருந்ததினால் சாதாரண உணவுக்கு அவ்வளவாகக் கஷ்டப்படவில்லை. ஆனால் பஞ்சம், பற்றாகக் குறை ஏற்பட்ட காலங்களில் கடுந்துன்பமடைந்தனர். அவர்கள் வீடுகள் மண்ணால் கட்டப்பட்டு மேல்பகுதி கீற்றினால் வேயப்பட்டிருந்தது. தொழிலாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் கூலி குறைவா கவே கிடைத்தது. அப்பாவித் தொழிலாளிகள் முதலாளிகளால் நசுக்கப்பட்டனர். சில சமுதாயப் பழக்கவழக்கங்களும் நடைமுறைகளும்: சமுதாயத்தில் உடன்கட்டை ஏறுதல், பாலியவிவாகம், வரதட் சணை போன்ற சீர்கேடுகள் காணப்பட்டன. புனிதத்தலங்களில் வழிபடு வது புண்ணியத்தைக் கொடுக்கும் என்று நம்பினர். கங்கையில் குளித்தால் அதன் புண்ணியத் தன்மையால் பாவங்கள் தீரும் என்று நம்பினர். மெக்கா பயணம் முஸ்லீம்களின் புனிதப் பயணமானது. ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கானோர் அப்பயணத்தை மேற்கொண்டனர். பிறப்பு மட்டுமே சாதி யின் நிலையை நிர்ணயித்தது. கலப்புமணம் தடை செய்யப்பட்டிருந்தது. இந்துக்கள் ஹோலி, வசந்தபஞ்சமி,

தீபாவளி, சிவராத்திரி. சங்கராந்தி போன்ற விழாக்களை கோலாகலமாகக் கொண்டாடினர். முஸ்லீம்கள், முகரம், மிலாடிநபி, ரம்ஜான், இதுல்சுகா போன்ற விழாக் களை விரும்பி கொண்டாடினர். முஸ்லீம்களில் ஷியா பிரிவினருக்கும். சன்னி பிரிவினருக்கும் வெறுப்புத் தன்மை நிலவியது. வேட்டையாடுதல், நீச்சலடித்தல் முகலாய அரசர்களின் விளை யாட்டுகளாக இருந்தன. விலங்குப் போர் ஓர் வீர விளையாட்டாக கருதப் பட்டது. எருமைகள், யானைகள், பறவைகள் சண்டைகள் நாட்டில் பரவ லாகக் காணப்பட்டது. மற்போர், போலோ விளையாட்டு, புறாக்களை பறக்கவிடுதல் ஆகிய பொழுதுபோக்கு விளையாட்டுகள் காணப்பட்டன. அரச குடும்பத்தினரும், பிரபுக்களும் ஆடம்பர ஆடைகளையே V அணிந்தனர். பெரிய அங்கிகள், இறுக்கமான கால்ச்சட்டைகள், தலைப் பாகை, குல்லா ஆகியவைகள் அணிந்தனர். எளிய மக்கள் வேஷ்டி மட்டுமே அணிந்தனர். ஏழைப் பெண்கள் எளிய சேலைகள் அணிந்தனர். முஸ்லீம்கள் பைஜாமாவும், குர்தாவும் அணிந்தனர். தங்கம் மற்றும் உலோகத்தினால் செய்யப்பட்ட ஆபரணங்கள் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களினால் அணியப்பட்டன. பிச்சை எடுப்பது பரவலாகக் காணப்பட்டது.

**பொருளாதார நிலை**

**நகரங்கள்:**

மாபெரும் முகலாய அரசர்களின் காலத்தில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் சியவை செழிப்பும் கொழித்திருந்தன. ஆக்ரா, ஃபதேபூர் மிகப்பெரிய நகரங்களாகும். மிக அதிகமான ஜனநெருக்கம் கொண்டவை. .இந்த இரண்டு நகரங்களுக்குமிடையே வழிநெடுககடைகள் இருந்தன. பஞ்சாப் மிகப்பெரிய மாகாணம், லாகூர் அதன் தலைநகர். இந்த மாயைம். பொருள்

தாரத்தி மும், மேலும் சாந்தேஷிலிருந்தாபணிபத்திலும் சால்வை மந்த அகமதாபாத், கிழக்கு இந்தியாவிலிருந்த ராஜ்மகால், பந்தலிருந்த வாரனாசி, பாட்னா, ஹுக்ளி, டாக்கா, சிட்டகாங் ஆகிய நகரங்கள் செல்வச் செழிப்புடன் விளங்கியது.

**போக்குவரத்து சாதனங்கள்:**

முகலாய அரசில் போக்குவரத்து சாதனங்கள் விஞ்ஞான ரீதியில் அமைக்கப்படவில்லை. ஒருசில நெடுஞ்சாலைகள் தவிர மற்ற பாதைகள் அனைத்தும் கப்பியிடப்படாதவையாக இருந்தன. எனினும் உள்நாட்டுப் பயணத்தின் முக்கிய வழிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன. நெடுஞ்சாலைகளின் நெடுகவே மரங்கள் நட்டப்பட்டிருந்தது. பயணிகள் * இளைப்பாறுவதற்காக 'சாராய்கள்' கட்டிவிடப்பட்டிருந்தன. ஒருசில ஆறு களில் போக்குவரத்து நடைபெற்றது. ஷெர்ஷா பல பெரிய சாலைகளையும் செய்திப் போக்குவரத்தையும் ஏற்படுத்தினார். முகலாயர் காலத்தில் பல பாலங்கள், நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டன. இவைகளால் மக்களுக்கு அளவில்லா நன்மை ஏற்பட்டது.

**விவசாயம்:**

மக்களின் முக்கியத் தொழில் விவசாயமே. தற்காலத்தைப் போல் அக்காலத்திலும் குறிப்பிட்ட நிலங்களில் குறிப்பிட்ட பயிர்களை விளைவிக்கும் முறை கையாளப்பட்டு வந்தது. உணவு உற்பத்தியில் சிறந்த அறிவும், தேர்ச்சியும் பெற்றவர்களையும், தொழில் நுணுக்கம் தெரிந்தவர் களையும், அக்பர் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வேளாண்மையை யும், மற்ற தொழில்களையும் வளப்படுத்தினார். அரிசி, கோதுமை, பார்லி ஆகியவை முக்கிய விளைபொருட்கள். நாட்டின் சில பகுதிகளில் பருத்தியும், கரும்பும்

பயிரிடப்பட்டன. உழவுக் கருவிகள் பயன்படுத்தப் பட்டன. ஆனாலும் செயற்கை நீர்ப்பாசன முறைகள் இருக்கவில்லை. நாட்டில் தக்க பருவங்களில் அடிக்கடி மழை பெய்யவில்லையாதலால் குடியானவர்கள் பெருந்துன்பமடைந்தனர்.

**தொழில்கள்:**

அக்காலத்தில் மக்கள் பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டிருந் தனர். பருத்தித்துணி உற்பத்தி மிக முக்கியமான தொழிலாக இருந்தது. மிக உயர்ந்த ரகப்பருத்தி பாட்னா, குஜரத், ஜான்பூர், வாரணாசி, பீகார், வங்கா ளம் ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டது. டாக்கா மாவட்டத்தில் மிக நுட்பமான மஸ்லீன் துணி நெய்யப்பட்டது. பட்டு நெசவுத்தொழில் லாகூர், ஆக்ரா, பதேபூர் சிக்ரி ஆகிய இடங்களில் நடைபெற்றது. சால்வை, கம்பளம் இவற்றை செய்யும் தொழில்களுக்கு அக்பர் பெரும் ஆதரவு அளித்தார். சாயத் தொழிலும் செழித்தோங்கி வளர்ந்தது. பல்வேறு வகை யான அழகிய வண்ணமும் உருவமும் அமைந்த பூக்கள் அல்லது வடிவங் கள் துணிகளில் அச்சடிக்கப்பட்டன. கப்பல் கட்டும் தொழிலும் ஓரளவு மேற்கொள்ளப்பட்டது.

இவை தவிர முகலாயர் காலத்தில் பல்வேறு கைத்தொழில்களும் இருந்தன. பல வியப்பான பெட்டிகள், இரும்புப் பெட்டிகள், பேனா உறைகள் அலங்கரிக்கப்பட்ட தட்டுகள், பலவகையான எழுதும் பொருட் கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவை மிகவும் அழகு வாய்ந்தனவையாக இருந்தன. பொருட்களின் விலை பொதுவாக குறைவாகவே இருந்தது. குறிப்பாக எல்லோராலும் பயன்படுத்தப்படும் பொதுப் பொருள்களான அரிசி, காய்கறிகள், வாசனைப் பொருட்கள், இறைச்சி, பால் போன்ற பொருட்களின் விலை குறைவாக இருந்ததாக அபுல்பாசல் குறிப்பிடுகிறார்.

**பஞ்சம்:**

முகலாயர் காலத்தில் பஞ்சம் பல முறை ஏற்பட்டது. பஞ்சத்தினா லும் பஞ்சத்தையொட்டி ஏற்பட்ட கொள்ளை நோய்களினாலும் பலர் உயிர் துறந்தனர். 1556-57-ல் ஆக்ராவுக்கும் பியானாவுக்கும் அருகே பஞ்சம் ஏற்பட்டது. இந்தியாவில் வளம்வாய்ந்த பகுதியான குஜரத்தில் 1573-74-ல் பஞ்சமும் கொள்ளை நோயும் தோன்றின. வீதிகளிலும், பாதைகளிலும் இறந்தவர்களின் பிணங்கள் கிடந்தன. 1630-32-ல் இதேமாதிரியான பஞ்சம் தக்காணத்தில் ஏற்பட்டது. ஷாஜஹான் அளித்த நிவாரண உதவி பட்டினி கிடந்து சாகும் மக்களின் துன்பத்தைக் குறைக்கப் போதுமானதாக இல்லை. மேலும் முகலாயர்கள் காலத்தில் அரசு பஞ்ச நிவாரணத்திட்டங்களும் ஒழுங்கான, நீண்டகால முயற்சிகளும் செய்யவில்லை.

**வர்த்தகமும் வாணிகமும் (வெளிநாட்டு வாணிபம்):**

முகலாயர் காலத்தில் பெரும்பகுதியில் இந்திய நாடு ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் தீவிரமான அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டு வந்தது. சுங்கவரி அதிகம் இன்மையால் வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் எளிதாக இந்தியாவிற்கு வந்து குவித்தன. தங்கத்தகடுகள் பவனம், பங்காகி பாத்தன், வெல்வெட்டுக குவிந்தன. தங்கத்தகடுகள். மருந்து, பீங்கான் பாத்திரங்கள் ஆகியவை முக்கிய இறக்குமதி செகள் பட்ட பொருட்களாகும். பல்வேறு நெசவுத் துணிகள், மிளகு, அவுரி, ஆட்டு உரோமம், அபினி ஆகியவற்றை இந்தியா ஏற்றுமதி செய்தது. சூரத் புரோச் காம்பே, பஸ்ஸீன், கோவா, காவா, கள்ளிக்கோட்டை, கொச்சி, நாகப் பட்டினம் ஆகியவை இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களாகும்.

இந்திய வாணிபத்தில் ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் அரசாங்க கஜானாவை நிரப்பியது. ஆனால் ஔரங்கசீப் காலத்திற்குப் பிறகு இந்தியாவின் பொருளாதாரமும், வாணிபமும் சீர்குலையத் தொடங்கியது.

**முகலாயர் கால பண்பாட்டியல்புகள்**

**கல்வி**

தற்காலத்தில் நிலவும் கல்விமுறை போல முகலாயர் காலத்தில் கல்வித்திட்டம் அமையவில்லை. இருந்தாலும் ஆரம்பக் கல்விக்கும். உயர் நிலைக்கல்விக்கும் ஓரளவு கவனம் செலுத்தப்பட்டது. முகலாய அரசர்கள் மகுதிகளுக்கும் மடங்களுக்கும் நிலம் அளித்ததோடு பணமும் கொடுத்து கல்விக்கு பெரும் ஊக்கம் அளித்தனர். முகலாயர்கள் காலத்தில் மசூதிகள் கல்வி நிலையங்களாகப் (மக்தப்புகள்) பணியாற்றின. அங்கே அப்பகுதி யைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் ஆரம்பக் கல்வி கற்றனர். நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் இருக்கும் மாணவர்கட்கு இந்து, சமஸ்கிருத, இந்திய மொழிப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன. முகலாய அரசர் பலர் கல்விக்கு பெரும் ஆதரவு தந்தனர். ஹுமாயூன் கல்வியில் பெரும் விருப்பம் கொண்டிருந்தார். பூகோளமும் வானசாஸ்திரமும் அவரது விருப்பமான பாடங்கள் ஆகும். டெல்லியில் ஒரு கல்விக்கூடம் (மதராசா) கட்ட ஏற்பாடு செய்தார். ஷெர்ஷா புராணா ஹில் லாவில்தான் கட்டிய இன்ப மாளிகை ஒன்றை நூலகமாக மாற்றினார். அக்பர் காலத்தில் கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தமே ஆரம்பித்தது. பதேபூர் சிக்ரி, ஆக்ரா ஆகிய இடங்களில் கல்லூரிகளைக் கட்டினார். முஸ்லீம் கல்வி முறையில் அபிவிருத்தி செய்வதற்காக பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜஹாங்கீர்

கல்வியில் ஓரளவு ஆர்வம் கொண்டிருந்தார். துருக்கி மொழியில் நல்ல அறிவு பெற்றிருந்தார். பாழடைந்த மதராசாக்கள் இவருடைய காலத்தில் பழுதுபார்க்கப்பட்டு மாணவர்களையும், பேராசிரி யர்களையும் அமரச் செய்தார். ஷாஜஹான் காலத்தில் மாணவர்களுக்கு உதவித்தொகையும், பரிசுகளும் கொடுத்து கல்விக்கு ஊக்கமளிக்கப் பட்டது. டில்லியில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டது.

பல ஆண்டுகளாக பாழடைந்து கிடந்த தாருல்பகா (Darul Baga) என்றழைக்கப்பட்ட கல்லூர் யைப் பழுது பார்த்தார். ஷாஜஹானின் மகன் தாராஷிக்கோ (Darahuko) மிகப்பெரிய அறிஞர் ஆவார். அராபிய மொழி, பாரசீக மொழி, வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். பல புத்தகங்கள் எழுதியதுடன் உபநிடதங்கள், பகவத்கீதை, வசிஷ்ட ராமாயணம் ஆகியவற்றை மொழி பெயர்த்துள்ளார். அவர் முஸ்லீம் மகான்களின் வரலாற்றைத் தொகுத்த தோடு சுஃபி தத்துவத்தைக் குறித்தும் பல நூல்கள் எழுதியுள்ளார். முகலாயர் காலத்தில் பெண் கல்விக்கு கவனம் செலுத்தப்பட்டது. அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்களும், பெரும் செல்வந்தர்களின் பெண்களும் தங்கள் வீடுகளிலே கல்வி கற்றனர். அக்காலத்தில் பள்ளிக் கூடங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே பயின்றனர். அக்காலத்தில் பல பெண்கள் புனித நூல்களிலும், இலக்கியங்களும் ஆழ்ந்த அறிவு படைத்திருந்தனர். பாபரின் மகள் குல்தன் பேசும் 'ஹுமாயூன் நாமா' என்ற நூலை எழுதினார். நூர்ஜஹான், மும்தாஜ்மஹால், ஜஹானாராபேகம், ஜெபுன்னிசா ஆகியோர் பாரசீக அரபு இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தனர். ஔரங்கசீப்பின் மகள் ஜெபுன்னிசா (Jeb-un-Nisa) கையெ ழுத்துக் கலையில் வல்லவராக இருந்தார். அவரிடம் ஒரு நல்ல நூல் நிலையம் இருந்தது.

**இலக்கியம்**

முகலாயர்காலம் இந்திய இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலம் என்று கூறலாம். முகலாயர் கால நீண்ட ஆட்சியில் இலக்கியங்கள் மகத்தான வளர்ச்சியடைந்தன. பாரசீக, இந்திய மொழி இலக்கியங்கள் கற்பனை உலகை வளப்படுத்தின. இந்தி, உருது, பாரசீகம், துருக்கி போன்ற மொழிகளின் வல்லுநர்கள் மற்றும் முகலாயப் பேரரசர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் உதவினர். அவைகளை விரிவாகக் காணலாம். முகலாயப் பேரரசை, ஏற்படுத்திய பாபர் பல மொழிகளில் திறமை படைத்த ஒரு எழுத்தாளரும் ஆவார். அராபிய, பாரசீக, துருக்கிய மொழி களில் புலமை பெற்றிருந்தார். துருக்கிய மொழியில் அவர் எழுதிய 'நினை வுக் குறிப்புகள்' (Memoirs) மிகச்சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது. ஆசியாவின் ஒரே ஒரு உண்மையான வரலாறு' என்று இந்த நூலைப்பற்றி எல்பின்ஸ்டன் புகழ்கிறார். ஹுமாயூன் காலத்தில் குதமீர், அடுல்லத்தீப், சேக்ஹசன் போன்ற இலக்கிய அறிஞர்கள் இருந்தனர். மன்னரின் சகோதரி குல்பதன்பேகம் 'ஹுமாயூன் நாமா' என்ற நூலை இயற்றினார். ஜாஹர் (Jauhar) என்பவர் 'தஸ்கிரத்-உல்-வாகியத்' என்ற நூலை எழுதினார். இந்து முஸ்லீம் கலை இலக்கியத்திற்கு அக்பரின் காலத்தை பொற் காலம் என்று கூறலனது. அவரது காலம் இங்கில அதிபரின் காலத்தை பொற்று + காலத்திற்கு ஒப்பானது. எலிசபெத் காலம் ஆங்கில மொழியின் எழுத்தாளர் களும், கவிஞர்களும் புகழ் சேர்த்த மறுமலர்ச்சிக் காலமாகும். எது போலவே அக்பரின் காலமும் இந்து முஸ்லீம் இலக்கிய வல்லுநர்களால் பல அரிய நூல்கள் எழுதப்பட்டகாலமாகும். இவர்கால பாரசீக இலக்கியத் தொகுப்புகளை மூன்று பிரிவாகப் பிரித்து படிக்கலாம்:

## வரலாற்று நூல்கள் மொழி பெயர்ப்புகள்

- வரலாற்று நூல்கள்: அக்பரின் காலத்தில் அபுல்பாசல் (Abul Fazal) என்பவர் சிறந்த இலக்கிய மேதையாகத் திகழ்ந்தார். திறந்த மொழி அறிவு டைத்தவர். வரலாற்றில் ஆராய்ச்சி மிக்கவர். இவரது முக்கிய நூல்களான யினி அக்பரி, அக்பர் நாமா (Ain-I, Akbari, Akbarnamal அக்பரின் ஆட்சி முறையைப் பற்றியும் சமுதாய பொருளாதார நிலை பற்றியும் அக்பரின் அ வெற்றிகள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இவரது சகோதரரான அபுல் பெய்சி (Abul Faizi) அராபிய இலக்கியத்தில் சிறந்த அறிஞர் ஆவார். இவர் 101 புத்தகங்கள் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பல சமஸ்கிருத புத்தகங்களைப் பெர்சிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார். ராமாய ணம், மகாபாரதம், கீதை ஆகியவற்றை மொழி பெயர்த்தவரும் இவரே. மேலும் இவர் எழுதியவைகளில் முக்கியமானது 'மாஸ்நாவி "தாலா ஓ-டாமன்' ஆகியவையாகும். இவரது கவிதைகள் கவர்ச்சியும் இனிமை யும் கொண்டவை.

- நிஸாம்-உத்-தீன் என்பவர் எழுதிய தபாகாத்-இ-அக்பரி (Tabakat- Akbari), முல்லா தாவூத் எழுதிய தாரிகி அல்ஃபி (Tark-I-Alfi), பெய்சி சர்ஹிந்த் எழுதிய அக்பர் நாமா, அப்துல்பாகி எழுதிய 'மா-ஆசீர்-இரகமி ஆகியவை அக்பர் காலத்தில் எழுதப்பட்ட சிறந்த வரலாற்று நூல்களாகும்.
- மொழி பெயர்ப்புகள்: பேரரசரின் உத்தரவின்படி பல நூல்கள் சமஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன. மகாபாரதம் பல - அறிஞர்களால் பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, தொகுக்கப்பட்டு 'ரஜ்ம் நாமா' என்று பெயரிடப்பட்டது. பதௌனி ராமாயணத்தை மொழி

பெயர்த்தார். ஹாஜி இப்ராஹிம் சர்ஹிந்தி என்பவர் அதர்வண வேதத்தை பாரசீகத்தில் மொழி பெயர்த்தார். அபுல்பெய்சி கணக்கு நூலான லீலா விதியை மொழி பெயர்த்தார். முகமல்கான் தஜக் (Tazak) என்ற வான இயல் நூலை பாரசீகத்தில் மொழி பெயர்த்தார். அப்துர்ரஹீம்கானிகான் வாகியாத் 4 இ- பாபரி என்ற நூலை மொழி பெயர்த்தார். ஒரு சில கிரேக்க அராபிய நூல்களும் பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன.

